கலை
மார்ச். 61 .... விலை 75 காசு
ராகவன் புரொடக்‌ஷன்ஸ்
சபாஷ் மாப்பிளே!
ஒளிப்பதிவு · கதைவசனம் · சங்கீதம்
P. ராஜகோபால் · K.V. மஹாதேவன்
S. ராகவன்

Rem
BALU BR

சென்னை சாந்தி, (ஏர்கண்டிஷன்) ஸ்ரீகிருஷ்ணா, ராக்ஸி

மற்றும் தென்னாடெங்கும்

மார்ச் 16 முதல்

புத்தா பிக்சர்ஸ்

பாவ மன்னிப்பு

பாடல்கள்·கவிஞர் கண்ணதாசன்· இசை அமைப்பு·விஸ்வநாதன்·ராமமூர்த்தி

வசனம்·M.S.சோலைமலை

திரைக்கதை, டைரக்‌ஷன்
A.பீம்சிங்

BUDDHA PICTURES

ஸ்டூடியோ
ஏவி எம்

சிறுவர்கள் முகம் மலர சிறந்த பரிசு....

Nutrine மிட்டாய்கள்

நியூட்ரைன் கன்பெக்ஷனரி கம்பெனி
பிரைவேட் லிமிடெட்
சித்தூர், ஆந்திர பிரதேசம்.

வெளியிடுவோர்
ஓவியன் அ. பாலு

கலை

ஆசிரியர்
ஓவியன் அ. சீனு

தூரிகை : 3] [சித்திரம் : 9

சார்வரி - பங்குனி, மார்ச் '61

பொருள் அடக்கம் :

கட்டுப்பாடு வேண்டும்—
தலையங்கம்

மாணிக்கத் தமிழிற்கு
மணி விழா எடுக்க வாரீர்
— துணைத் தலையங்கம்

கைரேகை :
குலதெய்வம் ராஜகோபால்

சந்திப்பு :
நடிகவேள் எம். ஆர். ராதா

இயற்கை வண்ணப் படங்கள் :
பானுமதி
- புகைப்படம் நாகராஜ ராவ்
நாஸ்—புகைப்படம்
Dr. Bernard Coelho B.SC., M.B.B.S.
(Trivandrum)

கட்டுரைகள் :
கலைக் கதம்பம் பத்து
சினிமா வளர்ந்த விதம்
அழியா உயிரோவியம்
இந்திய நூல் நிலையங்கள்

கதை :
அதிர்ச்சி அடைந்த அழகி

'கலை'யில் வரு[illegible] [illegible]த. கட்டுரை ஆகியவற்றில் வரும் பெயர்கள், நிகழ்ச்சிகள் யாவும் கற்பனையே. இதில் வரும் கதை, கட்டுரைகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.





மக்களுக்குத் தேவை.

1. நேரத்தை வீணாக்காமை
2. விடாமுயற்சி
3. வேலையில் விருப்பம்
4. எளிமையிலும் பெருந்தன்மை
5. நல்ல பண்பு
6. தொண்டு உள்ளம்
7. வழிகாட்டும் தன்மை
8. கடமையில் தவறாமை
9. செல்வத்தைப் பாதுகாத்தல்
10. பொறுமை
11. திறமையைப் பெருக்கும் முயற்சி
12. தானே தனித்து இயங்கும் ஆற்றல்

எப்பொருள் யார் யார்
வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்
பொருள் காண்பதறிவு

அன்னையும் பிதாவும்
முன்னறி தெய்வம்
லோகா அமிர்தம்
எங்கள் தெய்வம்

கட்டுப்பாடு வேண்டும்!

இந்தியா ஒரு ஏழை நாடு. அதிலும் உலகத்திலேயே மக்கள் சீனத்திற்கு அடுத்ததாக மக்கள் தொகையில் மிகுந்த நாடு. போதாக்குறைக்கு அன்னிய ஏகாதிபத்தியம் ஒன்றினால் உறிஞ்சப் பட்டு வெறும் சக்கையாக விடப்பட்ட பின்தங்கிய நாடு. அப்படிப்பட்ட நாட்டில் முன்னேற்றம் காணவேண்டுமென்றால் நாலைந்து அதிகாரிகள் கூடிக்கொண்டு வெறும் ஏட்டுத் திட்டங் களைத் தீட்டி விட்டால் மட்டும் போதாது. அதற்கு ஏற்ற வகை யில் நாட்டு மக்களையும் திருத்தி அமைத்தாக வேண்டும்.

இன்று இந்த ஏழை இந்தியா ஒரு மிகப்பெரிய போரிலேயே ஈடுபட்டுள்ளது. பகைவனோ பலம் பொருந்திய 'பிற்போக்கு' என் னும் அரக்கன். அவனிடம் வறுமை என்ற அணுகுண்டுகள் இருக் கின்றன. அதைவிடப் பயங்கரமான அறியாமை என்கிற ஹைட் ரஜன் குண்டுகள் இருக்கின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக அந்த பிற்போக்குக் கொடியவனிடம் பிணி என்கின்ற ராக்கெட்டுக்கள் இருக்கின்றன.

இப்படிப்பட்ட பலம் வாய்ந்த எதிரியை எதிர்க்கும்பொழுது நாட்டு மக்கள் அனைவரும் தம்முடைய சொந்த நலனைக்கூட பொது நலனிற்காகத் தியாகம் செய்யும் தியாகசீலர்களாக மாறுதல் வேண்டும். அதற்கு ஏற்ற வகையில் அரசாங்கமும் திட்டமிடப் பட்ட முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ள எதையும் கட்டுப் பாடோடு தடை செய்து விடவேண்டும்.

எடுத்துக்காட்டாக இன்று ஏழை இந்தியாவிற்கு-வெளி நாட்டுச் செலாவணியில் மிக இக்கட்டான நிலையில் இருக்கும்

பாரதத்திற்கு அரண்மனை போன்ற ஆடம்பரக்கார்கள் வேண்டாம். போக்குவரத்து தேவைக்குப் போதுமான சிறிய கார்கள் மட்டுமே இருந்தால் போதும்.

எனவேதான் ஏழை எளியவர்களைக் காப்பாற்றவும்-'சோஷலிச சமுதாயமான' இந்தியச் சமுதாயத்தை ஒரு கட்டுப்பாட்டிற்குள் வளர்க்கவும் நாட்டு மக்களுக்குத் தேவையானவற்றை மட்டும் வைத்து விட்டு, மற்றவை எல்லாவற்றிற்கும் தடை விதித்துவிட வேண்டுகிறேம். எந்தப் பொருளாக இருந்தாலும் சரி-அது முகத்திற்குப் பூசும் பவுடராக இருந்தாலும் சரி; அல்லது குழந்தைக்குக் கொடுக்கும் பால் மின்னுக இருந்தாலும் சரி நாட்டு மக்களுக்கு ஏற்றது எதுவோ - இந்திய மக்களுடைய பொருளாதாரத்திற்கு எது கட்டி வருமோ அதை மட்டும் வைத்துக் கொண்டு மற்றவற்றிற்கு சிவப்புக் கோடிட்டு விடவேண்டும். இந்தத் திட்டங்கள் கசப்பாக இருக்கலாம். ஆனல் இவையாவும் இந்தியாவை இன்று பிணித்துள்ள பிற்போக்குப் பிணியை வேரோடு கிள்ளி எறியக்கூடிய அருமருந்துகள் என்பதை மட்டும் நாம் மறந்து விடலாகாது.

கார்களிலே மட்டுமல்ல; மனித வாழ்க்கைக்குத் தேவையான ஒவ்வொரு பொருளுமே இப்படிக் கட்டுப்படுத்தப்படத்தான் வேண்டும். மானத்தை மறைப்பதற்குத்தான் புடவை என்றல் அவைகளிலே ஒன்றிற்குப்பட்டு இழை ஏன்? சரிகைக்கரை ஏன்? ஒன்றிற்கு ஒன்று விலையில் இமயமலை வித்தியாசம் ஏன்? வியாபாரிகள் கண்கவரும் வண்ணத்தில் விதவிதமான ஆடைகளைக் கடைகளில் கொண்டு வந்து குவித்து விடுவதால் அந்த மாதச் சம்பளப்பணம் 105 ரூபாய்களுடன் ஜவுளிக்கடையின் உள்ளே நுழைந்த ஏழைக் கந்தன் கூட தன் மனைவிக்கு ஏதோ ஒரு வேகத்தில் 75 ரூபாய்களில் பட்டுப்புடவை ஒன்றை வாங்கிக் கொண்டு வந்து விடுகிறன். புதுப்புடவை - அதிலும் பட்டுப் புடவை வாங்கிக்கொண்டு வந்த ஆனந்தத்தில் அன்று வேண்டுமானல் இன்பமாகக் கழிந்திருக்கலாம். ஆனல் அடுத்தநாள் விழித்ததும் வந்து நிற்கின்ற பால்காரனுக்கும் - மளிகைக்கடைப் பையனுக்கும் என்ன சொல்வது?

இப்படத்தின் இனிய பாடல்களை HMV ரிகார்டுகளில் கேளுங்கள்.

மாணிக்கத் தமிழிற்கு மணிவிழா எடுக்க வாரீர் !

மெரீனு கடற்கரையோரம் உள்ள பல்கலைக் கழக மாளிகையில் இருந்து இதுவரை வீசிக்கொண்டிருந்த தமிழ்த்

தென்றல் இந்தத் திங்களோடு ஓய்வு பெறுகிறது. நாளும் தம் இன்னிசையால் பக்திநெறி வளர்த்த தேவார நால்வரைப்போல நாளும் தம் நுண்ணறிவால் தமிழ் வளர்த்த இந்தச் சான்ருேரை-பாமரர் தமிழிற்கும் பண்டிதர் தமிழிற்கும் தன்னையே ஒரு பாலமாக அமைத்துக்கொண்ட பேராசிரியர் சேதுப்பிள்ளையை—அறியாத தமிழர் தமிழகத்தில் இல்லை.

ஏனெனில் பொதிய மலையிலே பிறந்து, தென்னன் மடியிலே தவழ்ந்து, சங்கத்து இருப்பிலே வளர்ந்த தமிழ் இன்று இந்தச் செந்தமிழ் அறிஞரின் பண்பட்ட பேச்சிலும், பழகு தமிழ் நடையிலும்தான் தஞ்சம் புகுந்து கொண்டிருக்கின்றது. வழக்கறிஞர் பட்டம்பெற்று வருவாய் நிறைந்த வழக்கறிஞர் தொழிலைச் செய்திருக்கவேண்டிய இந்த மேதை, முன்னை மொழிகள் பலவற்றில் இன்னும் இளமை குன்ருத நம் அன்னை மொழியின்மீது கொண்ட காதலால் தம் முழு நேரத்தையும் அதன் வளர்ச்சிக்கே பயன் படுத்தினர்.

பைந்தமிழ் இலக்கியங்களில் இவர் பெற்ற நுண்மாண் நுழை புலன் 'இவரை செந்தமிழிற்கு ஒரு சேதுப் பிள்ளை' என்றே மாற்றி அமைத்துவிட்டது. அன்றிலிருந்து இவரது பேச்செல்லாம்; எழுத்தெல்லாம்; மூச்செல்லாம் இன்பத் தமிழாகவே இனித்தன. வள்ளுவரும், இளங்கோவும், கம்பரும், திருத்தக்க தேவரும்கூட இவரது நாவில் இருந்து ஒலிக்கும்பொழுது ஒருபுது மெருகு பெற்றனர். அந்தப் புலவர்களே எண்ணியும் பார்த்திருக்க முடியாத புதுப்புது நயங்களை எல்லாம் இவரது இலக்கிய உள்ளம் அள்ளி அள்ளித்தந்தது. தமிழர்கள் அதனை உண்டு உண்டு மகிழ்ந்தனர்.

அதுமட்டுமல்ல; கட்சிப்பூசல்கள் நிறைந்த தமிழகத்தில் இவர்கள் மட்டும் தமிழர்களின் பொதுச் சொத்தாகவே திகழ்ந்தார்கள். பொய்யாமொழியாரான வள்ளுவர் வகுத்த பொதுமறை எவ்வாறு முன்னைப் பழமைக்குப் பழமையாய் பின்னைப் புதுமைக்கும் புதுமையாத் திகழ்கின்றதோ அதே

போன்று இந்த ஒப்பற்ற மேதையும் பக்திச் சுவையோடு பார்ப்பவர்களுக்குப் பக்தராகவும், பகுத்தறிவுக் கண்ணோடு பார்ப்பவர்களுக்குப் பகுத்தறிவு வீரராகவும் காட்சி தருகின்றார்.

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவராக இருந்துகொண்டு, தான் கற்ற தமிழால் உலகளந்த நேமியானாக வாழ்ந்துகொண்டிருந்த இந்தச் சான்றோர்தான் வருகின்ற மூன்றாம் தேதியில் இருந்து ஓய்வு பெறப்போகிறார்கள். தமிழிற்கே தன்னை இழந்து கொண்டுவிட்ட அவர்களுக்கு இந்த ஓய்வு நலத்தையே கொடுக்கும் என்றாலும் அதனால் தமிழகத்திற்கு ஈடுசெய்ய இயலாத பெருநலிவு தான் வந்துசேரும். அவர்களைப் பொருத்தமட்டில் பட்டம் பதவிகளையோ அல்லது பணக் குவியல்களையோ துச்சமென மதிக்கும் ஒரு வேதாந்த நிலையில் வாழ்பவர்கள். தான் ஈட்டிய செல்வம் முழுவதையுமே தமிழிற்குத் தந்துவிட்ட இந்த நிகழ்காலப் பாரிக்கு—அண்மையில் மணிவிழா வரப் போகின்றது. அந்த விழா தனி மனிதருக்கு நடக்கும் விழா அல்ல; அது நம்முடைய மாணிக்கத் தமிழிற்கே நடக்கும் பெருவிழா. அந்த விழாவிற்கு இன்றைய நிலையில் நிதி மிகுந்தவர்களாகக் காட்சி தரும் நம்முடைய திரைப்படக் கலைஞர்கள் யாவரும் பொற்குவை தர வேண்டுகிறோம். அந்த மணிவிழாவை உலகம் வியக்கும் பெருவிழாவாக நடத்த வேண்டுகிறோம்.

ஓவியர் பாலு சகோதரர்கள்



6 ரூபாய்களுக்கு கடிகாரம்!

15 ஜுவல்கள் உள்ள ஒரு கைக்கடிகாரம் 5 வருட உத்திரவாதத்துடன் 6 ரூபாய்களுக்கு எங்களுடைய பிரத்யேகத் திட்டத்தின் மூலம் தரப்படும். தபால் செலவு தனி. இந்தத் திட்டம் எங்களுடைய 'பாரடைஸ் சென்டை' பிரபலப் படுத்துவதற்காகவே தரப்படுகிறது.

பூரண திருப்தி இல்லையேல் பணம் வாபஸ் தரப்படும். இன்றே எழுதுங்கள்.

BHARAT COMMERCIAL STORES
Watch Suppliers: (KM) Jullundur CITY



மேலைநாட்டிற்கு ஒரு மெட்ரோ கோல்டுவின் மேயர் இருக்கிற தென்றால் நமக்கும் ஒரு கோல்டன் ஸ்டுடியோ இருக்கின்றது என்று தமிழர்களான நாம் தலைநிமிர்ந்து நடக்கும்படி திரைப்படத் தயாரிப்பு நிலையம் ஒன்றைத் தோற்றுவித்து, கலை வளர்த்த குணக் குன்றான மறைந்த கிருஷ்ணசாமி நாயுடுவின் அருமைக்குமாரி செல்வி சகுந்தலாவுக்கும், செல்வன் பாபு ஜனார்த்தனம் பி. ஏ., பி. காம். அவர்களுக்கும் அண்மையில் மிகச் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. திரையுலகமே திரண்டிருந்த இந்தத் திருமணத் திற்கு நடிகர் திலகம், ஏ. எல். எஸ்., டாக்டர் பாலகிருஷ்ணன் ஆகியோர் வந்திருந்து மணமக்களை வாழ்த்தினர்.

1961-ல் உங்கள் எதிர்காலம்



ஒரு தபால் கார்டில் ஏதாவது ஒரு மலரின் பெயரையும், உங்கள் பெயர், விலாசத்தையும் எழுதி அனுப்புங்கள். உங்களுக்கு ரு. 1-4-0க்கு தனி தபால் செலவுடன் தாங்கள் வரும் 12 மாதங்களில் உங்களுக்கு ஏற்படும் பலன்களையும் வியாபாரத்தில் லாப நஷ்டம், பதவி உயர்வு, உத்தியோக மாற்றம் குழந்தைப்பேறு, சந்துஷ்டி ஆகியவைகளைப் பற்றிய குறிப்புகளை அனுப்புகிறோம்.

உங்கள் விலாசத்தை ஆங்கிலத்தில் எழுதவும்.

SRI KRISHNA JYOTISH ASHRAM (KM)
Post Box No. 63, Jullundur City (Pb)

சென்ற வாரம் பம்பாய், கல்கத்தா, டெல்லி, சென்னை, இலங்கை ஆகிய 'ஸ்டான்வாக்' கிரிகட்காரர்களுக்கு சென்னையில் நடந்த கிரிகெட் போட்டியில் சென்னைக் கோஷ்டியே வெற்றி பெற்றது. விழாவிற்குத் தலைமை வகிக்க ஸ்டான்டர்ட் வாக்யூம் கம்பெனியின் ஜெனரல் மானேஜர் ஸிங்களேர் விமான நிலையத்தில் வந்திறங்கியபோது தரப்பட்ட வரவேற்பு இது. இதை சென்னை ஸ்டான்வாக் கிளப் மிக விமரிசையாக நடத்தியது.

ரூ. 1000 ரொக்க இனும்!
நீங்கள் நாடியதெல்லாம் கைகூடும்

எல்லா விதமான பிரயத்தனம் புரிந்து நீங்கள் மனம் சோர்ந்திருந்தாலும், சரி, இந்த மாயஜால மோதிரத்தை வாங்கி அணிந்து கொள்ளுங்கள். இதை அணிந்த உடனே நீங்கள் விரும்பிய நபர் ஆணாயிருந்தாலும் பெண்ணாயிருந்தாலும், தக்ஷணமே வசியமாய் விடுவார். இஷ்டப்பட்டவரை நீங்கள் மணப்பீர்கள். இதனால் மலட்டு ஸ்ரீகளுக்கும் புத்திரசந்தானம் உண்டாகும். இறந்தவர்களின் ஆத்மாவோடு பேசலாம். பூமியில் இருக்கும் புதையல் உங்கள் கனவில் தோன்றும்.

லாட்டரி, வியாபாரம், பந்தயம், சூதாட்டம், வழக்கு பரீட்சை இவற்றில் வெற்றி பெறுவீர்கள். துஷ்ட கிரகம் சாந்தம் அடையும். ஜீவியகாலம் சுகமாகக் கழியும்.

மாந்திரீக மோதிரம் விலை ரூ. 1.94 ஸ்பெஷல் மோதிரம் ரூ. 3.00 ஸ்பெஷல் சக்தி மிகுந்தது ரூ. 3.94 மின்சார சக்தியைப்போல் உடனே இது பலன் தரும். இந்த மாயமோதிரம் கிரஹணம் போன்ற சமயங்களில் தயார் செய்யப்படுகிறது. சூரியன் தவறுதலாய் மேற்கில் உதித்தாலும் இம்மோதிரத்தின் சக்தி தவறமாட்டாது. அப்படி பலன் இல்லையென்றால் இரட்டிப்பு சார்ஜ் வாபஸுக்கு காரண்டி. பலனில்லை என்று நிரூபிப்பவருக்கு ரூ. 1000 இனும்!

Principal, Bengal Magic House,
Durgiana, (KM) Amritsar. (Pb)

ரேகை சாஸ்திரம்-7

பேசும்பட உலகில் சிரிப்பால் சிந்தை கவர்ந்த:

குலதெய்வம் ராஜகோபால்

[ரேகை சாஸ்திர வித்தகர் பி. டி. சுந்தரம்]

இவரது கையின் பிரகாரம் மண்டலங்களின் மொத்த டிகிரி 310.

குரு மண்டலம்	—	22 டிகிரி
சனி மண்டலம்	—	34 டிகிரி
சூரிய மண்டலம்	—	34 டிகிரி
புதன் மண்டலம்	—	48 டிகிரி
செவ்வாய் மண்டலம்	—	38 டிகிரி
சந்திரன் மண்டலம்	—	38 டிகிரி
சுக்கிரன் மண்டலம்	—	54 டிகிரி
ராகு & கேது மண்டலம்	—	42 டிகிரி

310 டிகிரியில் பிறந்தவர்களைப் பற்றி இதற்கு முன் எழுதிய ஆராய்ச்சிக் குறிப்புகளில் நிறையக் கூறி இருப்பதை நினைவு படுத்திக் கொள்ளுங்கள்.

310 டிகிரியில் பிறந்தவர்கள் உலகின்கண் சகல சுக செல்வ பாக்கியங்களுடன் ஆனந்த வாழ்வு வாழ்வார்கள் என்பது ரேகை சாஸ்திரத்தின் பொதுப் பலன்.

இவ்வித ரேகை அமையப் பெற்றவர்கள் இளமைப் பருவத்தின் ஆரம்ப காலத்தில் வாழ்க்கை வசதிகளோடு "ஓஹோ!" என்று வாழ்ந்ததாக சரித்திரம் கிடையாது. ஆனால், வாலிபப் பருவ காலத்திலிருந்து வயோதிகப் பருவ காலம் வரை அஷ்ட ஐசுவரியத்துடனும், ஆன்ற புகழுடனும் செல்வச் செழிப்போடு வாழ்வார்கள் என்று சொல்லலாம். இந்த டிகிரி அம்சத்தில் பிறந்தவர்களில் பெரும்பாலோர் வாழ்க்கையின் பிற்பகுதியில் நற்பலன்களை அடைந்து நல்வாழ்வு வாழ்ந்ததை என் அனுபவத்தில் கண்டிருக்கிறேன்.

நேயர்கள் இவரது கைரேகையைக் கவனிக்க வேண்டும். ஆயுள் ரேகையானது புத்தி ரேகையிலிருந்து உற்பத்தியாகி சுக்கிரமேட்டின் அந்திம பாகத்தில் முடிவடைகின்றது. அதோடு செவ்வாய் ரேகையானது செவ்வாய் மண்டலத்தில் உற்பத்தியாகி சுக்கிர மண்டலத்தில் அந்திம பாகத்தில் முடிவடைகிறது. ஷி ரேகைகள் அமையப் பெற்றவர்கள் இளமையில் கஷ்டப்பட்டாலும் 25-ம் வயதிற்கு மேல் மற்றவர்களின் உதவி ஒத்தாசையாலும், அன்பு ஆதரவாலும் அதோடு தங்களுக்குள்ள மேன்மையான குணத்தாலும் படிப்படியாக பெரும் முன்னேற்றங்களை அடைந்து நாடு மதிக்கும் நல்வாழ்வு வாழ்வார்கள் என்பதை இதன் மூலம் அறியலாம்.

நேயர்கள் இவரது புத்தி ரேகையை கவனிக்கவேண்டும். புத்திரேகையானது 22 டிகிரி அகலம் பெற்ற குரு மேட்டிலிருந்து உற்பத்தியாகி 38 டிகிரி

குலதெய்வம் ராஜகோபால்

அகலம் பெற்ற செவ்வாய் மண்டலத்தில் முடிவடைவதால் நாவன்மையும், சொற்சாதுர்யமும், சமயோசிதப் புத்தியும், உரையாடலால்பலஉள்ளங்களை ஈர்க்கும் சக்தியும், அலங்காரப் பேச்சால் பலரைக் கட்டுப்படுத்தும் கவர்ச்சியும் இயல்பிலேயே அமையப்பெற்று, அதற்கான தொழிலைச்செய்து வாழ்வார் என்பதை இதன் மூலம் அறியலாம்.

நேயர்கள் இவரது பெயருக்கு முன் அமைந்திருக்கும் "குலதெய்வம்" என்ற சிறப்புப் பெயர் இவர் நடித்துப் புகழ் பெற்ற ஒரு படத்தின் காரணமாக ஏற்பட்டது என்று சந்தர்ப்ப வசத்தால் நினைக்கலாம் ஆனால் அதன் உண்மை வரலாறு அவரது கைரேகையில் பதிந்திருக்கிறது என்று சொன்னால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். இவரது புத்திரேகையுடன் புதரேகையானது கலக்கப்படுவதால் மிதமிஞ்சிய குலதெய்வ வழிபாடும் ஆச்சார அனுஷ்டானங்கள்; சடங்குசம்பிரதாயங்கள் வழுவாமல் பக்தி நெறி நின்று பகவானுக்கு பூஜை புனஸ்காரங்கள் செய்தும் தான தர்மங்கள் செய்தும், தெய்வப் பிரியராக வாழும் அம்சம் பெற்றிருக்கிறார்கள் என்பதை மேற்

குறித்த ரேகையின் அமைப்புக்களிலிருந்து அறியலாம். அதோடு அன்பு, இரக்கம், தயை தாட்சண்யம், தரும சிந்தைஇத்தகைய பண்புகள் இவர்களிடம் அமைந்து இருப்பதால் பிறர் துன்பப் படுவதைக்கண்டுஅதை தங்களுக்கு வந்த துன்பமாகக் கருதி இதயம் துடிப்பார்கள்! துன்பம் துடைப்பார்கள்! தங்கள் வருவாயில் பெரும்பகுதியை தயையால், தாட்சண்யத்தால், தருமகுணத்தால் தாராளமனப்பான்மையால் உதவிசெய்து உள்ள திருப்தியடைவார்கள்.

தனரேகையானது 26-ம் வயதிலிருந்து ஆரம்பிப்பதால் இவரது அதிர்ஷ்டம் இக்கால முதல் ஜொலிக்கஆரம்பிக்கிறதுஎன்று சொல்லலாம். 32-ம் வயதுக்கு மேல் அதிக பேரும்புகழும் பெருவாழ்வும் அமைவதற்கான பிரகாசமான காலம் என்பதைஇவரது ரேகைகளிலிருந்து அறியலாம். மக்கள் மனதில் என்றென்றும் நிலை பெற்றிருக்கும் படியான அரிய பெரிய சாதனை களை செய்து தங்கள் புகழை நிலைநாட்டும் சரித்திர புருஷர்களாக விளங்கும் அம்சம் இவரது ரேகைகளில் காணலாம். மேலும் தாங்கள் பிறந்த ஊரை விட்டு, அன்னியஊரிலே இல்லம் அமைத்து அங்கேயே தங்களின் அந்திம காலத்தை ஆனந்தமாக நடத்தும் வாழ்க்கை அமைப்பு இவரது ரேகையில் காணக் கிடக்கிறது.

நேயர்கள் மிக முக்கியமாக கவனிக்க வேண்டிய இவரது ரேகைகள், ஆயுள்ரேகை, புத ரேகை, இருதயரேகை, புத்தி ரேகை முதலியன.

ஷி ரேகைகள் நன்றாக அமையப் பெற்று கையின் மத்திம பாகத்தில் நான்கு சதுரங்கள் அமைந்திருப்பதால் வாழ்க்கையில் திடீரென்று உயர்ந்து பெரும் தன பாக்கியத்தையடைவார் என்றும், 35 வயதிலிருந்து 42 வயதிற்குள்ளாக தாங்கள் செய்துவரும் தொழில ஸ்தாபன ரீதியில் தாங்களே ஏற்று நடத்தி அதில் பெரும்புகழ் அடைவதோடு பலரும் தங்கள் நிழலில் தங்கி வாழும் ஆலவிருட்க்ஷமாக பொன்னும் பொருளும் பெற்று போகபோக்கியத்தில் வாழ்வார்கள் என்பதை ஷி கேந்திர ஸ்தானத்தில் அமைந்திருக்கும் ரேகைகளிலிருந்து அறியலாம்.

கடைசியாக நேயர்கள் இவரது கையின் அமைப்பைப் கவனிக்கவேண்டும். இதுவரை நான் ஆராய்ச்சி செய்து வந்த கைகளைவிட இது ஒரு புதுமையான கை! பெருவிரலுக்கும் ஆள் காட்டி விரலுக்கும் இடையில் அமைந்திருக்கும் இடைவெளி இவ்வளவு அகலமான பரப்புடன் வேறு யாருக்கும் அமையவில்லை. இத்தகைய அமைப்போடு பிறந்தவர்களின் பூர்வீகம், தேவாம்சம் பொருந்திய பக்திஞான பரம்பரையின் முத்திரை பெற்றவர்களாக இருப்பார்கள் என்றும் அவர்கள் வழிவந்தவர்களும் நீண்ட ஆயுளும், ஈடில்லா செல்வமும் சரீர சுகமும் சந்தோஷமான மனைவி மக்களைப்பெற்று இன்பமாக இல்லற தர்மத்தை இனிது நடத்துவார்கள் என்றும் சொல்லலாம்.

Statement about ownership and other particulars about newspaper KALAI

FORM IV

(See Rule 8)

1. Place of Publication	...	109-D-6. Mount Road, Madras-18.
2. Periodicity of its Publication	...	Monthly.
3. Printer's Name	...	S. NATARAJAN
Nationality	...	Hindu–Indian.
Address	...	1. ThayarSahib St, Madras-2.
4. Publisher's Name	...	A. BALU
Nationality	...	Hindu-Indian.
Address	...	109-D-6, Mount Road, Madras-18.
5. Editor's Name	...	A. SEENU
Nationality	...	Hindu–Indian.
Address	...	109-D-6. Mount Road, Madras-18.

6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital. — A. BALU, A. SEENU

I, A. BALU, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Date 1–3–61. **Signature of Publisher, A. BALU**

நிச்சயமாக இது விஜயசாமுண் டீஸ்வரி பிறந்த பிறகு இருக் காது. பிள்ளைக்கலி தீர்க்க வந்த அந்தச் சிங்காரத்தேன முது பிறப்பதற்கு முன்புதான் ஆந்திர வடிவழகி சாவித்திரி தன் வளர்ப்பு நாயுடன் இவ் வாறு கொஞ்சி மகிழ்ந்திருக்க வேண்டும்.

ஸ்டுடியோ அழைக்கிறது!

பரணி ஸ்டுடியோவில் நுழைந் ததும் அங்கு எனக்கு ஒரு வியப்புக் காத்திருந்தது. வர்ண ஜால உடைகளில் சில மேனுட் டுப் பெண்கள் ஸ்டுடியோவில் வட்டமிட்டுக் கொண்டிருந் தார் கள். அவர்களை நெருங்கிப் போய்ப் பார்த்ததும்தான் உண்மை புரிந்தது. அவ்வளவு பேரும் ஆம்பிளை, பொம்பளை கள்! ஒரு ஸ்டண்ட் கோஷ்டி யைச் சேர்ந்த வீரர்கள்தான் அப்படி உருமாறியிருந்தார்கள்.

அவர்களில் ஒருவரைப் பின் பற்றி படக் கொட்டகைக்குள் நுழைந்தேன். அங்குதான் என் வியப்புக்கு விளக்கம் கிடைத் தது.

விடுதலை பெற்று சிறையி லிருந்து வெளிப்பட்ட பாலு நல்லவனுக வாழ விரும்புகிருன்.

ஆனல், பொல்லாத உலகம் —அதில் உள்ள பொல்லாத மனிதர்களுக்கு அது பொறு க்கவில்லையே! ஏமாற்றுப்பேர் வழியான பொன்னம்பலத் தின் பரிச்சயம் பாலுவுக்குக் கிடைத்து விடுகிறது. பொன் னம்பலம் தன் சகபாடிகளு டன் சேர்ந்து ஒரு பாங்கைக் கொள்ளை அடித்துவிடுகிருன். போலீஸாரை, சந்தர்ப்பம் பாலுமீது சந்தேகம் கொள்ளச் செய்கிறது. பாலு தான் நிரப ராதி என்பதை நிரூபிக்கப் பாடு படுகிருன்.

பொன்னம்பலத்தின் அண் ணன் மகள் தாராவைக் காத லிப்பதாக நடிக்கிருன் பாலு. தான் கொள்ளை அடித்த பணத் துடன் கம்பி நீட்டி விட தாரா-பாலு காதல் உதவியாயிருக்கு மென, அதை வளர விடுகிருன் பொன்னம்பலம்.

திருமணத்திற்கு முன் ஒரு விருந்துக்கு ஏற்பாடு செய்கிருன் பொன்னம்பலம். அந்த விருந் துக்கு பாலுவின் நண்பர்களான ஜம்பு, பாண்டியன், ரீட்டா மூவ ரும் ஒரு நடனத்தை ஏற்பாடு செய்கின்றனர். அனைவரும் விருந்திலும், நடனத்திலும் மெய்மறந்து இருக்கும் சமயம் பாலு மெல்ல நழுவி, பொன்னம் பலம் கொள்ளைப் பணத்தைப் பதுக்கி வைத்திருக்கும் ரகசிய இடத்தைக் கண்டுபிடித்து விடு கிருன்; ஆனல், எதிரிகளிடம் எக்கச்சக்கமாக அகப்பட்டுக்

கொண்டு சண்டையிட்டுத் தப்புகிறான்.

"திருடாதே" படத்தில் வரும் உச்சநிலைக் கட்டம்தான் இது. ஏ. எல். எஸ். புரொடக்ஷன் ஸின் தயாரிப்பான இப்படத்திற்காக விருந்துக்காட்சியும், சண்டைக் காட்சியும் பரணியில் படமாக்கப்பட்டன. நண்பன் ஜம்புவாக வரும் தங்கவேலு மேனாட்டுப் பாணியில் உடை அணிந்து ரீட்டாவுடன் கவர்ச்சிகரமான நடனம் ஒன்றை ஆடினார்.

இப்படத்தில் கதாநாயகன் பாலுவாக புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரனும், தாராவாக எம். என். ராஜமும், நண்பன் பாண்டியனாக வி. எஸ். பாண்டியனும் அன்றைய காட்சிகளில் நடித்தார்கள்.

இப்படத்தில் எம். ஜி. ராமச்சந்திரனுக்கு ஜோடியாக வருவது சரோஜாதேவி. ப. நீலகண்டன் டைரக்ஷனில் ராமமூர்த்தி இதை ஒளிப்பதிவு செய்து வருகிறார்.

விஜயா ஸ்டுடியோவுக்குள் நுழைந்தபோது பழக்கமான குரல் ஒன்று கேட்டு, அருகே இருந்த படப்பிடிப்புக் கொட்டகைக்குள் நுழைந்தேன்.

நெற்றியிலே பட்டைநாமம் துலங்கும் அந்த முதியவர், ஒரு பாண்டுரங்கன் படம் போட்ட காலண்டரைப் பார்த்து, "பாண்டுரங்க சாயி! பாண்டுரங்க சாயி...!" எனப் பாடியபடி திரும்புகிறார்; அவர் பக்தி வேஷம் கலைகிறது. அழகிய மங்கை ஒருத்தியைக் கண்டதும் பல்லை இளித்து, "வா...! மைனா வா...!" என்று குழைகிறார். சம்பாஷணை தொடர்கிறது:

வந்த அந்த அழகி, "என்னங்க, நீங்க ரொம்ப நல்லா பாடுறீங்களே...!" என்று பாராட்டுகிறாள்.

"இதென்ன பாட்டு? நான் வாயைத் திறந்தேன்னா பதினெட்டு மணி நேரம் சஞ்சாரம் பண்ணாம நிறுத்தமாட்டேன்!"

"அப்படீங்களா...!"

"பாட்டென்ன; சாப்பாட்டைப் போட்டுப் பாரு, ஒரு வெட்டு வெட்டுவேன்!"

"விரிந்து பரந்துகிடக்கும் சாம்ராஜ்யம் வேண்டாம் நான் விரும்பிக் கேட்கும் அந்த வண்ண மயிலை மட்டும் கொடுத்துவிடுங்கள்" என்று கயல்விழிக் கன்னி ஒருத்திக்காக கங்கை பாயும் இந்தியப் பெருநிலத்தையே துறக்கச் சித்தமாக இருந்த சலீமை ஜெமினியின் அக்பரில் அப்படியே நம்கண்முன் கொண்டு வந்து நிறுத்தும் சோகவேந்தன் திலீப் குமார்.



இந்துஸ்தானத்தையே கட்டியாண்ட முடிமன்னனும் மணிமுடியின் சிறப்பிற்காக மகனையே இழக்கச் சித்தமான இரும்பு நெஞ்சனுமான முகலாயப் பேரரசன் அக்பரின் மிடுக்கான பாத்திரத்தை ஏற்பதற்கு இந்தியாவில் மட்டுமல்லாது உலகிலேயே தகுதிவாய்ந்த ஒரே ஒரு நடிகக் கோமானான பிருதிவிராஜ் அண்மையில் வெளிவரப்போகும் ஜெமினியின் அக்பரில் இப்படி போர் உடையில் தோன்றி நம் நெஞ்சங் கவரப்போகிறார்.

வந்த மைனா என்ற அந்தப் பெண்ணோ தோட்டக்கார கந்தசாமியின் முறைப் பெண். நாமக்காரருக்கு மைனா மீது ஒரு கண்; என்றாலும், தோட்டக்கார கந்தசாமியை நினைத்தாலே குலை நடுங்கியது!

மைனா என்ற அந்தப் பெண்ணை கருவியாகக் கொண்டு தான் அந்த நாமக்காரர், கதாநாயகிக்கும், கதாநாயகனுக்கும் மனஸ்தாபம் ஏற்பட வழி செய்கிறார். அந்த நாமக்காரர் யார் தெரியுமா? அவர்தான் "அறிவாளி" படத்தில் வரும் தரகன். நாட்டு வக்கீல் நல்லமுத்து நாய்க்கன்; இந்தப் பாத்திரத்தில் நடிக்கும் பாலையா, அன்று நடித்து முடிப்பதற்குள் டைரக்டர் ஏ. டி. கே. உட்பட அங்கிருந்தோர் அனைவரது வயிறும் சிரித்துச் சிரித்து புண்ணாகி விட்டது.

நல்லமுத்துவைக் காதலிப்பதுபோல போக்குக் காட்டி ஏமாற்றும் மைனாவாக புது

முகம் காந்தியும், அவள் முறைப் பையன் கந்தசாமியாக, முதலாளி கன்னையாவும் அன்று நடித்தனர்.

ஏ. டி. கே. புரொடக்ஷன்ஸின் இப்படத்தை, சக்கரவர்த்தியின் உதவியுடன் ஏ. டி. கிருஷ்ணசாமி டைரக்ட் செய்ய பாலு ஒளிப்பதிவு செய்தார்.

எம். ஆர். ராதா பண்டரிபாயை கைவிட்டார்! ஆமாம்...! உலகிலேயே புதுமையான இன்பகர வாழ்வை துவங்குவோம்! என்று கூறிய ராதா, பண்டரியை பாதியிலேயே வெறுத்து விட்டார். இக்கதையை பண்டரிபாயே விளக்குகின்றார்: "அவர் மற்றொருவளிடம் கூடா நட்பு கொண்டு என்னை விரட்டி விட்டார். என்னுடைய பரிதாப நிலை கண்டு எங்கள் வீட்டு வேலைக்காரன் கார்மேகம் என்னுடனேயே வந்து, என்னைப் பெற்றெடுத்த தந்தையினும் மேலாக பாசம் காட்டி காப்பாற்றினான். நான் அவரை விட்டுப் பிரிந்து வரும்பொழுது கர்ப்பிணி; ஆகவே, சில மாதங்களிலேயே எனக்கொரு மகளும் பிறக்கிறாள். கார்மேகத்திற்கு அவரின் மீது அடக்க முடியா ஆத்திரமும், வருத்தமும் அன்றாடம் வளர்ந்து கொண்டே

"தேனூறும் இதழும், செம்பவள உடலும் மட்டும் இருந்துவிட்டால் போதுமா? துள்ளும் இளமையை மற்றவர் நெஞ்சை அள்ளும் வகையில் வெளிப்படுத்தும் பூப்போட்ட பஞ்சாபி உடை அமைப்பும்வேண்டாமா?" என்று கேட்பதுபோல ஒயிலாக நடை பயிலும் இந்த மயில், திரையை மறந்து மண வாழ்க்கையில் ஈடுபட்டாலும் இவரைத் திரையுலகம் மட்டும் மறக்க இயலாது.

கேரளத்துக் கட்டழகி பத்மினி.



எப்படிப்பட்ட கல்யாண வீட்டிலும் ஏதாவது ஒரு சண்டை வந்தே தீரும். ஆனால் மணக்கோலத்தில் இருக்கும் மாப்பிள்ளையே முஷ்டியை உயர்த்திக்கொண்டு கிளம்பவேண்டுமென்றால் உண்மையிலேயே அது ஏதோ பெரிய விஷயமாகத்தானே இருக்கவேண்டும்? எம். ஜி. ஆர். தாக்கியதும் எம். ஆர். ஆர். விழுந்து கதறுகிறாரே அந்த தத்ரூபக் காட்சி ஒன்றிற்கே பல ஜில்லாக்களின் வினியோக உரிமை விற்றுப் போய் விட்டதாம்.

வருகின்றது. அவரின் அட்டகாசங்களும் பெருமளவுக்கு தினமும் பெருகிய வண்ணமாகவே இருக்கின்றது. 'பெண்தானே; என்ன செய்துவிட முடியுமென' என்னை வஞ்சித்து, என் வாழ்விற்கே முற்றுப்புள்ளியை வைத்த அந்த முரட்டு மனிதனுக்கு ஒரு பெண்ணின் மூலமாகவே பாடம் கற்பிக்க வேண்டுமென கார்மேகம் சபதம் செய்கிறான். இதற்காக என் மகள் தங்கத்தைஒரு புரட்சிகர வீரமங்கையாக்கியதுடன், வெறும் தங்கத்தை கொங்கு நாட்டுத் தங்கமாகவும் மாற்றி விட்டு இறந்து விடுகிறான். அதனால், தங்கத்தைக் கண்டு அநியாயக்காரர்களும், அயோக்கியர்களும் அஞ்சி நடுங்குகின்றனர். இதற்கு அவரும் பலியாகின்றார். பின்னர் ஒரு நாள் நாங்கள் வசிக்கும் குகைக்கே அவரை அழைத்தும் வருகிறாள். அங்குதான் தங்கத்திற்கு அவர்தான் தன் தந்தையென புரிகின்றது. அவரும் தன் தவறுகளை உணர்ந்து வருந்துகிறார்.

தேவர் பிலிம்ஸாரின் கொங்கு நாட்டுத்தங்கம் என்ற இச்சித்திரம் வெகு துரிதமாய் வளர்ந்து முடிவடையும் தருவாயிலுள்ளது. இதில் குணவதியாக பண்டரிபாயும், ஜமீந்தாராக எம். ஆர். ராதாவும், தங்கமாக புஷ்பலதாவும் நடிக்கின்றனர். டைரக்ஷன் — திருமுகம்; தயாரிப்பு— சாண்டோ சின்னப்ப தேவர்.

சந்திப்பு

நடிகவேள்

M.R. ராதா

......கலைச்செல்வம்......

அரசியலிலே புயலைக்கிளப்பிய லெனின் உண்டு...
ஆட்சியாலே நடுங்கச்செய்த ஹிட்லர் உண்டு...
கருத்திறல் மக்களைக்கவர்ந்த லிங்கன் உண்டு...
காவியத்திறல் கற்பனைவளம் பெருக்கிய
ஷேக்ஸ்பியர் உண்டு...
சாந்தத்தால் உலகைக் கவர்ந்த காந்தி உண்டு...
தீர நெஞ்சத்தால் தமிழனைக்காத்த ஈ.வெ.ரா
தந்தை உண்டு...
புரட்சியால் நடிப்புக்கலை மூலம் போர் நிகழ்த்திய
எம்.ஆர்.ராதாவும் உண்டு......

எதிர்ப்பு உரம்பெற்ற நெஞ்சம் ஒன்றினாலேயே
எதிர்த்தே வளர்ந்த நடிகவேள்..... இன்று/



நானிலம் போற்றும் நடிக மேதையே! நடிகவேள் அவர்களே! நீங்கள் எத்தகைய இலட்சிய நோக்கத்துடன் சினிமாத்தொழிலில் ஈடுபட்டு வருகின்றீர்கள்?

★ நான் நாடகத்தில் என்ன கருத்துக்களைச் சொன்னேனோ! நாடகத்தில் சினிமாக்கலை எவ்வாறு அமையவேண்டுமெனச் சொன்னேனோ! அது இன்று சினிமாக்கலையில் அமைந்திருக்கிறது...! என்னை வரவேற்கிறது.

நீங்கள் சினிமா உலகில் ஈடுபட்டுக் கொண்டே அது ஒழிய வேண்டுமென்றும் கூறுகின்றீர்களே...! அது முறையா? தயாரிப்பாளர்கள் உங்களை ஒதுக்கி விட்டால் என்ன செய்வீர்கள்?

★ தயாரிப்பாளர்களைப் பற்றி நான் கவலைப்படவே இல்லையே! பார்வையாளர்களுக்கு மட்டுமே நான் பகுத்தறிவை ஊட்டுகிறேன்! நான் கூறுவது...சொல்லுவது...யாவும் பெரியார் ஈ. வே. ராவின் கருத்துக்கள்!

○ ஆரம்பத்தில் தாங்கள் தமிழகத்தந்தை பெரியார் அவர்களை எவ்வாறு சந்தித்தீர்கள்?

★ ஆரம்பத்தில் புராணப் பற்றுள்ள நான் ராவணன் என்ற அரக்கனென எண்ணி அவரை சந்தித்தேன்.



நடிகன் என்றால் அவனுக்கு எல்லா வேடமும் தெரிந்திருக்கவேண்டும். 'பேண்டும்' 'சூட்டும்' போட்ட பகுத்தறிவு வாதி வேடத்தோடு பட்டையும் கொட்டையும் கட்டிக்கொண்டு இப்படி தர்மகர்த்தா 'போஸ்' கொடுக்கவும் தெரிந்திருக்கவேண்டும் என்று ஏவி. எம். பாவமன்னிப்பில் தன்னுடைய பண்பட்ட நடிப்பின் மூலம் நடிகவேள் விளக்கிக் காட்டுகிறார்.

○ நீங்கள் திராவிடக் கழகத்தில் அங்கத்தினராகும்படி அக்கட்சியின் எந்தவிதக் கொள்கை காரணமாக அமைந்தது?

★ நான் அங்கத்தினனே அல்லவே...! ஆனால் ஆயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறேன். இருப்பினும் அக்கட்சி என்னையொன்றும் கட்டுப்படுத்த முடியாது! பெரியார் ஒருவரால்தான் என்னைக்கட்டுப்படுத்த முடியும். நான் அக்கட்சியின் ஒரு அனுதாபி! எல்லாக் கட்சிகளிலும் புரிந்தவர்களும், புரியாதவர்களுமிருப்பார்கள்! ஆகவே, அவர்கள் கேட்கக்கூடிய கேள்விகளுக்கெல்லாம் பதில் கூறும் பொறுமைக் குணம் என்னிடமில்லை. மேலும் நான் நாலணா அங்கத்தினன் அல்லவே அல்ல!

○ அதற்கு முன் எக்கட்சியில் ஈடுபட்டிருந்தீர்கள்?

★ முன்பு நான் பகவத் சிங் பார்வர்ட் கட்சியிலிருந்தேன். அப்பொழுதும் எனக்கு சீர்திருத்தக் கருத்துக்கள் தான் உண்டு.

அக்காலத்தில் பெரியார் காங்கிரஸிலிருந்தார். ஒரு சமயம், ஜெகன்னாதய்யர் நாடகக் கம்பெனியை ராமசுப்பையர் நடத்திவந்த பொழுது, திருப்பதியில் முகாமிட்டிருந்தது. அதில் நானும், டி. பி. பொன்னுசாமி பிள்ளையும், சங்கீதம் வெங்கட்ராமனும், மற்றும் 63 பையன்களும் இருந்தோம். திருப்பதியில் தினமும் அதிகாலையில் தரும தரிசனம் உண்டு. அதைக் காண நாங்கள் எல்லோரும் ஒருநாள் கோயிலுக்கு மலைமேல் ஏறிச் சென்றோம். ஆனால், அங்கே கூட்டம் அதிகமாக இருந்ததனால், தரும தரிசனம் மாலையில் தான் நடைபெறுமெனப் போர்டில் எழுதிப்போட்டுவிட்டனர். இதைக் கண்ட எனக்கு அடக்க முடியாத ஆத்திரம் உண்டாயிற்று. இத்தனை கஷ்டப்பட்டு இங்கு வந்தும், தரிசனம் செய்ய முடியவில்லையே என்று நினைக்க நினைக்க மேலும் ஆத்திரம் அதிகமாயிற்று. மாலை வரையில் அங்கேயே இருந்து 'தரும' தரிசனம் செய்யலாமென்று யோசிப்பதற்கும் எனக்கு வழியில்லை, ஏனெனில் மத்தியான சாப்பாட்டிற்கு காலணாகூடக் கையில் இல்லை. இத்தகைய

வேதனையுடனேயே கீழே உள்ள கம்பெனிக்கு வந்தேன். இருப்பினும் காலையில் நடந்த சம்பவம் எனக்கு வேதனையைத்தான் மேலும் அளித்து வந்தது. அப்பொழுது எங்கள் கம்பெனியில் 'ராஜாம்பாள்' நாடகம் நடைபெற்று வந்தது. அதில் நாங்கள் வெடிகளைப்பயன்படுத்துவதுண்டு. என் மூளையும் குறுக்கு வழியை நாடியது. அதன்படி சரியான டைனமெட் வெடி ஒன்றை நானே தயாரித்து கம்பெனி மாடியில் காயவைத்தேன் இந்த டைனமெட்டை திருப்பதி மலையில் வைத்து அக்கோயிலை உடைத்துவிடுவது என்பது தான் என்னுடைய திடமான முடிவு. பின்னர் மாடிக்குச் சென்று அந்த டைனமெட் காய்ந்துவிட்டதா என்று அறிய அப்பொழுது நான் பிடித்துக் கொண்டிருந்த சிகரெட்டை அதன்மீது தட்டினேன். அவ்வளவுதான்......பேரிடி போன்ற சப்தம் அடுத்தே கிளம்பியது. அம்மருந்து என் உடல் முழுமையையும் துளைத்து விட்டதுடன், அந்த மாடியும் பிளந்து 63 பையன்களுக்கும் பலத்த காயத்தை உண்டாக்கியது. இதையறிந்துவந்த போலீஸார் என்னைக்கைது செய்தனர். பின்னர் சங்கீதம் வெங்கட்ராமய்யரின் அந்தஸ்துள்ள குடும்பத்தின் பேருதவியால், நான் அசல் டைனமெட்டை தயாரிக்கவில்லையென்று நிரூபித்து விடுதலையானேன். நான் தயாரித்தது என்னவோ, கருமருந்தல்ல ...அசல் டைனமெட்டே...!

○ உங்களுக்குச் சிறந்த பெயரும் புகழும் கிடைத்தது உங்களின் எத்தகைய முயற்சியினால் என்பதை விளக்குவீர்களா?

★ எனக்குத் தெரியாது...! ஆனால், என் உழைப்பு, பொது மக்களின் நல்லெண்ணம், அரசாங்கத்தின் குறுக்குப் பாதை ஆகியவைகள்தான் என்று நினைக்கிறேன்!

○ உங்களைப் போன்று புரட்சிகரப் போக்கில் இனி யாராவது நாடகங்களை நடத்த முடியுமென்று நீங்களே நினைக்கிறீர்களா?

○ இதுவரைக்குமில்லை...! இனி மேலும் முடியாது என்றும் நினைக்கிறேன்...! ஆனால் வந்தால் வரவேற்கிறேன்!!

★ கட்சிகளில் சேர்ந்துள்ள நடிகர்களின் முக்கிய நோக்கம் எதுவாக இருக்க வேண்டும்?

50 முறை இயங்கக்கூடிய ஆட்டோமேடிக் பிஸ்டல்

லைசென்ஸ் தேவையில்லை

50 முறை தானே இயங்கக் கூடிய இந்த அமெரிக்கன் மாடல் துப்பாக்கியில் சுடும்பொழுது பயங்கரமான

ஓசையும், தீப்பொறியும் வெளிவந்து கொள்ளைக்காரர்களிடம் இருந்து உங்களைக் காக்கும். நாடகங்களுக்கு இது மிக பொருத்தமானது.

விலை ரூ. 10-50.

தபால் செலவு ரூ. 2. 25 ரவைகள் இலவசம்; மேற்கொண்டு வேண்டுமென்றால் ஒரு டஜனுக்கு விலை ரூ. 1. தோல் பை விலை ரூ. 3.

ரேடியோ ரிப்பேரும் சொந்தத்தில் ரேடியோவுமே செய்து கொள்ளக் கூடிய வகையில் 117 படங்களுடன் கூடிய "எலெக்டிரிக் & ரேடியோ கைடு" புத்தகம் விலை ரூ. 5.

தபால் செலவு ரூ. 1.

கடிதத் தொடர்பு ஆங்கிலத்தில் மட்டுமே வைத்துக் கொள்ளப்படும்.

Ilfa Products (K.L.)
Rafatganj Aligarh (U.P.)

★ பெயரெடுப்பதற்காக இருக்கலாமென்று நினைக்கிறேன்! நடிகர்கள் எப்பொழுதும் கட்சிக்குக் கட்டுப்பட்டு இருக்கவே கூடாது. அவ்வாறு இருந்தால் புகழடைவதே நோக்கமென்றுதான் நினைக்கிறேன்!

○ கட்சிகள் மூலம் நடிகர்கள் எவ்வாறு புகழடைகிறார்கள் என்பதை விளக்க முடியுமா?

★ எந்தெந்த கட்சிகள் எப்பொழுது உயர்வடைகின்றனவோ...அந்தந்த சமயங்களில் அதில் சேர்ந்து கொண்டு புகழடைய நினைக்கின்றனர் நடிகர்கள்! ஆனால், நானும் பெரியாரும் நாட்டு மக்களின் விரோதிகளைப் போன்றிருந்த காலத்தில் அதாவது கடவுள் இல்லை, எல்லா மதமும் ஒன்று என்று கூறி மேலும் மக்களின் விரோதம் முழுவதையும் பெற்றிருந்த சமயம், நான் அக்கட்சியிலிருந்து புரட்சிகரப் போக்கில் உயர்வடைந்தேன். ஆகவே, என்னைப் போன்று எவராலும் வர முடியாது......புகழும் அடைய முடியாது...!!

○ சினிமா உலகம் இப்படியே இன்னும் எத்தனை ஆண்டுகளுக்குத்தான் அவல நிலையில் சென்று கொண்டேயிருக்கும்?

★ என்னைக்கூடத்தான் வெறுத்தார்களிந்த நாட்டிலே...! அவர்களெல்லாம் எப்படிப்பட்டவர்கள் என்றால், மத வாதிகள் அரசியலார்கள், ஆச்சாரக்காரர்கள், படித்தவர்கள், பட்டதாரிகள், பண்டார சன்னிதானங்கள், பத்திரிகையாளர்கள், பணம் படைத்தோர்கள் போன்ற அத்தனை பேர்களுமே தான்...ஆனால், அவர்களெல்லாம் இன்று என்னைப் புகழுகின்றனர்.

○ முக்கியமாக நம் தமிழ்த் திரையுலகம் எந்த வகையில் தான் முன்னேற்ற மடைந்திருக்கிறது என்றாவது கூற முடியுமா?

★ பணம் சம்பாதிக்கிறவன், நல்லா இருக்கிறவனைப் புகழ்கின்ற விதத்தில் முன்னேற்றமடைந்திருக்கிறது! ஒரு நடிகை நல்லவளோ...அல்லது கெட்டவளோ எனக்குத் தெரியாது...! ஆனால், அவளைப் பல வர்ணப்படமாய்ப் பத்திரிகைகளிலே போடுகிற விதத்தில் முன்னேற்றமடைந்திருக்கிறது!!

○ எதனால் நீங்கள் அளிக்கும் நன்கொடைகளுக்குக்கூட விளம்பரம் செய்து கொள்வதில்லை?

★ அதனால் கிடைக்கும் பெயர் எனக்குப் பெரிதல்ல! அதை நான் நன்கொடையாக நினைப்பதுமில்லை!! சிதம்பரம் தில்லை நடராஜனுக்கும், திருப்பதி வெங்கடாஜலபதிக்கும் நன்கொடை அளிப்பவர்கள் விளம்பரத்தையா எதிர்பார்க்கிறார்கள்!

○ சினிமா உலகம் எவ்வாறு அமைந்தால் அதற்குள்ள கெட்ட பெயர்கள் மறையும்?

★ உலக முழுவதிலும் வேலை நேரம் குறைய வேண்டும். மனிதன் சேமிக்காவிட்டாலும், நிம்மதியாக வாழ வேண்டுமென்ற அடிப்படை கொள்கையில்தான் புரட்சிகரமாய் நாடு இன்று முன்னேறிக் கொண்டிருக்கிறது ஆனால், சினிமா உலகத்தில் வேலை நேரம் மிகமிகக் குறைவு ...ஆனால், ஊதியமோ மிகமிக அதிகம்...! அதனால், பல நடிகர்கள் பிச்சை எடுக்கும் நிலை ஏற்படுகிறது. ஊதியம் சமமான நிலைக்கு வந்துவிட்டால் அதற்குள்ள கெட்ட பெயர்கள் ஒழிய வழி பிறந்துவிடும்!

○ நடிகர்களுக்குள்ளாக சதா போட்டியும், பொறாமையும் ஏன் வளர்ந்த வண்ணமாகவே இருக்கிறது?

★ இது எனக்கு இதுவரையில் தோன்றியதில்லை! காரணம்

திரையில் சீர்திருத்தம் செய்வதற்கு என்றே வந்துள்ள நம்முடைய நடிகவேள் மற்றவர்களைப் போல தனக்காகப் பாத்திரங்களை உருவாக்கிக் கொள்வதில்லை; பாத்திரமாகவே தன்னை மாற்றிக்கொண்டு விடுகிறார். கன்னி ஒருத்தியை கடும் வெயிலில் ரிக்ஷாவில் வைத்து இழுத்துக்கொண்டுபோகவேண்டுமென்றால்கூட அவர் சற்றும் சளைப்பதில்லை. அதனால்தான் திரையுலகமே இன்று அவரை மொய்த்துக் கொண்டு இருக்கிறது.

சிறந்த நடிகர்கள் பொறாமைப் பட வேண்டிய அவசியமேயில்லை. ஆனால், அரை குறைகள் தங்களிடத்திலுள்ள குறைபாடுகளைக் கொண்டு போட்டி பொறாமை போன்ற எண்ணத்தைஉற்பத்திசெய்கின்றனர்

○ நடிகர்களைக் கூத்தாடிகள் என சதா அழைத்தே வரும் பெரியார் அவர்கள், தாங்கள் சினிமா உலகில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென ஏதாவது போதனை செய்துள்ளார்களா ?

★ நிறையச் சொல்லியிருக்கிறார்கள்! அவர் கூறியவைகளை நான் கேட்டு நடந்து வந்ததினால்தான் நானொரு பெரிய நடிகனானேன்! கூத்தாடிகளை திருத்தத்தான் அவர் பாடுபட்டார்...! ஆனால், திருந்தியவர்கள் நான் ஒருவன் தான். ஆகவே, அவர் என்னைக் கூத்தாடி என்று கூப்பிடுவதேயில்லை!

○ தந்தை பெரியார், முதலமைச்சர் காமராசர் ஆகியவர்களின் சினிமாவைப் பற்றிய உண்மை அபிப்பிராயம் என்ன என்று தாங்கள் எதுவும் கூறமுடியுமா?

★ முதலில் அவர்கள் சினிமா உலகைப் பற்றி தெரிந்து கொள்வதே தவறு! மேலும் சினிமா நடிகர்களுடன் அவர்கள் தொடர்பு வைத்துக் கொள்வது மிகமிகத் தவறு!!

○ ஏன் நீங்கள் நடித்த வெற்றிப் படங்களின் பாராட்டு விழாக்களில்கூட கலந்துகொள்வதில்லை

★ வெற்றி யென்றால் எப்படி? எவ்வாறு? என்பதைச் சரியாகப்

புரிந்து கொண்டு அதில் கலந்து கொள்வது நல்லது. இலாபம் வந்துவிட்டது என்று வெற்றி விழாக் கொண்டாடுகிறார்களே அல்லாமல், நன்றாக நடித்தார்கள் என்று யாரும் விழா கொண்டாடுவதில்லையே...! ஆகவே, நான் ஏன் கலந்து கொள்ள வேண்டும்?

○ சினிமா நடிகர்களுக்கு எங்கும் எதனால் கணக்கற்ற அளவில் அதிகப்படியான ஊதியம் அளிக்கும் முறை ஏற்பட்டதென்று கூறமுடியுமா?

★ படத் தயாரிப்பாளர்களுக்கு பணத்தின் அருமை தெரியாது. நேர்மையற்ற முறையில் இவர்கள் சம்பாதிப்பதால், நடிகர்களும் நேர்மையற்ற முறையிலேயே கேட்க ஆரம்பித்து விட்டனர்.

○ புரட்சிகரப் போக்கிலும், அஞ்சா நெஞ்சத்தை எடுத்துக் காட்டும் நோக்கத்திலும்தான் இனி நாடகங்களை நடத்தவேண்டுமென்ற எண்ணம் தங்களுக்கு எதனால், எப்போது ஏற்பட்டது

★ மக்கள் என் கொள்கையை எதிர்த்தார்கள். நானும் அவர்களை எதிர்த்தேன்...நடைபெற்ற நாடகங்கள் என்ன சாதாரணமானவையா...? காட்டுமிராண்டித்தனமில்லையா...? ஆனால், என் சாமர்த்தியத்தினால் என்று சொல்லவில்லை! எல்லாம் தற்செயலாய் நிகழ்ந்தது!!

○ நீங்கள் ஏன் எந்த நடிகர்களுடனும் கூட்டு சேருவதில்லை?

★ நான் காட்டும் நேர்மைப் பாதைக்கு ஒத்து இயங்கினால் நான் அவர்களுக்கு அடிமையாக இருப்பேன்...இல்லையேல் முதலில் அவர்களை நான் விலக்கி விடுவேன்!

○ மாணவர்கள் திரைப்படங்களை எந்த நோக்கத்துடன் ரசிக்கிறார்கள் என்று நீங்கள் கருதுகிறீர்கள்?

★ நல்லதையும் ரசிக்கிறார்கள்...! கெட்டதையும் பார்த்துக்கெட்டுப்போகிறார்கள்! ஆனால், நல்லதை மட்டுமே எடுத்துக் கொள்ளும் நிலை அவர்களுக்கு இன்னும் ஏற்படவில்லை!

○ நீங்கள் சினிமா உலகில் விரும்புவதுதான் என்ன?

★ குறுகிய காலத்தில் ஒரு படத்தைத் தயாரிப்பதுதான் எனக்கு மிகவும் பிடிக்கும்.

○ தமிழகப் பத்திரிகைகள் எவ்வாறு சேவை செய்கின்றன என்று கருதுகிறீர்கள்?

★ பத்திரிகைகள், சினிமாக் காரர்களையே சுற்றுவது தேவையில்லை. அதே போன்று பெண் நடிகைகளுக்கே சகலவித விளம்பரங்களும் அளிப்பதும் மாற வேண்டும். பத்திரிகைகள் பொது நோக்கமுடன் என்றும் தங்கள் சேவையைப் புரியவேண்டும்.

○ 'கலை' இதழின் வளர்ச்சியைப் பற்றியும், உங்கள் ரசிகர்களின் போக்கைப் பற்றியும் என்ன கூற விரும்புகின்றீர்கள்?

★ 'கலை' பத்திரிகைமட்டும் 'கலை' என்ற பெயருக்கேற்ற முறையில் சிறப்புடன் வெளியாகிறது. ஏனெனில் சித்திரக் கலைஞர்களான ஓவிய மன்னர்கள் பாலுவும், சீனுவும் நடத்தும் பத்திரிகை அல்லவா? ஆகவேதான் கலையை எல்லோரையும் போல் வாடகைக்கு வாங்காமல் இயற்கையான கலை மணத்துடனும் வெற்றியுடனும் நடத்தி வருகிறார்கள். 'கலை' இதழ் வளர்ச்சி கண்டு முதலில் பெருமைப்படுபவன் நான் என்பதையும் கூறிக் கொள்ளுகிறேன். ரசிகர்கள் நேர்மைக்கு உயர்வு தராமல் இருக்கின்றனர். எப்பொழுதும் அவர்கள் உண்மையைத்தான் போற்ற வேண்டும். அவர்களுக்கு என்னுடைய வணக்கம்.

சினிமா வளர்ந்த விதம்

[கலைச்செல்வம்]

புகைப் படங்களையும், சினிமாப் படங்களையும் பார்க்கிறோம்! சிலசமயங்களில் சிறந்த பொழுதுபோக்கு என்றும் மகிழ்கிறோம்! ஆனால், இந்த அதிசய அபூர்வ கண்டுபிடிப்பு வகைகளை எவ்வாறு? எப்பொழுது? எவரின் அரிய முயற்சியால் சாதிக்கப் பட்டது என்பதைப் பற்றிமட்டுமே நாம் சிந்திப்பதற்குத்தான் மறக்கிறோம். பலவகையான பொருள்களின் உருவங்களை நிரந்தரமாக்கவும், அழியும் அழகு வண்ணத் தோற்றங்களை அது அழியும் முன்னமேயே பதிவு செய்து வைத்துக் கொள்ளவும் வேண்டி, அறிவுசான்ற மேதைகளின் பல பரிசோதனைகளின் பயனாகத்தான் இன்று வெகு எளிதாக பழக்கத்தில் இருந்து வரும் 'பிலிம்' கண்டுபிடிக்கப் பட்டது. அதனால் சினிமா சித்திர விசித்திரங்களும் தோன்றலாயின. இதன் மூலம் லட்சக் கணக்கான மக்கள் இத்தொழில் துறைகளில் பணி செய்யவும், முக்கியமாய்ப் பலர் சிறந்த வாழ்வை வாழவும் வழிவகுத்தது என்பன போன்ற இன்னும் பலவற்றையும் நாமறிவோம். இத்தகைய மாயாஜால சாதனைகளை வகுத்து, அதனை உலகின்மாபெரும்தொழில்களில் ஒன்றாக்கிய விஞ்ஞான வித்தக மேதைகளையே நாம் கீழே காணப் போகிறோம்.

★ **லியோனார்டோ டாவின்ஸி:**
இந்தமாமேதை ''தெளிவு படுத்தப்பட்ட பொருள்களின் பிரதி பிம்பம் மிகச்சிறிய துவாரத்தின் வழியாக ஒரு இருட்டறைக்குள் நுழையும்பொழுது, அதை அந்த இருட்டறையிலேயே துவாரத்திலிருந்து சற்று தூரத்தில் பொருத்தப்பட்ட வெள்ளைத்தாளின்மீது விழச் செய்தால், அந்தப் பொருளின் உருவம் அதனுடைய உண்மையான நிறத்தோடு, ஆனால் அளவில் மிகவும் குறுகியதாய் வலம் மாறி அந்த வெள்ளைத் தாளில் காணப்படும்'' என்று கண்டுபிடித்தார். இவரின் இத்தகைய சாதனை மிக்கச் செயலை அடிப்படையாகக் கொண்டுதான் இன்றைய 'பாக்ஸ்' காமிராக்கள் தயார் செய்யப்படுகின்றன.

★ **தாமஸ் வெட்ஜ்வுட்:** ''சில்வர் நைட்ரேட்டும், சீமைச் சுண்ணாம்பும் கலந்த பொருள்மீது சூரியன் ஒளிக் கதிர்கள்பட்ட இடமெல்லாம் கறுத்து விடுகின்றது'' என்பதைக் கண்டறிந்தார்.

முதல் காமிரா



லியோனர்டோ டாவின்ஸி

தாமஸ் வெட்ஜ்வுட்

ப்ரெடரிக் ஸ்காட் ஆர்ச்செர்

இவர் வெள்ளைத் தாளின் மீது நைட்ரிக் கரைசலை ஊற்றி பிறகு அந்தத்தாளை ஈரமாக்கி மேலே குறிப்பிட்ட லியோனார்டோடாவின்சியின் முறைப்படி புகைப்படங்களைத் தயாரித்து வந்தார். ஆனால் படங்கள் தெளிவாகயின்றி மிகவும் மங்கலாகத்தான் விழுந்து வந்தன. இத்துடன் அவர் மற்றொரு இடையூறையும் எதிர்க்கவோ அல்லது தவிர்க்கவோ முடியாமல் போய் விட்டது. அதாவது படங்கள் நன்ருக பதிவாவதற்காக அவற்றைப் பலமுறை கழுவினாலும் சில்வர் கூட்டுச் சேர்க்கைகளும் மற்றவைகளும் அகன்றுவிடுவதில்லையாம். ஆதலால் படத்தை வெயிலுக்கு கொண்டுவந்தால் சூரிய ஒளிக்கதிர்களின் உறவால் அவை கறுப்புப் புள்ளிகளாக மாறிவிடுகின்றன. இந்தப் பெரும் தடையை நீக்க மிகவும் தீவிரமான ஆராய்ச்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் பொழுது அவருடைய முப்பத்தி ஐந்தாம் வயதில் 1805ம் ஆண்டில் நோய்வாய்ப்பட்டு இறந்தார்.

★ பிரடரிக் ஸ்காட்—ஆர்ச்சேர்: இந்தக் கலைநிபுணர் 1851-ல் கண்ணாடித் துண்டுகளை பிலிம்களாக மாற்றும் முறையைக் கண்டுபிடித்தார். அதுவரை பிலிம்களை வெள்ளித்தகடுகளைக் கொண்டோ, அல்லது தாள்களின் மூலமோ தயாரித்து வந்தார்கள்! கண்ணாடித் துண்டுகளைக்கொண்டு பிலிம் தயாரிக்கும் முறையையே இனி காணப் போகின்றீர்கள். பருத்தியையும், கம்பளத்தையும், மூன்று பாகம் கந்தக அமிலமும் ஒருபாகம் நைட்ரிக் அமிலமும் கலந்த திரவத்தில் தோய்த்து எரிப்பதினால், 'கொலோடியான்' என்ற கரிசல் கிடைக்கும். இந்தக் கரிசலை கண்ணாடித்துண்டு மீது பூசி சில்வர் நைட்ரேட் என்றதிராவகத்தில்தோய்த்தால் அது பிலிமாக மாறிவிடுகின்றது

★ ஜோசப் நைஸ்போர்நியேப்ஸே கற்களின்மீது சித்திரங்களை பதிவு செய்யும் கலையின் வளர்ச்சியினால் ஊக்கம் பெற்ற இந்த பிரஞ்சு மேதை புகைப்படக் கருவிகளின் மூலம் ஒளியை பயன்படுத்தி கற்களின்மீது சித்திரங்களை வரைய முயற்சி செய்து வெற்றியும் கண்டார். அதில் சற்று அனுபவமும் முன்னேற்றமும் அடைந்த பின்னர் அவர்கற்களுக்குபதிலாக உலோகத் தகடுகளையே உபயோகிக்க ஆரம்பித்தார். இதன்மூலம்



ஜோசப்நைஸ்போர் நியேப்ஸ்



லூயி ஜாக் மாண்டே டாகர்

இன்றைய புகைப்பட என்கிரேவிங் கலைக்கு வித்திட்டவர் இவரேயாகும்.

★ **லூயி ஜாக் மாண்டே டாகர்:-** இந்த பிரஞ்சு நாட்டு விஞ்ஞானி பலகாலம்வரை பரிசோதனைகளை நிகழ்த்திய பின்னர் கடைசியில் இன்று நாமெல்லோரும் பார்த்து மகிழும் 'பாசிட்டிவ்' பிலிம்களை கண்டுபிடித்தார். அதாவது வெள்ளித் தகட்டை நன்ருக மெருகு செய்து அதன் மீது ஐயோடின் என்ற உலோகமல்லாத பொருளை எரிப்பதினுல் ஏற்படும் புகையை பரவச் செய்து அதை காமிராக்களில் உபயோகப்படுத்தப்படும். குறிப்பிட்ட பொருளை படம் பிடித்த பிறகு அதனை நன்ருக ஓடாக்கப்பட்ட பாதரஸத்தின்மீது தூக்கிப் பிடித்தால், பாதரஸத்திலிருந்து கிளம்பும் ஆவியானது ஐயோடின் புகைமீது ஒளிபட்ட இடங்களிலெல்லாம் ஒட்டிக் கொள்ளும். பிறகு அந்தத் தகடை உப்புத்திரவத்தில்சற்று நேரம் வைத்திருந்தால் ஒளிக் கதிர்கள் படாத இடங்களிலுள்ள கரைசல்பாகம் கரைந்து விடும். இறுதியில் அழகான உருவம் மட்டும் தலைகீழாக வலம்மாறி பதிந்துவிடும்.

பிரியேஸ் கிரினி



தற்காலஸ்டுடியோ காமிரா

★ **வில்லியம் ஹென்றி பாக்ஸ்-டால்பாட்:** டாகர் பாசிடிவ் பிலிம்களை கண்டுபிடித்தால், டால்பாட் நெகடிவ் பிலிம்களை கண்டு பிடித்தார். பாசிடிவ் பிலிம்களைவிட, நெகடிவ் பிலிம்கள் மிகவும் பயனுள்ளவை. காரணம் ஒரு நெகடிவ் பிலிமிலிருந்து அநேக பாசிடிவ் பிலிம்களையும், படங்களையும் தயார் செய்யலாம் என்பதேயாகும்.

★ **பிரியேஸ்-கிரீனி:** ஈரக் கண்ணுடித் துண்டுகளை உபயோகப்படுத்தி பிலிம்களை தயாரித்து வந்ததிலிருந்து மேலும் அத்துறையில் ஏதாவது முன்னேற்றத்தைக்காணவேண்டுமென்று முயற்சி செய்ததில், பக்குவப்படுத்திய கண்ணுடித் துண்டுகள் காய்ந்த பிறகு உபயோகப்படுத்துவதில் மட்டும் வெற்றி கண்டார்கள். கண்ணுடித் துண்டுகள் சற்று கைதவறி கீழே விழுந்துவிட்டால் உடைந்து விடக்கூடியவை அல்லவா? அதனுல் அவற்றை மிகவும் ஜாக்கிரதையாக பாதுகாக்கவேண்டி இருந்தது. இந்நிலையை போக்க 1859ல் கிரீனி 'செல்லுலாயிட்' என்ற திடமான பொருளினுல் பிலிம் தயாரிப்பதை கண்டு பிடித்து, இந்த இருபதாம் நூற்ருண்டில் புகைப்படக் கலை மட்டுமல்லாது, சினிமாக்



வில்லியம் ஹென்றி



ஆரம்பகால



லூமியேர் சகோதரர்கள்

கலையும் துரிதமாகப் பல முன்னேற்றங்களுடன் மக்களுக்கு தொண்டாற்ற வேண்டிய வழியை வகுத்துத்தந்தார்.

★ **லூமியேர் சகோதரர்கள்:** புகைப்படக் கலையில் புதிது புதிதாக கண்டறிந்த நுட்பங்களை ஆராய்ந்து அதன் வெற்றியால் படமாக்கப்பட்ட பிலிம்களை காணுவதற்காக, பரிசோதனைச் சாலைகளிலும், கலைக் கூடங்களிலும் பிரமுகர்களுக்கு மட்டுமே ஏற்பாடு செய்துகாண்பித்து வந்தனர். ஆனால் முதன் முதலாக இந்தச் சகோதரர்கள் படங்களை துணிந்து மக்களுக்கு காண்பிக்க முன்வந்தார்கள். இன்று நுழைவுக் கட்டணம் செலுத்தி பெரிய பெரிய திரைப்பட தியேட்டர்களில் ஆயிரக் கணக்கில் ரசிகர்கள் காணும் படி வசதியை வகுத்திட்ட அதிசய ஆற்றல்மிக்க இரட்டையர் இவர்கள் தான்.

★ **தாமஸ் எடிசன்:** விஞ்ஞான மேதைகள், அரசியல் நிபுணர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், பெரியார்கள், சமூக நலத்தொண்டர்கள் ஆகிய அத்தனை பேர்களும் தங்கள் தங்கள் துறைகளில் பிரபலமடைந்த திறமை மிக்கோரின் எண்ண அலைகளை, கற்பனை ஊற்றுக்களை, கண்டறிந்த உண்மைகளை மக்கள் எழுத்துக்களின் மூலம்பத்திரப்படுத்தி வந்தார்கள். ஆனால் அவர்களின் தேனினுமினிய சொற்றொடர் வாக்கியங்களை, நல்வழிப் படங்களை, பல பயனுள்ள பொன்மொழிகளை. அவர்களுக்குப் பின்னர் மக்கள் கேட்க இயலாமலிருந்த நிலையை மாற்றி அமைக்க, ஓயாத பெரு முயற்சியின் பலனாய் 'எடிசன்' கண்டு பிடித்த 'போனோகிராம்' உதவியது. ஒலிப்பதிவு நுட்பத்தை முதன் முதலில் கண்டறிந்து இந்த உலகிற்கே என்றும் அழியா ஒலியை நிரந்தரமாக்கிய இம்மாமேதையின் சேவை உயிருள்ள ஒவ்வொருவரின் நன்றிக்கும் பாத்திரமானது. இந்த அறிவு சான்ற வித்தகரின் கண்டுபிடிப்பால் பேசாத சினிமாப் படங்கள் பேசலாயின. விஞ்ஞானத் துறையில் மட்டுமல்ல மனஆறுதலைத் தேடிப் பொழுதுபோக்க வரும்ரசிகர்களை, அவர்களின் குடும்பங்களை மேலும் மகிழ்விக்க முனைந்ததில் அடைந்த மற்றுமொரு புரட்சிகர வெற்றியேயாகும் இது.



தாமஸ் ... முதல் புகைப்...

LUX
Green
LUX
Yellow
LUX
Pink
LUX
Blue
LUX
'வானவில்லின்
4 வித
வண்ணங்களில்
என் லக்ஸ் !
வெண்மையிலுங் கூட!'
என்கிருர் எம்.என்.ராஜம்

ஆடும் மயில்களே நிறைந்த தமிழ்த்திரையில் பாடும் குயிலாகவும் வந்து பிறந்த இந்த வடிவழகி, சிலகாலம் ஓய்வு பெற்றிருந்த போதிலும் இன்று மீண்டும் திரைக்கு வந்திருப்பதைப் பார்த்தால் இனி எதிர்காலம் நமக்குப் பொற்காலம் என்று தான் தெரிகிறதல்லவா?

—ஆந்திர அழகோவியம் பானுமதி.



'ஈகை இசை தரும்' என்ற தத்துவத்தை உணர்ந்து கொண்டு தான் ஈட்டிய செல்வத்தை எல்லாம் ஏழை எளியவர்களுக்குத் தானம் செய்துவிட்ட இவர் நடிகர் சமுதாயத்தின் வளர்ச்சிக்காக மீண்டும் நடிகர் சங்கத்தின் தலைவராகி இருக்கிறார். தூய உள்ளமும், திரண்ட செல்வமும் படைத்த இவரது தலைமையிலாவது வறுமையில் வாடும் துணை நடிகர்களுக்கு ஒரு நல்வழி பிறக்கும்; நடிக சமுதாயத்திற்கு என்று ஒரு கூட்டுறவு பா வகு தோன்றும் என்று எதிர்பார்க்கின்றோம்.

நேற்றுவரை பேபியாக இருந்த இவர் இன்று 'காளை வயசும் கட்டான ஸைசும்' படைத்த பருவக் குமரியாகிவிட்டார், தேக்கு மரத்தில் கடைந்தெடுத்தது போன்று இவரது உடல் பூரணப் பெண்மையை அடைந்து விட்டது; ஆனால் உள்ளம் மட்டும் இன்னும் குளிக்கும் தொட்டியில் விளையாடும் குழந்தை நிலையிலேயே இருக்கிறது.

—புதுமலரான குமாரி நாஸ்.



இம்மாத நட்சத்திரம்

மல்லிகா

மார்ச்சு

Sun	Mon	Tue	Wed	Thu	Fri	Sat
			1	2	3	4
5	6	7	8	9	10	11
12	13	14	15	16	17	18
19	20	21	22	23	24	25

கவியரசர் பாரதியார் தென்னாட்டுப் பெண்களிலேயே சேரநாட்டுப் பெண்கள் தான் சந்தன நிறமும் சதிராடும் இளமையும் படைத்த காந்தவல்லிகள் என்று கருதுகிறார், அதனால்தான் அவர் கங்கை நதி தீரத்திலே ஓடம்விட சேரநாட்டு இளம் குமரியையும் கூட்டுச்சேர்த்துக் கொள்ளுகிறார். ஆனால் சேரநாட்டிற்கு இந்த விசால ஆந்திரம் என்ன குறைந்தா போய்விட்டது என்று கேட்கும் இந்த சௌக்கார் ஜானகியைப் பார்த்தாலே இவர் இந்த நாட்டு வாலிப உள்ளங்களை தட்டி எழுப்பும் நல்ல சவுக்கு என்று தெரிகிறதல்லவா?

— உடலழகி சௌகார் ஜானகி

சின்னவிழியும், சிங்கார முகமும், சிரித்தால் குழிவிழும் செந்தாமரைக் கன்னங்களும் கொண்ட இந்த கொல்லிமலைப்பாவை நடிக்காமல் வெறும் அன்னநடை நடந்தால்கூட அல்லவா இந்த நாட்டு மக்களுடைய இதயங்கள் அந்தக் காந்தக் கவர்ச்சியில் சொக்கிப் போகின்றன.

— கன்னடத்துப் பைங்கிளி சரோஜாதேவி

இவர்கள் பாரிஸில் இருந்து வந்து இறங்கிய மைனர்கள் அல்ல. தென்னாட்டுத் திரையுலகில் தனக்கென்று ஒரு நிலையான இடத்தைப் பிடித்து வைத்துக் கொண்டுள்ள புரட்சியும், டணாலும் தான் இப்படி கோட்டும் சூட்டுமாக 'திருடாதே'யில் வந்து நம்மைத் திகைக்க வைக்கப் போகிறார்கள்.



மனைவியின் பாசந்தவழும் குளிர்ந்த முகத்திற்கு முன்னால் எப்படிப்பட்ட கவலையும் நிற்காது என்பார்கள். அப்படியிருந்தும் வடநாட்டுத் திரை ஓவியம் 'ஆஞ்சலில்' வடிவழகி ஒருத்தி அருகில் இருக்கும் போதும் அசோக்குமார் ஏன் இப்படி சோகத்தில் மிதக்கிறார்?

ரவிவர்மாவின் ஓவியத்தைப் போன்ற வாளிப்பான உடற் கட்டு; அந்த வனப்பான உடலிற்கு ஏற்ற வசீகரமான முகவெட்டு; பருவப் பூரிப்பைப் படம் பிடித்துக்காட்டும் பவள இதழ் அமைப்பு ஆகிய இத்தனையும் படைத்திட்ட இந்த அம்பிகா பப்பிச்குப் பிறகு திரைவானில் தம் அழகாட்சியைத் துவக்கத்தான் போகிறார்.

காதல் காட்சி என்ருல் இப்படி இதயம் விம்ம, இதழ்கள் துடிக்க, கண்கள் சிறுக்க பாவையர் தம் தாபத்தை வெளிப் படுத்த வேண்டும் போலும்! வடநாட்டுத் திரைவிருந்தான 'ஆஞ்சலி'ல் வரும் இலட்சியக் காதலர்கள் இவர்கள்.



துடித்த உதடும், மழமழப்பான கன்னங்களும் உடைய நடிகை 'கும்கும்'

பக்திமான் வேடத்தில்
நடிகவேள் எம். ஆர்.
ராதா சக்கைப்போடு
போட்டிருக்கும்
'சபாஷ் மாப்பிள்ளை'
நிச்சயம் நல்லதொரு
வெற்றிப் படமாக
இருக்கலாம்.

ஏவி. எம். தரப்
போகும் திரை
விருந்தான
'பாவமன்னிப்பு'
நாட்டு மக்களு
டைய இதயங்
களைக் கொள்ளை
கொள்ளப்போகும்
இலட்சியத் தயா
ரிப்பாகும்.

15 ரூபாய்களுக்கு ரேடியோ !

இந்த ரேடியோ மின்சாரமோ அல்லது பாட்டிரியோ இல்லாமலேயே இனிமையான குரல் எழுப்புகிறது. இது எங்களுடைய புதிய திட்டங்களை பிரபலப் படுததுவதற்காகவே தரப்படுகிறது. ஸ்டாக்குகள் குறைவாக இருக்கிறது.

ஏமாற்றத்தைத் தவிர்க்க இப்போதே விண்ணப்பிக்கவும்! பூரண திருப்திக்கு உத்திரவாதம் அளிக்கப்படுகிறது; இல்லை என்ருல் பணம் வாபஸ் தரப்படும்.

AMERICAN RADIO HOUSE

Goal Bagh (KM) AMRITSAR (pb)

‘கலை’க்கதம்பம் - 10

ஓவியர் அ. சீனு

உடற்கூறு - 1

கட்டுப்பாடு தந்த கட்டழகு!



கரளை கரளையான உடம்பும், கண்டவர் மயங்கும் வனப்பும் படைத்த இந்த காளப்பன் திட்டமிட்டு வளர்த்த தன்னுடைய உடலைக் கொண்டு இன்று தமிழகத்தின் தலைசிறந்த ஆணழகனாக—“மிஸ்டர் சென்னை”யாகத் திகழ்ந்துவருகிறார்.

இந்தக் கட்டான உடல் இவருக்கு திடீரென்று வந்துவிடவில்லை. இளமையில் இருந்தே தன்னுடைய பழக்கவழக்கங்களைக் கட்டுப்படுத்திக்கொண்டு, உடற்பயிற்சி நிலையம் ஒன்றிலே பயிற்சி எடுத்துக் கொண்டதால் தான் இன்று இவருடைய தசைநார்கள் எல்லாம் சொன்னபடிகேட்கின்றன.

நண்பர் காளப்பன் மட்டுமல்ல— நாட்டில் உள்ள இளைஞர்கள் அனைவருமே முறைப்படி தங்களுடைய உடலிற்கு பயிற்சி அளித்தால் இப்படிப்பட்ட கட்டுடலைப் பெற்றுவிடலாம். இன்று தமிழகத்தில் எத்தனையோ பயனற்ற மன்றங்களும் சங்கங்களும் இருக்கின்றன. அதற்கு மாறாக ஊருக்கு ஒரு உடல் வளர்ச்சிக் கழகம் இருந்து, அதில் நம்முடைய எதிர்காலத் தலைவர்களான இளைஞர்கள் எல்லாம் இவ்வாறு உடல் வளர்க்கும் கலையைப் பயின்றுகொண்டால் பின்னர் தமிழகம் பண்டைக் காலத்தில் இருந்தது போன்றே வீரத்தின் விளைநிலமாக — கூற்றுடன்று எதிர் வரினும் கூடி எதிர்க்கும் ஆற்றல் படைத்த மறவர் நாடாக மாறிவிடும்.

இந்திய சீன பாய்-பாய்

இந்தியாவிற்கும் சீனத்திற்கும் ஏற்பட்ட கலாச்சாரத் தொடர்பு இன்று நேற்று ஏற்பட்டதல்ல. கி. பி. 67-லேயே இந்தப் பண்பாட்டு உறவு இந்த இரு பெரும் ஆசிய நாடுகளுக்கும் ஏற்பட்டுவிட்டது. இந்தியாவிலிருந்து சீனத்திற்கு மதபோதகர்களாகக் கிளம்பிய புத்தபத்திரா; ஜைனபத்திரா, குமாரஜீவா, பரமார்த்தா போன்ற சான்றோர்கள் தங்களுடன் இந்தியக் குடும்பங்களையும், ஒப்பற்ற இலக்கியங்களையும்கூடக் கொண்டு சென்றனர். அந்த இலக்கிய வளங்களையெல்லாம் சீன மொழியில் மொழி பெயர்த்தும் தந்தனர். இவர்களுடைய அயராத முயற்சியால் தேங்கிக் கிடந்த சீன மொழி செழித்து வளர்ந்தது. ஒருமுறை 10000 இந்தியக் குடும்பங்களும் 3000 இந்திய பௌத்த குருமார்களும் அங்கு வாழ்ந்ததாக குறிப்புக்கள் இருக்கின்றன. குமாரஜீவாவால் இயற்றப்பட்டவைகள் என்ற 47 அறிய இலக்கியச் செல்வங்கள் சீன மொழியில் இருக்கின்றன. இந்தியாவில் இருந்து சீனத்திற்கு வந்த ஜைன குப்தர் என்பவர் மட்டுமே 37 வடமொழி இலக்கியங்களைச் சீன மொழியில் மொழிபெயர்த்துத் தந்திருக்கிறார். இப்படி எல்லாம் நம்முடன் 'பாய் பாயா'க இருந்து தன்னுடைய மொழியையும்-மதத்தையும் வளர்த்துக் கொண்ட சீனம் தான் இன்று நம்முடன் 'போர் போர்' என்கின்றது.

அறுவை சிகிச்சை

இன்றைய மருத்துவ முறையின் ஒப்பற்ற சாதனையாக அறுவை சிகிச்சை முறை காணப்படுகிறது. அதன் மூலம் எத்தனையோ தீராத வியாதிகளைக்கூட தீர்க்கும் வழி கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இவையாவும உலக வைத்தியர்களின் கனவாக இருந்த காலத்திலேயே இந்தியாவில் 'தன்வந்தரி' அறுவை சிகிச்சையில் புகழ் பெற்றவராகத் திகழ்ந்துள்ளார். சாதாரண ரண சிகிச்சை மட்டுமல்லாது இக்காலத்திலும் அபாயம் என்று கருதப்படும் மூளை ரண சிகிச்சைகளைக்கூட இவர் மிக வெற்றிகரமாகச் செய்தாராம்.

நம்பினால் நம்புங்கள்!

ஆப்பிரிக்கக்காடுகளில் உள்ள 'டிரைவர்ஸ்' என்ற ஒருவகை எறும்புகள் மிகப் பெரிய காட்டுயானைகளைக் கூட கொன்று தின்று விடுகின்றன...



சுவிட்ஜர்லாந்தைச் சேர்ந்த 'துன்டன்' என்ற ஜில்லாவில் 'தண்' ஏரிக் கரையில் உள்ள இந்த மரத்தில் இருந்து இவ்வாறு ஒரு குழாயின் மூலம் தண்ணீர் இரண்டு தலைமுறைகளாக இடைவிபாது கொட்டிக் கொண்டே இருக்கிறது...

'சூடோகு' என்ற இந்த ஜப்பானிய சக்ரவர்த்தி (1124-1164) புத்தமத நூல் ஒன்றை தன்னுடைய சொந்த இரத்தத்தை கொண்டே 135 பக்கங்களும், 1215 வரிகளும், 10500 வார்த்தைகளும் கொண்ட அரிய நூல் ஒன்றை இயற்றினார்...



யார்க்ஷயரில் பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த "தாமஸ் வெட்டர்ஸ்" என்ற இவருக்கு 7½" மூக்கு இருந்தது.

ஜாகப்வான் நீசன் என்ற இவர் 18 வயது நிரம்பிய அழகி ஒருத்தியை மணந்து கொண்டார். அவருடைய மகனை அந்த 18 வயது பாவையான தன்னுடைய மாற்றாந்தாயான 40 வயது கிழவியை மணந்துக்

தாய்நாடு காத்த

ஜார்ஜ் வாஷிங்டன்
அமெரிக்கா



ஆப்ரகாம் லிங்கன்
அமெரிக்கா



டிடரட்
பிரான்ஸ்

கரிபால்டி
இத்தாலி



மாஜினி
இத்தாலி



பிஸ்மார்க்
ஜெர்மனி



காரல் மார்க்ஸ்
ஜெர்மனி

லெனின்
இரஷ்யா



ஸ்டாலின்
இரஷ்யா

தந்தையர்கள்...



சன்யாட்சன்
சைனா



டி வேலரா
அயர்லாந்து



ஜோஸப்பில்ஸுட்ஸ்கி
போலந்து



கமால்பாட்சா
டர்க்கி



அண்ணல் காந்தி
இந்தியா



ஜின்னா
பாகிஸ்தான்



ஜவகர்லால் நேரு



ராஜாஜி



காமராஜர்

6 புதிர்

குறையாத தூரம்

1. ஒரு பரந்தவயலில் இரண்டு நண்பர்கள் 400 அடி இடை வெளியில் நின்றுகொண்டிருக்கிறார்கள். இருவரும் ஒரே வேகத்தில் ஒருவரை ஒருவர் பார்த்தபடியே நடந்துகொண்டிருக்கிறார்கள். அப்படி நடந்துகொண்டிருந்தும் 200 அடிகள் கடந்த பிறகு, அவர்கள் இருவரும் சந்திப்பதற்கு பதில் முன்பு இருந்த 400 அடி இடை வெளியே இவர்களுக்குள் இருந்தது. இது எப்படி?

எத்தனை அடி?

2. ஒரு நீண்ட கழி, நீரில் மூழ்கியிருக்கும் பொழுது அதனுடைய $\frac{1}{4}$ பகுதி நீரில் புதைந்திருக்கிறது. $\frac{1}{3}$ பகுதி தண்ணீரில இருக்கிறது. தண்ணீருக்கு வெளியே 17 அடி 6 அங்குலம் நீட்டிக்கொண்டிருக்கிறது. அப்படி என்றால் அந்தக் கழி எத்தனை அடி நீளம் உடையது?

விடை

1. இவன் நண்பனை நோக்கி நடக்கத் துவங்கியதுமே அவன் இவனைப் பார்த்துக்கொண்டே பின்னால் நடந்து போய்க்கொண்டிருக்கவேண்டும். அப்படி இருந்ததால் தான் இவன் 200 அடி முன் நடக்க அவன் 200 அடி இவனைப் பார்த்துக்கொண்டே பின் நடந்து, இடையில் உள்ள தூரம் முன் இருந்தபடி 400 அடியிலேயே இருந்தது.

2. இந்தக் கணக்கைப் படித்த ஒவ்வொருவரும் 42 அடி என்று எளிதாக விடை கூறிவிடுவார்கள். ஆனால் இதிலேதான் புதிர் மறைந்துகொண்டிருக்கிறது. ஏன் எனில் சேற்றில் புதைந்து கொண்டிருக்கும் பகுதியையும் தண்ணீருக்குள் இருக்கும் பகுதியாகவே நாம் எடுத்துக் கொள்ளவேண்டும். அப்படிப் பார்க்கும்போது 26 அடி 3 அங்குலம் என்பதுதான் சரியானவிடை.

7 இவர்கள் அனுபவங்கள்

பிஸ்தாக்கொட்டை சாமியார்

பம்மல் சம்பந்த முதலியார்

1864 - ஆம் வருஷம் புதுச்சேரியிலிருந்து தனவந்தரான கூனிச்சப்பட்டு லக்ஷ்மணசாமி செட்டியார் என்பவர் தன் குடும்பத்தார் பலருடன் காசி யாத்திரைக்குச் சென்றார். அப்போது அவருக்கு அத்யந்த சிநேகிதராயிருந்த என் தகப்பனாரையும் உடன் அழைத்துச் சென்றார்; என் தகப்பனாருடன் என் தமையனார் ப. ஐயாசாமி முதலியாரும் சென்றார். யாத்திரையாக இப்படிப்பட்டவர்கள் சிப்பந்திகளுட்பட, ஏறக்குறைய நூறு பேர் இருந்தனர்; இவர்களுள் புதுச்சேரியிலிருந்து ஒரு சாமியாரும் இருந்தார். இத்தனை பேரும் யாத்திரை செய்வதற்காகச் செட்டியார் அவர்கள் ஒரு ஸ்பெஷல் வண்டி (Special Train) யையே ஏற்பாடு செய்திருந்தார்.

யாத்திரை செய்து கொண்டு போகும் பொழுது, காலையில் இஷ்டமான இடத்தில் இந்த ஸ்பெஷல் வண்டி நிறுத்தப்படும். எல்லோரும் இறங்கி ஸ்நானம் எல்லாம் செய்து பிறகுதான் சமையலுக்கு ஏற்பாடு செய்வார்கள். சமையலாக நாழியாகும்; ஆயினும், இந்தச் சாமியாருக்கு மாத்திரம் யாத்திரைக்குச் செட்டியாருடன் சென்ற சில வயோதிகர்களான விதவைகள் ஒரு பெரிய புட்டியில் பிஸ்தாக் கொட்டைகளை நறுக்கிக் கல்கண்டுடன் கலந்து வைத்திருப்பார்களாம். மற்றவர்களெல்லாம் பசியுடன் காத்திருக்க நம்முடைய சாமியார் மாத்திரம், காலையில் பல் விலக்கியவுடன் இந்த பிஸ்தாக் கொட்டையையும் கல்கண்டையும் சாப்பிட்டு விட்டு 'ஹாய்' என்று இருப்பாராம். இரண்டொரு நாள் காலையில் பட்டினியால் கஷ்டப்பட்ட என் தமையனார் பசியாற்றாது மூன்றாவது தினம், மெல்ல சாமியார் அறியாதபடி அவருக்கு என்று வைத்திருந்த புட்டியினின்றும் கொஞ்சம் பிஸ்தாக் கொட்டையையும் கல்கண்டையும் எடுத்துச் சாப்பிட்டு விட்டாராம்.

இதையெல்லாம் என் தமையனார் எனக்குக் கடிதம் மூலம் தெரிவித்தார். அக்கடிதங்கள், என் பழைய கட்டுகளில் எங்கோ இருக்க வேண்டுமென நினைக்கிறேன். பிறகு, என் தமையனுக்கு நான் நிருபம் எழுதும் போதெல்லாம், "உங்கள் பிஸ்தாக் கொட்டைச் சாமியார் எப்படி இருக்கிறார்?" என்று கேட்பேன் இந்த யாத்திரை முடிவு பெறும் வரையில். இது தான் பிஸ்தாக் கொட்டை ஸ்வாமிகள் எனும் பாத்திரம் என் மனதில் உதித்ததற்கு அங்குரார்ப்பணம்.

8 தத்துவம் :

சித்தர் காட்டிய தித்திக்கும் நெறி

"சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே சாத்திரச்
சந்தடிகளிலே
கோத்திரச் சண்டையினிலே
ஆதியிலே அபிமானித்து அலைகின்ற"

இடைக் காலத்திலே பிறந்திருந்தாலும், தன்னுடைய சிந்தனைத்தெளிவால் சித்தராக மாறிய வள்ளலார், . . .

"செத்த பிறகு சிவலோகம் வைகுந்தம்
சேர்ந்திடலாம் என்று எண்ணி யிருப்பவர்
பித்தமனிதர், அவர் சொல்லும் சாத்திரம்
பேய்உரையாம் என்று இங்கு ஊதேடா சங்கம்"

என்று இக்கால பகுத்தறிவுவாதிகளும் சொல்ல அஞ்சும் ஒன்றை மிகத் துணிந்து வெளியிட்டார். சாத்திரச் சேற்று நிலத்தில் சிக்கிச் சிதைந்து கொண்டிருந்தவர்களின் சிந்தையை,

"நால்வருணம் ஆச்சிரமம் ஆசாரம் முதலாம்
நவின்றகலைச் சரிதமெல்லாம் பிள்ளை விளையாட்டே"

என்று தட்டி எழுப்பினர். கண் மூடிப் பழக்கங்களை எல்லாம் மண் மூடச் செய்த முதல் சீர்திருத்தவாதியான இராமலிங்க அடிகள் பின்னர் தமிழர் கடைப்பிடிக்க வேண்டிய தூய நெறி எது என்பதையும்,

"மார்க்கம் எலாம் ஒன்றாகும் மாநிலத்தீர் வாய்மையிது
தூக்கம் எலாம் நீக்கித் துணிந்து உளத்தே —
ஏக்கம் விட்டுச்
சன்மார்க்க சங்கத்தைச் சார்ந்திடுமின்! சத்தியம், நீர்
நன்மார்க்கம் சேர்வீர் இந்நாள்"

என்று குறித்துக் காட்டினர். சமயத்தைப் பொறுத்த மட்டில் ஒரு பகுத்தறிவுவாதியாக இருக்கின்ற வள்ளலார், ஏழைஎளியவர்களைப் பற்றி எண்ணும் பொழுது,

"புன்செய்க் களி உண்ணும் மனையில்
சர்க்கரை கலந்து காய்ச்சுபால் கேட்டு
உண்ட கடையேன், துளி அவர்க்கு உதவேன்"

என்று தனியுடைமைக்காரர்களின் மீது பாயும் பொதுஉடைமைக் காரராகவும் மாறி விடுகிறார்.

இத்தகைய சான்றோரை — மனித சமுதாயத்தை வாழ்விக்க வந்த வள்ளலை — இன்று தமிழர்கள் மறந்திருந்தாலும் எதிர் காலத்தில் அவரைத் தங்களுக்கு வழி காட்ட வந்த மனித தெய்வமாகவே போற்றிப் புகழ்வார்கள்.

9 விஞ்ஞானத்தின் வேகம்

எண்.	வேகம் மணிக்கு	பிரயாணிகள எண்ணிக்கை
1	575 மைல்கள்	88 முதல் 100 வரை
2	550 மைல்கள்	120 முதல் 140 வரை
3	600 மைல்கள்	124 முதல் 150 வரை
4	560 மைல்கள்	170 முதல் 220 வரை
5	500 மைல்கள்	70 பேர்கள்
6	600 மைல்கள்	130 பேர்கள்
7	500 மைல்கள்	90 முதல் 110 வரை

இப்பொழுது சொல்லுங்கள்

தன்னுடைய ஓவியக் கூடத்திற்கு உள்ளூர் பிரமுகர் ஒருவரை அழைத்து வந்த ஓவியர் "நான் ரவிவர்மாவைப் பார்த்து காப்பி அடித்ததாக சில முட்டாள்கள் கூறுகிறார்கள். இனி ஒருமுறை யாராவது அப்படிக் கூறுவதைக் கேட்டால் அவர்களுடைய மண்டையையே உடைத்து விடுவேன். எங்கே இப்போது சொல்லுங்கள்; என்னுடைய ஓவியங்கள் ரவிவர்மாவைப் பார்த்து காப்பி அடிக்கப்பட்டவைகளா?" என்றார்.

மிச்சத்தை இப்படித் தள்ளும்

ஒருமுறை கவிஞர் ஒருவரும், அவருடைய நண்பரான வியாபாரி ஒருவரும் புகை வண்டியில் இரண்டாவது வகுப்பில் பிரயாணம் செய்து கொண்டிருந்தனர். கவிஞர் எதிரில் வரும் இயற்கைக் காட்சிகளை எல்லாம் 'ஆஹா! ஊஹூ' என்று வர்ணித்துக் கொண்டிருந்தார். எரிச்சல் அடைந்த வியாபாரி இவரை எப்படி அடக்குவது என்று யோசித்துக் கொண்டிருந்தார்.

இந்த நேரத்தில் அழகிய இயற்கைக் காட்சிஒன்றை கண்ட கவிஞர் "இந்தக் காட்சியை 10 நிமிஷம் அனுபவிப்பதாக இருந்தால் 100 ரூபாய் தருவேன்" என்றார். அவ்வளவுதான். அபாய அறிவிப்புச் சங்கிலியிடம் பாய்ந்து அதை இழுத்து வண்டியை நிறுத்திய வியாபாரி, "பத்து நிமிஷம் என்ன அரைமணி நேரம் ஆனந்தமாய்ப் பாரும். ஆனால் முதலில் நூறு ரூபாயை எடுத்து அதோ வரும் கார்டிடம் 50 ரூபாய்களைக் கொடுத்து விட்டு மிச்சத்தை இப்படித் தள்ளும்" என்றார்.

வீரத்தின் விளைநிலம்

[ராதா]

விஞ்ஞான விடிவெள்ளி தோன்றிவிட்ட இந்தக் காலத்தில் போர் என்றால் போர்த்தளபதிகள் வெங்கொடுமை விளையாடும் சாக்காடான போர்க்களங்களுக்கு நேரிலே செல்ல வேண்டும் என்பதில்லை. போர் நடக்கும் இடங்களுக்கு பல காதங்கள் அப்பால், பாதுகாப்பு அறைகளிலே இருந்துகொண்டே கூட வெறும் உத்தரவுகளைத் தம் படைவீரர்களுக்கு தொலைபேசியின் மூலம் அனுப்பிக்கொண்டிருந்துவிடலாம்.

ஆனால் தமிழகம் வீரத்தின் விளைநிலமாக இருந்த அந்தக் காலத்திலோ நிலைமை அப்படி அல்ல. தானைக்குத் தலைமை ஏற்போர் யானைக்கு அம்பாரி கட்டி அதில் தாமே முன் செல்ல வேண்டிய நிலைமை இருந்தது. அதனால் களப்பலி என்றால் முதற் பலியாகும் திண்மை உள்ளமும், ஒளிறுவாள் அருஞ்சமம் முறுக்கி களிறெறிந்து பெயரவல்ல வீரமும் அவர்களிடம் படிந்தன.

இதனால் தான் பண்டைய தமிழர் சமுதாயத்தைப் படம் பிடித்துக் காட்டவந்த புலவர் பெருமக்கள் "கல் தோன்றி மண் தோன்றாக் காலத்து வாளோடு முன் தோன்றி மூத்த குடி" என்று அதனை ஏற்றிப் போற்றுகின்றார்கள். இவ்வாறு பிறக்கும் போதே வாளோடு பிறந்து விட்டதால் தான் தமிழ் மறவர், மானத்தை இழப்பதற்கு மறுத்து மரணத்தை ஏற்பதற்கு மட்டும் எப்போதும் தயாராக இருந்தார்கள். ஆனால், அந்தமரணம் நோயால் வரலாகாது; மாறாக வாளால் வர வேண்டும்! என்று விரும்பினார்கள். எனவேதான் குழந்தை இறந்து பிறந்தால் கூட அதனை வாளால் வெட்டிப் புதைத்தார்கள். இப்படிப்பட்ட மறவர் குடியில் — பழங்காலத் தமிழகத்தில் தன்னுடைய உள்ள வன்மையாலும், உடல் வன்மையாலும் புலவர் பாடும் புகழ் பெற்ற இரு ஆற்றல் அரசர்களைத்தான் அடுத்து வரும் பக்கங்களிலே சந்திக்கப் போகின்றீர்கள். வீரத்தின் விளைநிலமான தமிழகத்தின் பெருமையை உணர்ந்து மகிழப் போகின்றீர்கள்!

பசி வந்தால் பத்தும் பறக்குமா ?

'பசி வந்திடப் பத்தும் பறந்து போகும்' என்பது தமிழகத்தில் வழங்கி வரும் ஒரு பழமொழி. ஆனால் இது பெயரளவில்தான் பழமொழியாக இருக்கிறதே தவிர, உண்மையில் இது புது மொழிதான். ஏன் எனில் இக்காலத்தைப் போல பசிவந்ததும் பத்தையும் பறக்கவிட்டுவிடுகின்ற பண்பு அக்காலத்தில் இல்லை. வையகத்தோடு வானகத்தையும் சேர்த்துத் தருவதாக இருந்தால்கூட அக்காலச் சான்றோர் அல்லவை செய்யார். அதனால்தான் பொய்யா மொழியாரும் ஒருவனுடைய தூய உள்ளமும் குழம்பிப் போகக்கூடிய சூழ்நிலையான ஈன்றாளின் பசியையே கண்பதாக இருந்தாலும் செய்யற்க சான்றோர் பழிக்கும் வினை என்று திட்டவட்டமாக எச்சரித்துவிட்டுச் சென்றார்.

அத்தகைய தூய தமிழ் நெறியிலே வந்த மறவனை இந்தச் சேரமான் கணைக்கால் இரும்பொறையும் பசி வந்த போதுகூட மானத்தை இழக்க மறுத்தான். நீர்வேட்கை அவனுடைய உயிரையே அடக்கியபோதுகூட பிறரிடம் 'ஈ' என இரக்கமறுத்தான். பிறரிடம் கைநீட்டி வாங்குவதை விட தன் உயிரைப் புறம்போக விடுதலே மேல் என்று எண்ணி மாண்டான்; தமிழ் இலக்கியத்தில் என்றும் சாகாத இடம் பிடித்துக் கொண்டான்.

மலைவளம் மிகுந்த சேரநாட்டை ஆண்ட மறவலி மிகுந்த இந்தச் சேரமான் போரிலே பகைவரும் போற்றும் புலியாகவே இருந்தான். இவனுடைய தலைநகரான தொண்டியோ புலவர் போற்றும் எழில் நகராகவும், எயில் உடைய வியன் நகராகவும் இருந்தது. இதனால் இவனுடைய புகழ் தமிழகத்து திசை தோறும் இசை போக்கிக் கொண்டிருந்தது. இந்நிலையில் ஒருநாள் போர்க்களத்தையே தன்னுடைய விளையாட்டுக் கூடமாகக் கருதிக் கொண்டிருந்த இவன் சோழன் செங்கணானிடம் தோற்றான். திருப்போர்ப்புறத்தில் நடந்த அந்தப் போரில் இவன் 'வெற்றி அல்லது வீரமரணம்' என்று இறுதிப் போர்தான் செய்தான் எனினும், இரண்டும் கிட்டாது சோழர் படையிடம் சிறைப்பட்டான்.

கழுமலம் என்ற இடத்தில பாசறையில் நினற வேழம் மதம் பிடித்து அலைந்தபோது யாராலும் அடக்க முடியாத அதைத் தான் ஒருவனே அடக்கியதையும்—களிறுகளையே அடக்கிய தான் இன்று கரங்களுக்கு விலங்கு பூட்டப்பட்டுக் கிடப்பதையும் கண்டு தவித்தான். தன்னை நாடி வந்தவர்களுக்கு எல்லாம் வரையாது வாரி வழங்கிய தான், கேவலம் உண்ணும் நீருக்தக்கூட பிறரிடம் கை நீட்டவேண்டி இருப்பதைக் கண்டு கொதித்தெழுந்த அவனுடைய மறவர் உள்ளம் மானமே பெரிது என்று எண்ணியது. அந்த மானம் மாயாது இருப்பதற்காகச் சேரன் தன்னையே மாய்த்துக்



கொண்டான். வீரத்தோடு விவேகத்திலும் சிறந்திருந்த அவனால் இறப்பதற்கு முன்பு பாடப்பட்ட

"குழவி இறப்பினும், ஊன்தடி பிறப்பினும்
'ஆள்அன்று' என்று வாளின் தப்பார்
தொடர்ப் படு ஞமலியின் இடர்ப்படுத்து இரீஇய
கேள்அல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை இன்றி, வயிற்றுத் தீத்தணிய
தாம் இரந்து உண்ணும் அளவை
ஈன்மரோ, இவ் உலகத்தானே?"

என்ற புறநானூற்றுப் பாடல் தமிழர் சமுதாயம் இருக்கின்ற வரையில் அவர்கள் ஒவ்வொருவருடைய இதயத்திலும் இருக்க வேண்டிய இலட்சிய முழக்கமாகும்.

வில்லேர் உழவன்

இன்று கற்றறிந்த தமிழர்களிடம் 'வில் வித்தையில் சிறந்தவன் யார்?' என்று கேட்டால் 'அருச்சுனன்' என்ற மறுமொழிதான் சட்டென்று வரும். ஆனால் அருச்சுனனை விடப் பன்மடங்கு விசையுடன் நாணேற்றத் தெரிந்திருந்த இந்தத் தமிழ் மறவன் — வல்வில் ஓரி என்றே புலவர்களால் அடை கொடுத்துப் பாராட்டப்பட்டவன் -ஏனோ மறைக்கப்பட்டு விட்டான்.

இந்த இலக்கிய வீரன் இதிகாச வீரனான இராமனைப் போன்றே பல பொருள்களைத் துளைத்துக்கொண்டு செல்லும் பகழி எய்யப் பழக்கப்பட்டிருந்தான். இதிகாச வீரனான இராமன் தன் தோள் வலிமையை சுக்ரீவனுக்கு உணர்த்துவதற்காக ஏழு மராமரங்களைத் துளைத்தது போன்றே இந்தப் போர் மறவனும் ஓரே அம்பில் கொல்ல வரும் வேழம் ஒன்றையும், அதற்குப் பின் நின்ற கொடிய வேங்கையையும், அதற்கு அப்பால் துள்ளித் திரிந்த புள்ளிமான் ஒன்றையும், அந்த மானிற்கும் மருங்கே நின்ற காட்டுப் பன்றி ஒன்றையும், அடுத்ததாக எளிதில் பிளக்க இயலாத உடல் உடைய ஒரு உடும்பையும்வீழ்த்தி நம்மை வியப்பிலே ஆழ்த்துகிறான்.

சாதாரணமான ஒருவர் எய்யும் அம்பு வேழத்தைக் கூட ஊடுருவாது; ஆனால், மேலை நாட்டு யுலிஸசுடன் வைத்து எண்ணத் தக்க நம் வல்வில் ஓரி எய்த அம்போ, வேழத்தையும், வேங்கையையும், புள்ளிமானையும் ஊடுருவியதோடு நில்லாமல், இக்காலத்துப்பாக்கிக் கொண்டு துளைத்தாலும் எளிதில் துளைக்க இயலாத காட்டுப் பன்றியையும், உடும்பையும் கூட ஊடுருவிச் சென்றிருக்கிறது.

இதிலே புலவருடைய கற்பனை இருந்தாலும், அதிலே ஒருவித இயற்கை இழைந்தோடுகிறது. முதலில் உயரம் அதிகமான வேழம், பின்னர் அதனினும் குறைந்த உயரமுள்ள வேங்கை, அடுத்து அதனினும் குள்ளமான கலைமான், பின்னர் அதனினும் தாழ்ந்த பன்றி, இறுதியாக தரையோடு தரையாக ஊர்ந்து செல்லும் உடும்பு என்ற இயற்கையோடு இயைந்த வரிசை முறையைப் பார்க்கும் போது வல்வில்

ஓரிக்கு இந்த வலிமை இருந்திருக்க வேண்டும் என்றே எண்ண வேண்டியிருக்கிறது. இதனை,

''வேழம் வீழ்த்த விழுத் தொடைப் பகழி
பேழ் வாய் உழுவையைப் பெரும் பிறிது உறீஇ
புழல் தலைப் புகர்க் கலை உருட்டி, உரல் தலைக்
கேழற் பன்றி வீழ, அயலது
ஆழல் புற்றத்து உடும்பில் செற்றும்''

என்ற அழகிய புறநானூற்றுச்சொல்லோவியமாக்கியுள்ளார் வன்பரணர் என்ற சங்கச் சான்றோர். அதனையே நாமும் இங்கு இருவண்ண அழகோவியமாக்கியுள்ளோம்.

நாளொரு மேனியாய்
சரும எழில் மேம்பட
புதிய ரெக்ஸோனா
துணையோடு
ரெக்ஸோனா சோப்பின் மிரு
துவான நுரையில் அடங்கி
யுள்ளது கேடில். எழிலூட்
டும் பற்பல எண்ணெய்கள்
இணைந்த விசேஷத் தைல
மான கேடில் சருமத்தின்
ஊடேசென்று, அதை மென்
மையுடனும், மழமழப்பாக
வும் மிளிரச் செய்து,...உங்
கள் மேனி வனப்பை ஓங்கச்
செய்கிறது. எடுப்பான நறு
மணத்தினால் உங்களை மணி
க்கணக்கில் புதுமலர்ச்சியுட
னிருக்கச் செய்கிறது. உங்
கள் அன்றாட அழகுசாதனத்
துக்குகந்தது ரெக்ஸோனா.
Rexona
புதிய மேலுறை,
புதிய வடிவழகு, புதிய
பச்சை வர்ணம் ஆகிய
வற்றோடு கூடிய புதிய
ரெக்ஸோனாவை
நீங்கள் விரும்புவீர்!
புதிய ரெக்ஸோனா—
உங்கள் சருமத்திற்கு அனுகுணமானது
RP. 169-50 TM

அழியா உயிரோவியங்கள்!

[கௌதமன்]

வானத்து வெண்மதியை 'வா'—வென்றழைத்தேன்; வரவில்லை! காயும் கதிரவனைக் காயாதே என்றுரைத்தேன்; கேட்கவில்லை! ஓடும் அருவி தன்னை ஓடாதே நில் என்றேன்; நிற்கவில்லை! ஆடுகின்ற மயிலையும், பாடுகின்ற குயிலையும் அசைவற்றிருங்களென்றேன் — இருக்கவில்லை!

'இவைகளெல்லாம் ஏன் நான் சொன்னபடி செய்யவில்லை...?' என்னை நானே கேட்டுக்கொண்டேன். நானொரு பெரிய கலைஞனயிற்றே — கவிஞனயிற்றே — புலவனயிற்றே — நான் சொல்லியுமா அவைகள் செய்யாமலிருக்க வேண்டும்? என்ன கர்வம் இவைகளுக்கு...!

'ஹூம்! நீயென்ன...? உன்னைப் படைத்தவனே சொன்னுலும் எங்கள் வேலையை நாங்கள் செய்து கொண்டுதானிருப்போம்!' என்றல்லவா போய்க் கொண்டிருக்கின்றன; போகட்டும்! போகட்டும்...!'

'போகட்டும் — என்ன தம்பி! போகாமலிருக்க முடியாதே எங்களால்! போவதும், காய்வதும், ஓடுவதும், ஆடுவதும் எங்கள் தொழில். இயற்கையின்பாற்பட்டதவைகள்; அவைகளைச் செய்யாமலிருக்க முடியாது எங்களால். நாங்கள் கிடக்கட்டும்; நீ மட்டுமென்னவாம்...? எங்கே எதைப் பற்றியும் கொஞ்சம்கூட சிந்திக்காமல் ஒருகணம் மௌனமாயிருந்து விடு பார்ப்போம்... ஏன் நெளிகிருய்? முடியாதல்லவா உன்னுலும்? பின் ஏன் வீம்பு பேசுகின்ருய்? கட்டளையிடுகின்ருய் — அதைச் செய்; இதைச் செய்...என்று! தம்பி, நீ ஒரு கலைஞனயிற்றே என்று உனக்குச் சொல்லுகிறேன்: 'இயற்கையின் பண்பை மாற்றுவது கடினம். இயற்கை சரளத் தன்மை வாய்ந்தது. ஆனல், நீ இழுத்த இழுப்பிற்கு அது வராது; அதன் பாதையைக் கூர்ந்து கவனிக்கத்தான்—ரசிக்கத்தான் உன்னையது அழைக்கும். அதன் பின்னுல் நீயும் உன்னைப் போன்ருரும்தான் போக வேண்டும்...! இதுதான் ரகசியம்!'

* * *

முகத்திலறைந்தாற் போல் நடந்த இந்த உரையாடல் எனக்கும் முழுமதிக்கும் நடந்தது. 'எங்கே?' — என்று கேட்கிறீர்களா? மன அமைதி தேடி முல்லைக் காட்டிற்குப் போனேன்; அங்குதான் இத்தனை அலங்கோலமும்...! வீணுக வாயைக் கொடுத்து விட்டு அகப்பட்டுக் கொண்டேன். சரியான பாடம் கற்றுக் கொடுத்து விட்டது இயற்கை எனக்கு...! ஏதோ மனவேதனையில் எதையோ சொன்னேன்; எதுவோ கிடைத்தது. ஹூம்! அத்தனையும் வேண்டும் எனக்கு!

'என் காதலி சந்திரா எங்கிருந்தோ வந்தவள்; என்னைக் காதலித்தாள் — இல்லை—இல்லை

நானும் அவளைக் காதலித்தேன். ஏதோ ஒரு காரணத்தால் அவள் என்னைப் பிரிந்தாள் — நானோ பிரிக்கப்பட்டேன். போகும் போது என் உடலையெறிந்து விட்டு, என் உயிரை மட்டும் தூக்கிச் சென்று விட்டாளவள். ஆமாம்! பொதிகை மலை தாண்டி, மேற்கு மலைத் தொடரில் சென்று ஒளிந்து கொண்டாள் சந்த்ரா. இங்கு நானோ நிலவைப் பறி கொடுத்த நீள் விசும்பைப் போல் விம்மி விம்மி யழுதேன்; வேதனை கொண்டேன். என் சந்திரா என்னைப் பித்தனுக்கி விட்டாள்! காதலித்த போது என் இதயத்துள் உலவினுள்—காலம் வந்த போது என் இதயத்தையே பெயர்த்தெடுத்துப் போய் விட்டாள்! நன்றி கெட்டவள்! சேச்சே — பாவம் — திட்டக் கூடாது; அழுவாள் அந்த ஆரணங்கு! அவள் அழுத கண்ணீர் என் நெஞ்சிற் கசியும் செங்குருதியல்லவா...?

நான் செய்தது தவறு; முதலில் நான் அவளைக் காதலித்திருக்கக் கூடாதல்லவா? பின் ஏன் காதலித்தேன்? இதற்கான பதிலைத் தேடித்தான் நானன்று முல்லைக் காட்டிற்குப் போனேன்; ஆனுல் அங்கு பதில் கிடைக்கவில்லை — பளீரென்ற அறைதான் கிடைத்தது'

நான் எண்ணியபடி என் சந்திராளை நான் காதலிக்காதிருக்கச் செய்த முடிவை 'சதித் திட்டம்' என்றே இயற்கை சொல்லாமற் சொல்லிற்று. 'காதலிப்பதும், அதற்குத் தடைக் கற்கள் வருவதும் ஒருவர் வாழ்க்கையில் சகஜம்; இயற்கையானதும் கூட. இதற்குப் பயந்தோடுபவன் தான் கோழை! மேலும் எல்லோரையுமே நாம் காதலித்து விடுவதில்லை—காதலிக்கவும் முடியாது—அப்படிக் காதலிப்பது தவறு—அதற்குப் பெயர் காதலுமல்ல! எனவே காதலிப்பதென்பது மனதிற்குப்பிடித்த ஒருத்தியிடம் மனதைப் பறி கொடுப்பதும், காலம் வரும்போது அதற்காகத் தன் உயிரையே அர்ப்பணிப்பதென்பதும் தானே தவிர ஒருத்தி மனதைத் தொட்டு விட்டு, அவளைத் தன்பால் ஈர்த்து விட்டுப் பிறகு சாதி தடுக்கிறதே—சம்பிரதாயம் தடுக்கிறதே—இனம் தடை செய்கிறதே—மனமும், குணமும் தடை செய்கிறதே என்றெல்லாம் வீம்பு பேசுபவர் கோழையினும் கோழை மட்டுமல்ல; கொடுந் துரோகியர் பட்டியலின் முதல் தலைவனும் அவன் தான் ஆவான் —எனவே அதைவிடக் காதலிக்காமலிருந்து விடுவது நல்லது!' —என்றெல்லாம் எனக்கவைகள் அறிவுரை பகர்ந்தன.

இந்த அறிவுரைகளையெல்லாம் கேட்டு விட்டு என்னுல் மேலும் வாளாயிருக்க முடியவில்லை. கலங்கிய கண்களுடன் என் சோகக் கதையை அந்த இயற்கைச்செல்வங்களிடையே எடுத்துச் சொன்னேன். "என் காதலி—என் உயிரான சந்திரா —என்னைப் பிரிந்து போன கோபத்தாலும்—துக்கத்தாலும் அவளை நான் வெறுத்தேனேயல்லாது—இனியும் அவளைக் காதலிக்கக் கூடாது என்று நினைத்தேனேயல்லாது—உண்மையில் நிலைமையப்படியல்ல" என்று நான் அவைகளுக்கு எடுத்துரைத்தேன். என் நெஞ்சில் நிறைந்த அந்தப் பேரழகி என் கண்ணின் கருமணிகளோடு இணைந்து விட்டவள். நான் நினைக்கும் போது என் மனக் கண்ணுல் அவள் நினைவு பிம்பத்தை என்னுல் பார்க்க முடியும்; ஆனுல் அத்தகைய மன முருக்கும் எழிலரசிதான் இன்று என் எதிரே வர முடியாமற் தவிக்கிருள். காரணம் அவள்

இங்கில்லை; எங்கோ கிடக்கிறாள். எனக்கும் அவளுக்குமிடையே, கடலும், மலையும், கானருவியும், பெரு நதியும் எல்லைக் கோடுகளாயிருந்து எங்களைத் தடுத்து நிறுத்துகின்றன. மனத்தால் தவிர எங்களால் பேசிக் கொள்ள முடியாது; மனக்கண்ணால் தவிர நாங்கள் பார்த்துக் கொள்ள முடியாது. இதை எண்ணித்தான் இருவருமே புலம்புகின்றோம்—ரத்தக் கண்ணீர் வடிக்கின்றோம்! வருங் காலத்திலாவது என்றாவது ஒரு நாள் உயிரோடு சந்திப்போமா? உளமாறத் தழுவிக் கொள்ளுவோமா...? என்றுதான் இருவருமே ஏங்கி ஏங்கிச் சாகிறோம்! எங்கள் மனத்திருக்கும் வேதனை நீர் மொண்ட கருமேகங்களைப் போன்றது. அது குளிர் தென்றல் பட்டால், மள மளவென்று கண்ணீராய்ப் பொழிய ஆரம்பித்து விடும். எனவேதான் மனித சஞ்சாரமே அற்ற இது போன்ற இடங்களிலே வந்து மன வேதனைக்கு ஆறுதல் பெற்றுச் செல்லுகிறோம் நாங்கள். உங்களைப் போன்ற இயற்கைத் தெய்வங்களும் எங்களுக்குத் துணையில்லையென்றால் அவள்—எனதருமைக் காதலி—என்னைப் பிரிந்த மறுதினமே இறந்துபட்டிருப்பேன். ஆனால், உங்களைப் போன்ற இயற்கைச் செல்வங்கள் எம் போன்றோர்க்கு ஆறுதலாயும், அமைதி தரும் பெட்டகமாயும் அமைந்திருப்பதால்தான் இன்று நோய்களுடன் போரிட்டுக் கொண்டிருந்தாலும், தளராத மனவுறுதியுடன் என்றாவது ஓர் நாள் என் காதலியைக் கண் குளிரக் கண்டு விட்டே சாகலாமென்ற மனத் துணிவோடு நானிருக்கின்றேன்...!"

என்றெல்லாம் என் சோகக் கதையைக் கண் கலங்க அந்த முல்லைக்காட்டு இயற்கை வளங்களுக்கு தனிமையில் கூறினேன்.

ஆனால் அது கேட்ட அவைகளோ கலகலவென்று சிரித்துவிட்டு:

"தம்பி! உன்னையோர் தைரியசாலியென்றே நினைத்திருந்தோம்; ஆனால், நீயோ இவ்வளவு கோழையாக இருக்கின்றாய்! உன்னையோர் கலைஞனென்கிறாய்—எழுத்தாளன் என்கிறாய்—கவிஞனென்றும் கூட பெருமைப்பட்டு கொள்கிறாய்; ஆனால் இந்த ஒரு சின்ன விஷயம் உனக்குத் தெரியவில்லை! காதலிப்பதென்பது இறுதியில் சாவதென்பதற்குத் தானா...? எவ்வளவு மதியீனம், தம்பி இது! ஒன்று சொல்லுகிறோம் கேள்: வாழ்வதற்குத்தான் காதலிப்பது; சாவதற்கோ பிரிவதற்கோ அல்ல! கோழையுள்ளத்தவனின் அத்தகைய சித்தாந்தம் இனியும் இந்த உலகத்தில் வேண்டாம் தம்பி! உன் காதலி உன்னை விட்டுப் பிரிந்திருந்தால் விரைவில் வருவாள்; அவள் வரவில்லையே என்று அவளை வெறுக்காதே — தூற்றாதே — அவளைப் பிரிந்த சோகத்தால் நீயும் சாக நினைக்காதே — அது மடமை! அந்தப் பழமையை விட்டு விடு—புரட்சிப் பாதைக்கு—புதிய பாதைக்கு வா—உன் காதலியை அடையப் போராடு! தூய்மையான அவள் இறுதி வரையில் உனக்குக் கிடைக்காவிட்டால்—அதற்காக வருந்தாமல் அவளை இவ்வுலகில் எங்கேயாவது ஓர் மூலையில் நிம்மதியாக வாழ விடு! ஏன் நீயும் கூடத்தான் வாழ வேண்டும்!"

என்று முடித்தன அவைகள். நானோ அவ்வாறுதல் கொண்டு புதியவனாக வீடு திரும்பினேன். இன்னும் வாழுகிறேன்—ஆனால் என் காதலி மட்டும் இன்னும் வரவில்லை! பரவாயில்லை...! வாழட்டும்! அவள் எங்கிருந்தாலும் வாழட்டும்!

தாகங்கொண்டவன் கத றுவது போல புதுமுகங்கள் தேவை என்று கதறிக் கொண்டிருக்கும் தமிழ்த் திரையுலகிற்கு கிடைத் துள்ள இந்த இளைஞரை-பல்வேறு நாடகங்களை தன்னுடைய நகைச்சுவை நடிப் பால் கை தூக்கி விட்ட இராமதாஸை — தயாரிப்பாளர்கள் பயன்படுத்திக் கொண்டால்தமிழகத்திற்கு நல்லதொரு நகைச்சுவை நடிகர் கிடைப்பார்.

செய்திகள்

குடியரசு நாளில் குடியரசரானர்

பிரபல திரைப்பட நடிகர் பாலாஜிக்கும் ஆனந்தவல்லிக்கும் குடியரசு தினத்தன்று கேரளாவைச் சேர்ந்த பொன்ஞணி என்ற ஊரில் திருமணம் நடைபெற்றது. அன்று காலையில் பாலாஜியின் சகோதரி பிரேமாவுக்கும் திரு. குமாரதாஸ் என்பவருக்கும் குருவாயூர் கோவிலில் திருமணம்நடைபெற்றது குடும்பத்தில் முடியரசு நிலவாது குடியரசே நிலவ வேண்டும் என்ற கருத்தில் குடியரசு தினத்தில் மணமக்களான இந்நால்வரையும் வாழ்க வாழ்கவென்று வாழ்த்துகின்ருேம்.

குடந்தை நகரின் வணிகத் தந்தையாக இருந்து தன்னுடைய ஏ. ஆர். ஆர். சீவல் பாக்கின்மூலம் தமிழகத்து இல்லங்கள் தோறும் அறிமுகமான திருவாளர் ஏ. ஆர். ராமசாமி அவர்கள் தற்போது குடந்தை நகரின் நகரத்தந்தையாகவும் — நகராண்மைக்கழகத் தலைவராகவும் மாறி இருக்கிருர் என்ற செய்தி கேட்டு மகிழ்கின்ருேம். இவரது ஒப்பற்ற தலைமையில் குடந்தை மேலும் முன்னேற வாழ்த்துகின்ருேம்.



"ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி என்பது போல இவர்களுக்கு நடிகர்கள் தான் இளைத்தவராகப் போய்விட்டோம். இல்லை என்றால் யாராரோசேர்ந்து குழப்பியவேலூர்குழப்பத்தின் முழுப்பொறுப்பையும் எங்கள் மீது போடுவார்களா?" என்று கூறுகிறாரோ இந்த கைவிரித்த அப்பாவித் தோற்றக்காரர். 'சபாஷ் மாப்பிள்ளையி'ல்

—மக்கள் திலகம்

"ஏ. கே. த. நகர்"

குறைந்த ஊதியக்காரர்கள் குறைந்த வாடகையில் குடியிருப்பதற்காக 30 வீடுகளைக்கோடம்பாக்கத்தில் சிரிப்பு நடிகர் தங்கவேலு கட்டிக் கொடுத்திருக்கின்றார் "கே. ஏ. த. நகர்" என்ற இந்தக்குடியிருப்பைத் தாராசெரியன் அம்மாள் திறந்து வைக்க சிவாஜி கணேசனின் அம்மா ராஜாமணி அம்மாள் விளக்கேற்றி வைத்தார்கள். இந்தத் திறப்பு விழாவில் கட்டிட வேலை செய்தவர்களுக்குத்தங்கவேலு சார்பில் வேட்டி சட்டை பரிசு வழங்கப்பட்டது

ம. பொ. சிவஞானம்



சந்திரபாபுவின குழந்தை உள்ளத்தையும் அவரது அறிவாற்றலே யும் நன்கு புரிந்து கொண்ட ஏழுகிணறு பொதுமக்கள் தங்களுடைய பேட்டையில் திறக்கப்பட்ட "குழந்தைகள் உலகத்தை" அண்மையில் அவரைக் கொண்டே திறந்து வைக்கச் செய்து மகிழ்ந்தனர்,

கலந்துகொண்ட இந்தக் கூட்டத்திற்கு காங்கிரஸ் பிரமுகர் ராமதாஸ் தலைமைவகித்தார்.

மீண்டும் ஒரு குழந்தைகள் படம்

தூய உள்ளம் படத்தயாரிப்பாளரான ஏ. நாகேசுவரராவ், வங்காளத்தில் வெற்றிகரமாக ஓடிய 'லாலு புலு' என்ற படத்தின் கதையைத் தமிழ், தெலுங்கு இருமொழிகளிலும் தயாரிக்கப் போகிருராம். தென்னுட்டுக்குழந்தைகளுக்கு வருங்காலத் திரை விருந்தான இப்படத்தை ஏ. சுப்பாராவ் டைரக்ட் செய்வார் என்று தெரிகிறது.

பானுமதியின் 'கானல் நீர்

நடிகைபானுமதியின் சொந்தத் தயாரிப்பான 'கானல்நீர்' படத்திற்குத் தானே இசை அமைத்திருக்கின்ருராம். பானுமதியின் கணவர் இராமகிருஷ்ணு டைரக்ஷனில் வளரும் இபபடத்தில் சௌகார் ஜானகி, ஏ. நாகேஸ்வரராவ், முதலியோருடன் பானுமதியும் நடிக்கின்ருர்.

"விக்கிரமாதித்தன்" வெளிவரப் போகின்ருன்.

டி. ஆர். இரகுநாத் இயக்குகிற 'ஜெயபாரத்' புரொடக்ஷன்சாரின் இந்தப் படம் பிர

பல நட்சத்திரம் பத்மினியின் திருமண தினத்தில் திரையிடப்பட வேண்டி துரிதமாக முடிவடைந்து வருகிறது. எம். ஜி. ஆர்., பத்மினி, ஸ்ரீரஞ்சினி, ராகினி, ஈ.வி. சரோஜா, தங்கவேலு, வீரப்பா முதலியோர் இதில் நடிக்கின்றனர்.

அண்ணாவின் 'நல்லவன் வாழ்வான்'

அறிஞர் அண்ணாதுரை கதை வசனம் எழுதும் அரசு பிக்சர்சாரின் படத்திற்கு 'நல்லவன் வாழ்வான்' என்று பெயரிடப்பட்டிருக்கிறது. ப. நீலகண்டன் தயாரித்து இயக்கிவரும் இந்தப் படத்தின் இசையமைப்பை டி. ஆர். பாப்பா ஏற்றிருக்கிறார்.

கொங்குநாட்டு தங்கம்

தேவர் பிலிம்ஸாரின் இந்தப் படத்தின் ஒரு பாடல் காட்சி சமீபத்தில் வாகினி ஸ்டுடியோவில் படமாக்கப்பட்டது. பின்னணி பாடலை சீர்காழி எஸ். கோவிந்தராஜன் பாடினார்.

கலைவாணரின் வாரிசுகளான இந்த வாள் வேந்தனும், நகைக்குறிசிலும் ஈகையால் வரும் புகழை ஏலம் எடுப்பதில் ஒருவருடன் ஒருவர் போட்டி போட்டுக்கொண்டு வருகின்றனர். இலட்சங்களைப் பெறுகின்ற புரட்சி நடிகர் அவ்வை இல்லம் போன்ற நல்ல காரியங்களுக்கு முப்பதாயிரக்கணக்கில் வாரி வழங்கினால் குலதெய்வமும் தன் சக்திக்குக் கூடிய வரையில் ஆயிரக்கணக்கில் வாரி வழங்கி வருகிறார்.

—'சபாஷ் மாப்பிள்ளை'யில் புரட்சிநடிகரும்—ராஜகோபாலும்

விபரீதமான செய்திகளும்

1 2-2-61
தி. மு. க. சமரசம் கருணாநிதி கோஷ்டி எதிர்ப்பு. சம்பத்தே இருக்கட்டும் நாங்கள் போகிறோம் எனமிரட்டல். தர்மசங்கடத்தில் சிக்கி அண்ணாதுரை தவிப்பு.

2 2-2-61
காங்கிரஸ் ஊர்வலத்தில் ராஜாஜி படம். வாணவேடிக்கையுடன் கொண்டு போனார்கள்.

3 11-2-61
சஞ்சீவிரெட்டி காரை நிறுத்திக்கருப்புக்கொடிஆர்ப்பாட்டம். அம்பாலாவில் இருவர் கைது.

4 11-2-61
தமிழ்நாடு பெயரிடக்கோரும் போராட்டத்தைக் கைவிட முடியாது. அமைச்சர் சுப்பிரமணியத்திற்கு ம, பொ. சிவஞானம் மறுமொழி.

5 13-2-61
ஆண்களும் குழந்தைகளுமாக 14 பேர்கள் உயிருடன் தீவைத்துக் கொல்லப்பட்ட பரிதாபம். வடநாட்டில் பயங்கர கலகம். ஒரு மாணவி கெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்தக் கலகம் ஆரம்பம் ஆனது.

6 13-2-61
கருத்தடை செய்வதால் மக்கள் தொகை குறையாது
வி. கே. கிருஷ்ணமேனன் கருத்து.

7 13-2-61
சம்பத் மீது எம். ஜி. ராமச்சந்திரன் தாக்கு.

8 12-2-61
கழகத்தைக் கட்டிக்காப்பதே நமது பணி தேர்தல் நெருங்குகிறது; சில்லரை நினைப்பேன். காமராசரே உமது கனவு பலிக்காது. செய்தி வேட்டையாடும் ஏடுகளை நம்பாதீர்கள் தோழர் அரங்கண்ணல்.

9 14-2-61
இதுவரை சீனு விழுங்கியது 12000 சதுரமைல்கள் பாராளுமன்றத்தில் பண்டிதர் கணக்கு.

10 14-2-61
பட்டம்தாணுமீது குற்றப் பத்திரிகை தாக்கல்
காங்கிரஸ் துணையமைச்சர் முயற்சி.

11 15-2-62
காங்கிரஸ் ஆலமரம் அசைக்கமுடியாது
ராஜாஜிக்கு காமராசர் பதில்

விளையாட்டான பதில்களும்

1 சம்பத் போனாலும், கருணாநிதி போனாலும் கட்சிக்குத்தான் நஷ்டம். அறிஞர் அண்ணா அவர்களுக்கு இது ஒரு சோதனை காலம். கர்ம வீரரைப்போல் சாமர்த்தியமாய் சமரசம் செய்து ஓட்டையை அடைத்தால்தான் கட்சிக்கு மட்டுமல்லாது தமிழ் நாட்டிற்கும் நல்லது.

2 காங்கிரசை வளர்த்த ஒரு சிலரில் முக்கியமானவராயிற்றே ராஜாஜி. அவருடைய சேவையை (முன்பு) காங்கிரஸ் மறக்காமல் இருப்பது இதன் மூலமாவது தெரிகிறதல்லவா?

3 தாங்களும் காங்கோவிற்கு நெருங்கிய காட்டுமிராண்டிகள் என்பதைக் காண்பிக்கிறார்கள் போலும்.

4 தமிழ்நாடு என்று சென்னைக்குப் பெயர் வைப்பதன்மூலம் உங்களை ஒரு நிமிஷத்தில் போராட்டத்தைக் கைவிடும்படி செய்து விடலாமே!

5 இது மதவெறியால்தான் இப்படிப் பயங்கரக் கலகம் ஆனது மதவெறி ஒழிந்தால்தான் எல்லோரும் சகோதரர்களாக வாழமுடியும்.

6 ஆளுக்கொரு விதமாக அறிக்கை கொடுப்பதில் அமைச்சர், கழகத்தைக் காப்பியடிக்கிறார்போலும்.

7 நடுக்கடலில் படகை நிறுத்திக்கொண்டு ஒரு புறம் அண்ணா ஓட்டையை அடைத்துக்கொண்டு வரும்போது மற்றொரு பக்கம் தம்பிமார்கள் இப்படி ஓட்டை செய்யலாமா?

8 செய்தி வேட்டை ஆடும் ஏடுகளை நம்பவேண்டாம். ஆனால் கழகக்காரர்களே நடத்தும் உங்கள் சொந்தப் பத்திரிகைகளைக் கூடவா நம்பக்கூடாது.

9 உடன்பிறந்தே கொல்லும் வியாதியை நாம் வைத்துக்கொண்டிருப்பதால்தான் இந்தக் கொடுமை.

10 எதிர்பார்த்தது நடந்தே தீரும். நாய்வாலை நிமிர்த்த முடியுமா?

11 ஆலமரம் நிழலாயிருப்பதால்தான் கீழே கூடிக்கொண்டு கலாட்டா செய்கிறார்கள்.

வீட்டில் சினிமா புரொஜெக்டர்



சினிமா கொட்டகையில் பார்ப்பதுபோல் சினிமா படங்களை வீட்டிலிருந்தபடி பார்த்து ரசிப்பதற்கு மிக உபயோகமானது. டார்ச்லைட் அல்லது மின்சாரத்தாலும் இயங்கும். இதற்கு உபயோகிக்கப்படும் பிலிம் 35 M. M. விலை ரூ. 15-8-0 தபால் சிலவு தனி: ரூ. 4-8-0 சிறந்த ரகம் ரூ. 20-0-0 தபால் சிலவு ரூ 5-8-0 10 அடி பிலிம் இலவசம். திரை ரூ. 3-0-0 அதிக பிலிம் கஜம் ஒன்றுக்கு ரூ. 0-8-0.

ஆங்கிலத்தில் விண்ணப்பிக்கவும். கால் பங்கு முன் பணம் அனுப்ப வேண்டும்.

50 முறை சுடும் பிஸ்டல்



லைஸன்ஸ் தேவையில்லை. 50 முறை தானாகவே சுடும் அமெரிக்கன் மாடல் பிஸ்டல். சுடும்போது வரும் ஓசை மிருகங்களையும் கள்ளர்களையும் நடுங்கச் செய்யும். சினிமா நாடகங்களுக்கு உபயோகப்படும். விரோதியிடமிருந்து காப்பாற்றிக் கொள்ள உபயோகமாகும். டீலக்ஸ் மாடல் விலை ரூ. 10/50 (50 குண்டுகள் இனாம்) வி. பி. சிலவு ரூ. 2/50 இலங்கைக்கு ரூ. 4/50. பிஸ்டல் உறைபெல்ட்டுடன் ரூ. 3/-உயர்ந்த ரகம் ரூ. 5/- தனி குண்டுகள் நூறு ரூ. 5/- ரிப்பேர் செய்ய எண்ணை ரூ 1/-

எம்பிராய்டரி மிஷின் & டிசைன் புக்

இந்தச் சிறிய யந்திரம் எல்லா வகையான சித்திரங்கள், பூக்கள், காட்சிகளைத் துணிமீது நூலினால்போடும். விலை ரூ. 8-50. வி. பி. பி. சார்ஜ் ரூ. 1-50. எம்பிராய்டரி டிசைன் புக் நூற்றுக் கணக்கான நவீன டிசைன்கள் கொண்டது ரூ. 4. போஸ்டேஜ் ரூ. 1. கடிதங்கள் கண்டிப்பாக ஆங்கிலத்தில் மட்டுமே.

SULEKHA TRADERS (KA)

PHAPALA — ALIGARH (INDIA)

இரவில் தனியாக இருக்கும்போதுதான் பார்த்துக்கொள்ள வேண்டும்

KASHMIRI SHASTRA

(Private)

கொக் சாஸ்திரம் (இரகசியமானது)

84 படங்களுடன்

விளம்பரத்தினால் சரிவரக் கூறமுடியாத விஷயங்கள் அடங்கியுள்ளன.

படிக்கிறவர் நன்றாகவும் தெளிவாகவும் விஷயங்களைப் புரிந்து கொள்வார்கள். பலவிதமான 48 படங்கள் இருப்பதால் மார்க்கெட்டில் எம்முடைய கொக் சாஸ்திரம்தான் மிகநன்றாயிருக்கிறது எனக்கூறப்படுகிறது விலைரூ 2.75 தபால் செலவு தனி

BHARAT BOOK DEPOT. (KM) Jullundur City. (P.C.)

மக்கள் கவி அரங்கம்:

தலைவியின் வருத்தம்

"குன்றவலம் கவிராயர்"

★

குயிலிசைக் கேட்டு நின்ற கோதையின் காட்டுந் தோற்றம்
மயிலுடை சாயல் வெல்ல மாங்கனிக் கன்னம் அள்ளும்!
ஒயிலுறு இடையில் கலச உவந்திடு ஒருகை வைத்துக்
குயிலெழில் வாய்மு கத்தின் குலுங்கடி யிற்கை யைஏ!
வைத்தவள் நினைவி ழந்து வண்டுழல் அந்தச் சோலை
ஒத்திடு பூவில் நின்று (ஏ) உள்ளொலி இசையைக் காட்ட
அத்திசை பாரா நின்று அகமிக திகழ்வு நாட்ட
புத்தெழில் பூண்ட தாங்குப் புள்ளினம் துள்ளும் நேரம்!
குக்குக்குக் கூகை கத்தத் கொக்கங்குப் பல்பல் கோத்துக்
கக்கக்கா காகக்கூட்டம் ககனத்தே ஆடும் காட்சி,
அக்கக்கா என்று நீர்மேல் அலர்ந்திடு ஒண்மை கண்டு,
தக்கதிம்...என்று(என்று) அருவி மத்தளம் மோதித் தட்டிக்
கருத்தினை அழைத்துச் சென்ற காரிகை மகிழ்ந்தாளில்லை!
வருத்திடும் புதுமைச் சிந்தை! வந்திலா நிலவைக் காண
வருந்திடும் அல்லி ஒப்ப வருந்தினள்! பெண்ணாள் நெஞ்சம்
விரும்பிடும் தலைவன் தன்னை விரும்பிடாச் சோகம் எண்ணி!

குடும்பப் பொறுப்பு இன்னதென்று அறியாது வாழ்ந்த குடும்பம் அது. குடும்பத் தலைவர் ராமசாமி அய்யர் வேளா வேளைக்கு நாலு வகை பதார்த்தங்களுடன் சாப்பிட்டு விட்டு ஊர் சுற்றிக் கொண்டிருந்தார். புதுக்கோட்டை வாசியான அவருக்குத்தான் 1927-ம் ஆண்டு நவம்பர் மாதம் 17-ம் தேதி அன்று, ஒரு மகன் பிறந்தான்.

பிறந்த குழந்தை பிற்காலத்தில் காதல் மன்னனாகத் திகழ்வான் என்று பெற்றோர்கள் நினைத்திருக்கமாட்டார்கள் என்பது என்னவோ உண்மை. ஆனால் உற்றாரும், பெற்றோரும், "குழந்தை மன்மதனைப் போல இருக்கிறான்" என்று சொல்லி திருஷ்டி கழித்து வந்தது மட்டும் உண்மைதான்.

நந்தகோபன் மைந்தனை பிருந்தாவனத்திலுள்ள ஸ்திரீகள் தங்கள் தங்கள் வீடுகளுக்கு எடுத்து போய்க் கொஞ்சினார்கள் என்பதில் நம்பிக்கையில்லாதவர்கள் இருக்கலாம். ஆனால், இந்தப் புதுக்கோட்டை கணேசனுக்கு அந்த பாக்கியம் கிட்டியது பால பருவத்திலே!

நவராத்திரி கொலு சமயம் நாடகத்திலே கிருஷ்ணனாக நடித்தபோது ஒரு பாட்டி மேடை மீது ஏறி வந்து இந்த பாலனைக் கட்டிக் கொண்டாளாம் என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன். இது பால பருவம்.

வாலிப பருவத்திலே இந்த அழகன் துடுக்கனாகப் பெயர் எடுத்தார். சாப்பாட்டைக்கூட மறந்து கிரிக்கெட் மட்டையும் கையுமாக பறந்து கொண்டிருந்தார் மைதானத்தை நோக்கி. பிற்காலத்தில் கிரிக்கெட் விளையாட்டில் நட்சத்திரமாகத் திகழ வேண்டுமென்பதுதான் இவரது அந்தக் கால ஆசை.

பையன் சைக்கிளில் ஏறி பவனி புறப்பட்டு விட்டால் எதிர்ப்படுகிறவர்கள் ஆயுசு கெட்டியாக இருக்க வேண்டும்.

பெல்லும் பிரேக்கும் இல்லாத சைக்கிளில் கிளம்பி விட்டால் வழியை விலகி விட்டுவிடுவார்கள். அப்படி ஆரம்பித்த பழக்கம்தான் இன்று கண் மண் தெரியாது கார் ஓட்டிச் செல்லுகிறது போலும்...!

அச்சமின்மையும், முரட்டுத் தனமும் இவர் ரத்தத்தில் ஊறிப் போனதன் காரணமாக இருந்தன அவர் வாழ்ந்த சூழ்நிலை. இவர் இருந்த புதுக்கோட்டைப் பகுதியில் கொலையும், கலகமும் நடக்காத நாட்களே அபூர்வம். அந்தப் பகுதியிலிருந்து வந்தால் தனக்கு பயமே அற்றுவிட்டது என்பது அவர் கருத்து. அதுதான் உண்மை!

புதுக்கோட்டையை விடுத்து சென்னை ராமகிருஷ்ண பள்ளியில் வந்து சேர்ந்ததும் அந்த சூழ்நிலைக்கேற்ப அனைத்துமே மாறி விட்டன. காலையில் எழுந்து பல வித ஆசனங்களுடன் தேகப் பயிற்சி; அதன் பின் புருஷ சூத்தம், ஸ்ரீ சூத்தம் இப்படி வடமொழி வேதநூல்களைப் படித்து மனனம் செய்வார். அப்பொழுதெல்லாம் அவரது இலட்சிய நாயகன் விவேகானந்தர்தான்.

கிருஸ்தவக் கல்லூரியில் பிரவேசித்ததுமே குறும்புத்தனமும் கூடவே வந்து விட்டது. வார்டன்களையும் புதிதாக வரும் சக மாணவர்களையும் படுத்தி வைத்த பாடு சொல்லித் தரமன்று. கல்லூரி நாட்களில் ஓவியம் தீட்டுவதில் ஈடுபாடு கொண்டு வரைந்தவை பலவற்றை இன்னும் பாதுகாத்து வைத்திருக்கிறார்.

கல்லூரிப் படிப்பு முடிந்ததும் வேலை தேடும் படலம். துணிகரம் தொடர்பு கொண்ட தொழிலுக்குப் போக வேண்டும் என்பதுதான் அவர் ஆசை. அதற்குத் தகுந்தாற்போல் ஆகாயப்படையில் அழைப்பும் வந்தது! அருமைத் தாய் தனயனைப் பிரிய மனமின்றி, சூழ்ச்சி செய்து அந்த முயற்சிக்கு முட்



டுக்கட்டை போட்டார். மன முடைந்து சென்னை திரும்பி கல்வி கற்ற கிருஸ்தவக் கல்லூரி யிலேயே ஆசிரியரானார்.

இது அன்று ஆர். கணேசன். இன்று...! அந்த ஆர். கணேசன், ஜெமினி கணேசனாகத் திகழ்கிறார். அன்று அவர்கள் குடும்பத்தில் பெண் குழந்தை இல்லையே என்று ஏங்கினார்கள். இன்று இவர் ஆண் குழந்தை இல்லையே என்று ஏங்காவிட்டாலும், குறை உண்டுதான்.

எந்தக் கட்சியையும் சேராத ஒரே நடிகர். சகல கட்சித் தலைவர்களிடமும், மதிப்பும் கொண்டவர். பாப்ஜி, சாவித்திரி, இரு மனைவிகளுக்குமே அன்புக் கணவராக, இன்பப் பதியாக இருந்து வருகிறார்!

காவலர் காலண்டர்

1859 சென்னை மாநில காவற்படை சட்டம் நிறைவேறியது
1867 சென்னை நகர காவற்படையினர் மாநிலக் காவற்படையினருடன் இணைந்தனர்.
1887 'கில்ஸ் கமிட்டி' ஒவ்வொரு மாநிலத் தலைநகர்களிலும் 'கமிஷனர்'களை நிறுவவேண்டும் என்று சிபார்சு செய்தது.
1895 கைரேகையைக் கொண்டு துப்பறியும் இலாகா துவக்கப்பட்டது.
1905 வேலூரில்காவற்படை பயிற்சிப்பள்ளி துவக்கப்பட்டது
1906 துப்பறியும் இலாக்கா துவக்கப்பட்டது.
1919 காவற்படையினரின் சுருக்கெழுத்துப்பகுதி துவக்கப்பட்டது. இதனால் தாய்மொழிகளுக்கு சுருக்கெழுத்து முறை கிடைத்தது.
1921 மாப்ளா கலகத்தை அடக்குவதற்காக 'மலபார் ஸ்பெஷல் போலீஸ்' நிறுவப்பட்டது.
1929 குற்றம், போக்குவரத்து, சட்டம் ஒழுங்கு ஆகிய துறைகள் தமிழகத்தில் தோற்றுவிக்கப்பட்டன.
1937 சேலத்தில் மதுவிலக்கு அமுலில் வந்தது.
1938 அதிகாரிகளுக்கு விஞ்ஞான உதவி முதலுதவி முறைகளை கற்பிப்பதற்காக முதல் முதலில் இந்திய சார்ஜெண்ட்கள் நியமிக்கப்பட்டனர்.
1946 வானொலி, கருப்புச் சந்தை, லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆகிய பகுதிகள் துவக்கப்பட்டன.
1947 - 48 ஆயுதம் தரித்த விசேஷ காவற்படை நிறுவப்பட்டு ஐதராபாத்தின் மீது போலீஸ் நடவடிக்கையும் எடுக்கப்பட்டது.
1952 நாய்களைக் கொண்டு துப்பறியும் முறை சென்னை மாநிலத்தில் துவக்கப்பட்டது.
1953 ஆந்திரா பிரிந்ததால் சென்னைக் காவற்படையினரிலும் பிரிவு ஏற்பட்டது.
1954 தஞ்சை - ராமநாதபுரங்களிலே காவற்படையினர் புயல் நிவாரண வேலைகளிலே ஈடுபட்டனர்.
1956 ஒரு விரல் அடையாளத்தைக் கொண்டே துப்புத் துலக்கும் புதுமுறை தோற்றுவிக்கப்பட்டது.
1956 பல்வேறு வகையான சமுதாய நலப் பணிகளில் ஈடுபட்டு நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் சேவை செய்ய காவற் படையினர் ஈடுபட்டனர்.

அரசப்பன் அலங்காரம்

முத்தமிழ்க்கவி வித்வான் கே. ஆர். அரசப்பன்

நன்னகைசேல் விழிமடவார் பொறகாது மினுக்குவதேன்
புன்னயஞ்சேர் குரலினியார் நவில்தோறும் முனுக்குவதேன்
கம்மலினுல், கம்மலினுல்

பழனியிறைப் பண்டிதனும் பாவலராற் சிறந்ததேன்
கழனிநிறைப் பழனிசூழ்வார் காவலரா யிரைந்ததேன்
கவிகளினுல், கவிகளினுல்

குறும்எலிகள் சூழ்மனையிற் குறைகாய்கள் தேங்குவதேன்
சிறுகணவர்க் கெதிர்மாதர் சினந்துஅவர்கை ஓங்குவதேன்
கரண்டியதால், கரண்டியதால்

கணமுதலாக் காலத்தைக் காசினியோர் கண்டதேன்
மணவினையில் மணமகள்தன் மணமகனைக் கொண்டதேன்
கடியாரத்தால், கடியாரத்தால்

பெரியாருஞ் சிறியார்செய் பிழைகண்டுங் கேளாதேன்
வரியாரும் பசிவேங்கை உணவிருந்தும் வாளாவேன்
புல்லரென்று, புல்லரென்று

தேம்புனலும் தாள்பற்றித் தெங்கின்காய் தங்குவதேன்
வீங்கருங் குரங்குதிரம் மேன்முதியர் உண்குவதேன்
இளமை பெற, இளமை பெற

பொன்னுகம் பன்னுழி புணர்ச்சியின்பங் கூட்டுவதேன்
பின்னுர்தங் கைத்திறத்தான் மீத்துபொருள் ஈட்டுவதேன்
பின்னலினுல், பின்னலினுல்

திருக்கோயிற் கடவுளரைத் தெரிசிப்பார்க் கவதியேன்
வரிக்கோல வேல்விழியார் மகிழ்ச்சிபெறும் அமைதிஏன்
இரவினுலே, இரவினுலே

ஆங்கிலமன் விமானங்கள் அருங்கலையால் ஆக்கியதேன்
தேங்குவளைப் பெண்டீர்தஞ் சீர்நெறியைப் போக்கியதேன்
வானில் போக, வானில் போக

எச்செயலும் அவன்செயலே என்பதில்ஓர் ஐயம்ஏன்
இச்சகமும் அழிந்தழிந் திடர்ப்பட்டு நைவதேன்
ஊழியினுல், ஊழியினுல்

தஞ்சைநிலன் மருதவளந் தான்உயர்த்தி அறைவதேன்
அஞ்சுதலில் வீரர்அஞ்சும் அரவம்அஞ்சி உறைவதேன்
நஞ்சையிட்டு, நஞ்சையிட்டு

புல்லர்பலர் நல்லர்போலப் பொன்னுர்கண் வாழ்வதேன்
பல்அரவப் பாய்அணையான் கதர்போலத் தாழ்வதேன்
நாமம் போட்டு, நாமம் போட்டு

அடிமைகளை விடுவித்த ஆப்பிரகாம் லிங்கன்

சித்திரவாழ்க்கை விளக்கம்

[புதிய கண்டமான அமெரிக்காவில் இதுவரை எத்தனையோ குடியரசுத் தலைவர்கள், மக்கள் நலனையே பெரிதெனக் கருதிய மதிவாணர்கள் வாழ்ந்து மறைந்திருக்கிறார்கள் என்றாலும், அவர்களிலே யாருக்கும் லிங்கனுக்குக் கிடைத்தது போன்ற உலகப் புகழோ அல்லது மக்களுடைய மனத்தில் இருந்து என்றும் மறையாத சிரஞ்சீவித் தன்மையோ கிடைத்ததில்லை. அப்படிப்பட்ட உலக உத்தமரின் வாழ்க்கையில் நடைபெற்ற சில சுவையான நிகழ்ச்சிகள் இவை]

உலகத்தில் யாரும் இதுவரை தன்னுடைய மரண ஊர்வலத்தைத் தானே பார்த்ததில்லை. அது எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து பார்க்கக்கூட மனித மனம் விரும்புவதில்லை. ஆனால், எதிலும் தனி வழி கண்ட மேதையான ஆப்ரகாம் லிங்கன் அவர்களோ தன்னுடைய மரண ஊர்வலத்தைத் தானே கண்டார். நேரிலே அல்ல; ஆனால் நேரிலே காண்பதைவிட மிகத் தெளிவாகவே கனவிலே கண்டார். முரடன் 'பூத்'தால்தான் சுடப்படுவதற்கு சில நாட்களுக்கு முன்பு வெள்ளை மாளிகையில் தன்னை யாரோ சுட்டு விடுவது போலவும், தன்னுடைய சவ அடக்கம் நடைபெறுவது போலவும் லிங்கன் தானே கனவு கண்டாராம்.

எப்போதும் நேர்மைக்கே முதலிடம் தரும் லிங்கனுக்கு சிபாரிசு என்பது கட்டோடு பிடிக்காத ஒன்று. ஒரு முறை புகழ் வாய்ந்த ராணுவ அதிகாரி ஒருவர் தன்னை மேல் பதவிக்கு உயர்த்த வேண்டும் என்று லிங்கனுக்கு நெருங்கிய நண்பர் ஒருவரிடம் இருந்தே கடிதம் கொண்டு வந்திருந்தார். ஆனால் லிங்கனோ, நேர்மை அற்ற அந்தச் செயலைத் தான் செய்ய மறுத்ததோடு, அவரையும் கழுத்தைப் பிடித்தே வெளியில் தள்ளி விட்டார்.





தான் கொல்லப்படுவதாக கனவு கண்டதில் இருந்து வெளியில் உலாவப் போகும் போதெல்லாம் லிங்கன் விழிப்பாகவே இருந்தார். ஒரு நாள் மாலையில் குதிரையில் அவர் உலாவப் போகும்போது அருகில் துப்பாக்கி வெடிக்கும் ஓசை கேட்டது. பதறிப்போன லிங்கன் தன்னுடைய குதிரையை வாயு வேகத்தில் பரத்திக்கொண்டு வீடு திரும்பினார். முதலில் இதை ஜனாதிபதியின் வீண் பிரமை என்று கருதிய அதிகாரிகள், சம்பவம் நடந்த இடத்தில் கீழே கிடந்த லிங்கனின் தொப்பியில் ஒரு துப்பாக்கி குண்டு பாய்ந்து சென்றிருப்பதை அறிந்ததும் உஷாராயினர். அன்றில் இருந்து இவருக்கு பாதுகாப்பு அதிகரித்தது.

ஒரு முறை அமெரிக்க உள்நாட்டு யுத்தம் நடந்து கொண்டிருந்தபோது போர் முனையில் இருந்த லிங்கன், உயரமான ஒரு இடத்தில் எழுந்து நின்று கொண்டு தூரத்தில் வரும் எதிரிப் படைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார். ஆறு அடி, நாலு அங்குலம் உயரமுள்ள லிங்கனை எதிரிகள் நன்றாக அடையாளம் வைத்துக் கொண்டு மிக எளிதாகக் குறி வைத்து சுடத் துவங்கினர். இதனால் ஒன்றன் பின் ஒன்றாக இவருடைய படை வரிசையில் பிண மலைகள் குவிந்தபோதும் லிங்கன் மட்டும் நின்று கொண்டே போர்க்களத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார். இதைப் பார்த்து ஆத்திரம் அடைந்த தளபதி ஒருவர், "முட்டாளே! இங்கே வா!" என்று லிங்கனை கீழே இழுத்துக் கொண்டார். லிங்கனும் அந்த உத்தரவிற்கு உடனே கீழ்ப்பணிந்ததோடு அல்லாது தனக்குக் கீழ் அதிகாரியாக இருந்தும் தன்னுடைய தவறுக்காகத் தளபதியிடம் மன்னிப்பும் கேட்டுக் கொண்டார்.

லிங்கனுடைய வாழ்க்கை முழுவதுமே போராட்டமும் திடீர் விபத்துக்களும் நிறைந்ததுதான். ஒருமுறை பிரஞ்சுக் கப்பல் ஒன்றைப் பார்வையிட்டுவிட்டுத் திரும்பிய லிங்கன் தன்னுடைய படகில் வந்து ஏறிய பிறகு அதை மீண்டும் ஒருமுறை அருகில் சென்று அதனுடைய காற்றூடி வேலை செய்வதைப் பார்க்க ஆசைப்பட்டார். அப்படி படகு அருகில் செல்லும்போது லிங்கன் திரும்பிவிட்டார் என்ற எண்ணத்தில் பிரஞ்சுக் கப்பலில் இருந்து மரியாதை குண்டுகள் வெடிக்கத் துவங்கின. நல்லவேளையாக லிங்கன் அன்று மயிரிழையில் உயிர் பிழைத்தார்.





லிங்கன் மனிதர்களை விட மிருகங்களிடம் அதிகப் பற்றுடையவராகத் திகழ்ந்தார். ஏன் எனில் இவரது மகன் இறந்து போனபோதுகூட இவர் துக்கத்தைப் பொறுத்துக் கொண்டார். ஆனால் சில வாரங்களுக்குப் பிறகு தன்னுடைய மகனுக்குச் சொந்தமான குதிரைக் கொட்டகை தீபபிடித்துக் கொண்டபோது அதில் இருக்கும் குதிரைகளைக் காப்பதற்காக இவர் தன் உயிரையும் திரணமாக மதித்து தீயில் பாய்ந்தார். இவரை இரண்டு போர்வீரர்கள் கட்டிப்பிடித்து வீட்டிற்கு கொண்டுபோக வேண்டியதாயிற்று.



இவருக்கு போர் முறைகள் தெரியாது என்றாலும், போர்க் கருவிகளை பயன்படுத்தும் முறைகள் மட்டும் நன்கு தெரியும். ஒருமுறை இவர் புதிகாக வந்த துப்பாக்கி ஒன்றை பல மணி நேரம் பயன்படுத்தியும் சரியான இடத்தைச் சுட முடியவில்லை பின்னர் தானே தயாரித்த குறி பார்க்கும் கண்ணாடி ஒன்றை போட்டுக் கொண்டு சுட்ட போது இவர் சுட்ட ஒவ்வொன்றும் குறு தவறாது சென்று குறிப்பிட்ட இடத்தைத் தாக்இற்று.

இப்படிப்பட்ட குழந்தை மனம்படைத்த அமெரிக்கத் தலைவரை—அடிமைகளை விடுவித்த ஆட்பிரகாம் லிங்கனை, அண்ணல் காந்தியடிகளை எவ்வாறு கோட்ஸேயின் குண்டுகள் கொண்டு சென்றனவோ அதே போன்று வெறியன் பூத்தின் குண்டுகள் சொண்டு சென்றன. இவர் குண்டடிபட்டதும் இவரை பக்கத்தில் உள்ள ஒரு வீட்டின் படுக்கை அறைக்கு கொண்டு சென்றனர். அப்போது அந்தக் கட்டில் இவருடைய நீளத்திற்கு ஒத்துவராததால் கால்கள் வளைத்து வைக்கப்பட்டன. இவ்வாறு இவர் எல்லாவற்றிலும் தனக்கென ஒரு தனித்தன்மை பெற்று இருந்ததால்தான் இன்று தரணி போற்றும் உத்தமராக—நாட்டு மக்கள் எல்லோருடைய உள்ளத்திலும் உரையும் மறைந்தும் மறையாத மாபேதையாகத் திகழ்கின்றார். வாழ்க இவர் புகழ். வளர்க இவரது இலட்சியம்.



இந்திய நூல் நிலையங்கள்

[கௌண்டின்யன்]

கல்கத்தா தேசீய நூல் நிலையம்

இந்தியாவின் தலைநகரம் கல்கத்தாவிலிருந்த பொழுது கவர்னர் ஜெனரல்கள் கல்கத்தாவிலேயே தங்கியிருந்து இந்திய அரசாங்க நிர்வாகத்தை கவனித்து வந்தனர். வில்லியம் பெண்டிங் பிரபு தனது ஐந்து வருட நிர்வாகத்தை முடித்துக் கொண்டு இங்கிலாந்து திரும்பியதும் அவருக்குப் பின் இப்பதவியை ஏற்க நிர்ணயிக்கப்பட்டவர் ஆக்லண்டு பிரபு. இவர் இந்தியா வந்து பதவியை ஏற்க ஒரு வருட கால தாமதம் ஆயிற்று. இவ்விடை வெளியில் (1835-36) தற்காலிகமாக ஸர். சார்லஸ் மெட்காப் என்பவர் இப்பதவியை ஏற்கலானார்.

அவ்வமயம், டாக்டர் ஸ்ட்ராங் என்னும் ஆங்கிலேயர் ஒருவரது இல்லத்தில் நிறுவப்பட்டிருந்த நூல் நிலையம் ஒன்று பொது மக்களுக்குச் செவ்வனே சேவை செய்யும் தகவலை மெட்காப் துரை கேள்வியுற்று, அந்நூல் நிலையத்திற்குப் போதிய அளவு பொருளுதவி கொடுத்துத் தன் கண்காணிப்பில் வைத்துக் கொண்டிருந்தார். சில ஆண்டுகள் டாக்டர் ஸ்ட்ராங் துரையின் இல்லத்திலேயேயிருந்த இந்நூல் நிலையம் 1841 ம் ஆண்டு போர்ட் வில்லியம் கல்லூரியின் கட்டடத்திற்கு மாற்றப்பட்டது. பிறகு, 1844-ம் ஆண்டு மெட்காப் துரையின் பெயர் கொண்ட மெட்காப் ஹாலில் நிரந்தரமாக இது இடம் பெற்றது.

கர்ஸன் பிரபு கவர்னர் ஜெனரலாக இருந்தபொழுது 1899-ம் ஆண்டில் ஒருநாள் இந்நூல் நிலையத்தைப் பார்வையிட அவர் அங்கு விஜயம் செய்தார். உள்ளே நுழைந்ததும் அவரது உற்சாகம் குன்றி மனம் சோர்வடைந்தது. ஏனெனில் நூல் நிலையம் மிகவும் அதிருப்தியான நிலையிலிருந்தது. உட்புறம் போதிய வெளிச்சம் இல்லாமல் இருள் மயம். சாளரங்களில் கூடு கட்டிக்கொண்டு நெடுநாட்களாக வாழ்ந்து வரும் புறாக்கள் பட்டப்பகலில் அவைகளின் இறக்கைகளை அடித்துக்கொண்டு இங்குமங்குமாக இரைச்சலிட்டு பறந்து கொண்டிருந்தன. அலமாரிகளில் அடுக்கி வைத்திருந்த புத்தகங்களில் பெரும்பாலானவைகள் கிழிந்து முதல், கடைசி பக்கங்களில்லாமல் எஞ்சிய பக்கங்கள் காற்றில் காற்றாடிபோல் அடிக்கப்பட்டு ஒரு அலங்கோலமான காட்சியை அளித்தன. வாசிக்கும் மக்களின் எண்ணிக்கையும் மிக மிகக் குறைவு. வாசிப்போர்கள், ஒன்று கதைப் புத்தகங்களையோ அல்லது தினசரிப் பத்திரிகைகளையோ வைத்துக் கொண்டிருந்தனர்.

பிறகு அவர் இந்தியா அரசாங்க நிர்வாக மாளிகைக்குச் சென்று அங்கு உள்நாட்டு இலாகாவைச் சேர்ந்த நூல்நிலையத்தை (Imperial Library) பார்

வையிட்டார். அங்கு அரசாங்கத்திற்குச் சொந்தமான புத்தகங்கள் ஏராளமானவைகள் ஒழுங்கு முறையற்று அடுக்கடுக்காக வைக்கப்பட்டு ஒருவருடைய கண்காணிப்பிலும் இல்லாமல் புறக்கணிக்கப்பட்டிருந்த காட்சியைக்கண்டார். அந்நூல்நிலையம் நிறுவப்பட்டிருந்த கட்டிடம் நூல்நிலையத்திற்கு ஒரு விதத்திலும் பொருந்தியதல்லவென்று தெரிந்தது. இந்நூல் நிலையத்தின் இலக்கியங்களை அரசாங்க அதிகாரிகள் உபயோகிக்கவில்லை; பொதுமக்களுக்கும் அவைகள் பயன்படவில்லை.

இந்நிலையில் இருக்கும் நூல் நிலையத்தையும் மெட்காப் ஹாலில் அசட்டை செய்யப்பட்டு இருக்கும் நூல் நிலையத்தையும் ஒன்று சேர்த்து பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் தலைநகரில் ஒரு கௌரவமான புது நூல் நிலையத்தை நிறுவவேண்டும் என்ற எண்ணம் கர்ஸன் துரை அவர்களின் மனத்தில் எழுந்தது. உடனே அவர்மெட்காப் ஹாலில் இருந்த புத்தகங்களை ஆராய்ந்து உபயோக மற்றவைகளை நீக்கி உபயோகப்படுபவைகளைப் புதுப்பித்து உள்நாட்டு இலாகா நூல் நிலையத்திலிருந்த புத்தகங்களையும் அவ்வாறே பார்வையிட்டு இவ்விரண்டையும் ஒன்று சேர்த்து மெட்காப் ஹாலில் ஒழுங்காகவும், கவர்ச்சிகரமாகவும் அடுக்கி வைக்கக் கட்டளை பிறப்பித்தார். கட்டளையும் நிறைவேறியது. இவ்விதமாக, உருவெடுத்த புது நூல் நிலையத்தில் ஏறக்குறைய 100 000 புத்தகங்கள் இருந்தன. இங்கிலாந்திலிருந்து இப்புது நூல் நிலையத்தைப் பாதுகாக்க ஜே. மெக்பார்லேன் என்ற ஆங்கிலேயர் ஒருவர் தருவிக்கப்பட்டு அவரும் பதவியிலமர்ந்தார். 1930-ம் வருடம் ஜனவரி மாதம் இந்நூல் நிலையத்தை கர்ஸன் துரை திறந்துவைத்தார். அப்பொழுது ஆற்றியசொற்பொழிவு முடிவில் அவர் கூறியதாவது: "நாம் நம் குழந்தையை, அதாவது ஒரு படித்த திடமான குழந்தையை கல்கத்தா பொது மக்களுக்கு அறிமுகப்படுத்துகிறோம். அக்குழந்தையை அவர்கள் அங்கீகரித்து ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். அக்குழந்தை இப்பொழுது உங்கள் முன்னின்று வணக்கம் செலுத்துகிறது."

மெட்காப் ஹாலிலிருந்து இந்நூல் நிலையம் மாற்றப்பட்டு இப்பொழுது "பெல்விடேர்" அரண்மனையிலிருந்து பணியாற்றுகிறது. "பெல்விடேர்" அரண்மனை பிரிட்டிஷ் கவர்னர் ஜெனரல்கள் வசித்துவந்த அரசாங்க மாளிகை. இந்நூல் நிலையத்தின் தற்கால நூலகரான பி. எஸ். கேசவன் அவர்களது பெரும் முயற்சியால் பழைய கட்டிடத்திலிருந்து இந்நூல் நிலையம் இம்மாளிகைக்கு வர வாய்ப்பு ஏற்பட்டது. பி. எஸ். கேசவன் அவர்களது நிர்வாகத்தில் இந்நூல் நிலையம் மிகவும் முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்று கூறினால் அது மிகைபடக்கூறியதல்ல.

1954-ம் ஆண்டு அமுலுக்கு வந்த சட்டப்படி இந்நூல் நிலையம் தேசிய நூல் நிலையம் என்ற அந்தஸ்த்தைப் பெற்றிருக்கிறது. இச்சட்டப்படி இந்தியாவில் வெளிவரும் நூல்கள், சஞ்சிகைகள், தினசரிகள் முதலியவைகள் ஒவ்வொன்றிலும் ஒரு பிரதி இங்கு அனுப்பப்படவேண்டும்.

சென்னை பாலர் நூல் நிலையம்

கல்வியிலாகா இயக்குனர் அலுவலகத்தின் ஒரு பகுதியில்

பாலர்களுக்கான ஒரு நூல் நிலையம் இந்தியாவிலேயே முதன் முதலாக, 1950-ம் வருடம் நவம்பர் மாதம் 22-ம் தேதி நிறுவப்பட்டது. இந்நூல் நிலையம், 453 பிரதிகள் ஆங்கிலமொழியிலும் 93 தமிழ் மொழியிலும், 21 தெலுங்கு மொழியிலும் 20 கன்னடத்திலும் ஆக மொத்தம் 587 பிரதிகளுடன் சேவைசெய்யத் துவங்கியது. இத்துடன் ஒரு விளையாட்டு மைதானமும் இணைக்கப் பட்டிருக்கிறது. பாலர்களுக்கு இந் நூல் நிலையம் அருஞ்சேவை புரிந்துவருகிறது.

டெல்லி பொதுஜன நூல்நிலையம்

1951-ம் வருடம் அக்டோபர் மாதம் நமது பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்கள் டெல்லி பொதுஜன நூல் நிலையத்தைத் திறந்துவைத்தார். இது 1950ம் வருடம் நிறுவப்பட்டது. இந்திய அரசாங்கமும், யூனஸ்கோவும்இதில்பங்கெடுத்துக்கொண்டிருக்கின்றன. இந் நிலையத்தில் மொத்தம் 62,690 பிரதிகள் இருக்கின்றன. இவைகள் ஆங்கிலம், ஹிந்தி, உருது மொழிகளில் இருக்கின்றன. இங்கு 13 தினசரிகளும், 68 சஞ்சிகைகளும் வருகின்றன. இத்துடன் ஒரு பாலர் நூல் நிலையமும் இணைக்கப் பட்டிருக்கின்றது. இது தவிர இங்கு முதியோர் கல்வியை முன்னிட்டு சினிமாப் படங்கள் காட்டுவது, நாடகங்கள் நடிப்பது, சொற்பொழிவாற்றுவது முதலியவைகள் நடைபெறுகின்றன. சுமார் 2000 புத்தகங்கள் கொண்ட மோட்டார் ஒன்று நூல்நிலையத்திலிருந்து 10 மைலிலிருந்து 19 மைல்களுக்கப்பால் உள்ள இடங்களுக்குச் சென்று நூல்களை வழங்குகின்றது. இத்துறையில் செயலாற்றல் 1953-ம் வருடத்திலிருந்து ஆரம்பமாயிற்று. 1958-ம்வருடம் பிரதமர் நேரு தன்னுடைய சொந்த நூல் நிலையத்தில் இருந்து 400 புத்தகங்களை இந்நூல் நிலையத்திற்கு நன்கொடையளித்துள்ளார். அவைகளுள் 293 ஆங்கிலத்திலும், 90 ஹிந்தியிலும், 15 உருதுவிலும் இருக்கின்றன.

பல்கலைக் கழக நூல் நிலையங்கள்

இந்தியாவிலுள்ள பல்கலைக் கழகம் ஒவ்வொன்றிலும், ஒரு நூல் நிலையம் அமைக்கப்பட்டிருக்கிறது. பல்கலைக் கழகங்களுள் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவைகள் கல்கத்தா, சென்னை, பம்பாய் நகரங்களில் உள்ளவைகள். இம்மூன்றும், அண்மையில் நூற்றாண்டுத் திருவிழாவைக் கொண்டாடின. இவைகள் பெற்றிருக்கும் நூல் நிலையங்கள் பிரசித்தி பெற்றவைகள். சென்னைப் பல்கலைக் கழக நூல் நிலையத்தில் வெகு நாட்களாக நூலகர் பதவியிலிருந்து வந்த டாக்டர் எஸ். ஆர் ரங்கநாதன் நூற்றாண்டுத் திருவிழாவில் தான் தன் ஆயுட்காலத்தில் சேமித்து வைத்த மொத்தத் தொகையான ஒரு லக்ஷம் ரூபாயை பல்கலைக் கழகத்தில் நூலக இயல் ஆராய்ச்சிக்காக, நன்கொடையாக அளித்தார். இந்தப் பணத்தைக்கொண்டு இப்பொழுது புதிய நூலக ஆராய்ச்சிஇலாக்காவேஉருவாக்கப்பட்டுள்ளது. தமிழ் மக்கள் இவ்வரிய செயலுக்கு டாக்டர் ரங்கநாதன் அவர்களுக்கு என்றென்றும் கடமைப் பட்டுள்ளார்கள்.

எதிர்ப்புறத்தில் சித்திர விளக்கம் பெற்றுள்ள இந்த ஜால வித்தைக்காரரான ஹௌடினியை எல்லோரும் ஒரு மந்திரவாதி என்று தான் நம்பினர்.

ஆனால், தன்னுடைய ஜாலவித்தைகளால் உலகையே வியப்பில் ஆழ்த்திய ஹௌடினியோ தன்னை ஒரு மந்திரக்காரன் என்பதை மறுத்தார். தான் செய்பவைகளில் எல்லாம் தந்திரம்தான இருக்கிறதேதவிர மந்திரம் ஏதும் இல்லை என்றார். இதை விளக்குவதற்காக தான் இறக்கும் முன்னரே தன்னுடைய வித்தைகளில் உள்ள சூட்சமத்தை விளக்கி ஒரு உயில் எழுதி அதைத் தன்னுடைய வக்கீலிடம் கொடுத்து, தான இறந்த பிறகு 1974 - ஆம் ஆண்டு ஏப்ரல் 6-ஆம் தேதிதான் அதைத திறந்து பார்க்க வேண்டும் என்று கூறிவிட்டுச் சென்றுள்ளார். அவருடைய விருப்பப்படி உயில் வெளியிடப்படுவதற்கு இன்னும் 13 ஆண்டுகள் இருக்கின்றன. அதுவரை உலகம் அவரை ஒரு மந்திரவாதி என்றுதான் எண்ணிக கொண்டிருக்கும்.

1 தன்னுடைய சிந்தனைத் தெளிவாலும் திறமையான செய்கைகளாலும் மக்களைத் திகைக்க வைத்து, தனக்கு ஒப்பாரும் மிககாருமான மந்திரவாதி இல்லை என்று உலகிற்கு உணர்த்திய ஹௌடினி.

2 1874 ஆம் ஆண்டு என்ரிச் விஸ் என்ற பெயருடன் பிறந்தஇவர், தன்னுடைய இளமையிலேயே இவ்வாறு மந்திரவாதுயாகத் தொழில் நடத்தக் கிளம்பி விட்டார்.

3 இளமையிலேயே 'கூரிய' அறிவு படைத்த இவர் எப்படிப்பட்ட பூட்டையும் ஒரு சிறிய ஊசியைக் கொண்டே திறந்து விடுவாராம்.

4 தன்னுடைய பதினெட்டாவது வயதில் வழக்கமாக மந்திரவாதிகள் செய்யும் சாதாரண தந்திரங்களோடு இவர் தொழிலை ஆரம்பித்தார்.

5 பாட்ரிஸ் என்ற அழகியை மணந்துகொண்ட இவர் விரைவிலேயே அவரையும் தன்னுடைய தொழிலிற்குச் சாதகமாகப் பழக்கிவிட்டார்.

6 இவருடைய திறமைகளிலேயே பூட்டிய சிறைச்சாலைகளில் இருந்து தப்புவதுதான் இவருக்கு மிகுந்த புகழைக் கொடுத்தது.

7 ஒருமுறை புகழ்வாய்ந்த ஸ்காட்லண்ட் யார்ட் போலீசார் யாராலும் திறக்கஇயலாத கடினமான விலங்கு ஒன்றை இவருக்குப் பூட்டிவிட்டு "நாங்கள் இன்னும் சிறிதுநேரம் கழித்து வருவதற்குள் உம்மால் விலங்கை உடைக்க முடிகிறதா பார்ப்போம்" என்றார்கள்.

8 ஆனல் இவரோ அவர்கள் திருப்பியதுமே விலங்கைக் கழற்றிக்கொண்டு "இதோ நானும் உங்களுடன் வருகிறேன்" என்றார்.

9 இவருடைய திறமைகளைப் பார்த்த ஜெர்மன் போலீசார் "நல்லவேளை இந்த வித்தை நம்முடைய கைதிகளுக்குத் தெரியாது போயிற்றே" என்று பெருமூச்சு விட்டனர்.

10 ரஷ்யாவில் சைபீரியக் கைதிகளுக்கு என்றே செய்யப்பட்ட ஒரு இரும்பு அறையில் இவர் பூட்டப்பட்டாலும்,

ஜால வித்தை
ஹௌடினி
1
2
3


4
5
6
7
8


9
10
11
12
13
14

15
16
17
18
19


20
21
22
23
24
25

சிறிது நேரத்திற்கெல்லாம் புன்சிரிப்புடன் அதைத் திறந்து கொண்டு வெளியே வந்தார்.

11 அமெரிக்காவில் இவர் அனைவரும் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுதே 5 டன் நிறையுள்ள யானை ஒன்றை காணமல் மறையச் செய்தார்.

12 எப்படிப்பட்ட கடினமான போட்டியாக இருந்தாலும் அவற்றையெல்லாம் ஏற்றுக்கொண்ட ஹௌடினி அவற்றில் எல்லாம் வெற்றிக்கொடியே நாட்டினர்.

13 ஒருமுறை இவரை கடலுக்கடியில் கையும் காலும் விலங்கால் பிணைக்கப்பட்டு விடப்பட்டார்.

14 ஆனல் இவரோ எட்டு நிமிடங்களில் எதுவுமே நடக்காதவரைப்போல கரையிலே காட்சியளித்தார்.

15 வியப்பூட்டும் வேலைகள் முடிந்ததும் இவர் நாள் தவறினலும் தன்னுடைய முக்கியமான தந்திர புத்தகங்களைப் படிப்பதற்கு மட்டும் தவறமாட்டார்.

16 ஏன் என்றால் இவர் தான் செய்பவை யாவும் சிந்தனைத் தெளிவால் செய்யப்படுபவைகளே தவிர அவற்றில் ஒன்று கூட மனித சக்திக்கு அப்பாற்பட்ட சித்து விளையாட்டுகள் அல்ல என்று உறுதியாகக் கூறினர்.

17 ஆனல் மக்களோ இறந்துபோன தங்களுடைய மூதாதயர்களின் ஆவியையே தங்களுடன் பேச வைக்கும் இவரை எப்படி சாதாரண மனிதர் என நம்புவது என்று விழித்தனர்.

18 இதற்காகவே ஒருமுறை எப்படி தான் ஆவியுடன் பேசுகிறர் என்பதை தன்னுடைய நண்பர்களுக்கு விளக்கினர்.

19 அவர்களும் அது தந்திரம்தானே தவிர மந்திரம் இல்லை என்று தெளிந்தனர்.

20 ஒருமுறை அவரை ஒரு மேஜைக்கு எதிரில் உள்ள நாற்காலியில் கயிறு கொண்டு நன்ருக கட்டிவைத்தனர் அப்படி இருந்தும் மேஜைமீது இருந்த மணியை ஹௌடினி குறித்தகாலத்தில் அடிக்கச் செய்தார்.

21 எப்படிப்பட்ட பூட்டையும் கையில் வாங்கிப் பார்த்த மாத்திரத்திலேயே அதனுடைய பூட்டு எப்படி அமைக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கூறிவிடுவார் ஹௌடினி.

22 ஒருமுறை மந்திரவாதி ஒருவன் ஒரு சவத்தை நடக்க வைப்பதை ஹௌடினி ஆவலோடு பார்த்துக்கொண்டிருந்தார்

23 பிறகு தானே ஒரு சவப் பெட்டியில் படுத்துக் கொண்டு அதை நன்ருக அடைத்து விடும்படி கூறினர். பிறகு மூச்சு விடக்கூட காற்று அற்ற அந்தப் பெட்டியில் ஒன்னரை மணி நேரம் உயிரோடு இருந்து காட்டினர்

24 ஒருமுறை புகழ் வாய்ந்த குத்துச் சண்டை வீரர் ஒருவர் என்னுடைய குத்தை இவரால் தாங்க முடியுமா என்று சவால் விட்டபோது 'நான் அதை எதிர்பார்த்தால் என்னல் தாங்கமுடியும்' என்று ஹௌடினி பதில் கூறினர்.

25 ஆனல் அவர் 'ரெடி' என்பதற்கு முன்பே குத்துச் சண்டை வீரர் விளையாட்டாக அவரைக் குத்திவிட்டதால் அந்த அதிர்ச்சியிலேயே சில காலத்திற்குப் பிறகு அவர் மாண்டார்.

அச்சத்தால் உடலெல்லாம் நடுங்கிக் கொண்டிருந்த அந்த அழகி தன்னுடைய நீல விழிகளில் நீர் வழிய அந்த முரடனை ஏறிட்டுப் பார்த்து "மார்ட்டி! காரை இங்கே எதற்காக நிறுத்துகிறாய்?" என்று கிணற்றில் இருந்து பேசுவது போலக் கீச்சுக் குரலிலே கேட்டாள். உடலில் இருந்த நடுக்கம் குரலிலும் நன்கு தெரிந்தது.

ஆனால் தெற்கு பிடடெல்பியாவில் ஊருக்கு வெளிப்புறத்தில் இருந்த ஒரு பாழடைந்த வீட்டிற்கு முன்னே வண்டியை நிறுத்தியிருந்த அந்த முரடனோ பதிலேதும் கூறாது மடமடவென்று வீட்டிற்குள் ஓடிச்சென்று கையில் ஒருகைத் துப்பாக்கியுடன் திரும்பினான்.

என்ன நடக்கிறது என்பதை உணர்ந்து கொள்ளுவதற்கு முன்பே அவளுடைய நெற்றிக்கு குறிவைத்த முரடன் "நான் சொன்னால் சொன்னபடியே செய்துடுவேன். நீ அந்த விஷயத்தை போலீசுக்குத் தெரிவித்தால் நீ மட்டுமல்ல; உன் அருமைக் கணவனும் ஆசைக் குழந்தையும்கூட இந்தத் துப்பாக்கிக்கு இரையாகி விடுவார்கள். நினைவிருக்கட்டும்" என்று மிரட்டினான்.

திராவக வீச்சிற்கு அஞ்சி போலீஸிற்கு உண்மைகளை மறைத்த அழகி பாட்ரிகா

அதற்கு அந்தப் பேதையோ "இதுவரைக்கும் நான் சொன்னேனா? இனியும் சொல்லமாட்டேன்" என்று கதறினாள்.

''ஊம்! அதை நினைவுபடுத்துவதற்காகத்தான் உன்னை இங்கே அழைத்து வந்தேன்'' என்று உறுமிய அந்த மனித மிருகம், மறு விநாடி வீட்டிற்குள் ஓடிப்போய் ரிவால்வரை வைத்துவிட்டு புதிய ஆயுதம் ஒன்றை எடுத்துக் கொண்டு வந்தது.

ஒரு சிறிய பாட்டிலில் இருந்த அதை அவளுடைய முகத்திற்கு நேரே தூக்கிப் பிடித்து ''பேட்! இதுதான் திராவகம். இதில் ஒரு சொட்டு விழுந்தால்கூட உன் ரோஜாக் கன்னங்கள் கருகிப் போகும். நீ போலீஸ் ஸ்டேஷனுக்குப் போகிறாய் என்ற சந்தேகம் எனக்கு ஏற்பட்டால்கூட இந்த பாட்டில் நிறைய உள்ள திராவகத்தை ஊற்றி உன்னை மட்டுமல்லாது உன் குழந்தையையும்—கணவனையும் கூடக் கருக்கிவிடுவேன். என்னை கைது செய்துவிட்டால் கூட என் நண்பர்கள் உன்னை விடமாட்டார்கள். அப்படியே அவர்களால் முடியாமல் போனாலும் சிறையில் இருந்து விடுதலை அடைந்து வந்த உடனேயேயாவது நான் பழிக்குப் பழி தீர்த்துக் கொள்வேன் ஞாபகமிருக்கட்டும்" என்று தனியாகக் கிடைத்த பெண்ணிடம் வீரம் பேசிய அந்தக் கோழை பின்னர் அவளை அவளுடைய வீட்டிற்கு அருகில் இறக்கி விட்டுவிட்டு எங்கோ மாயமாய் மறைந்து விட்டான்.

இந்த அச்சுறுத்தும் படலம் இன்று நேற்று துவங்கியதல்ல. கிம்மெல் என்ற பெயருடைய அந்த முரடன் என்று இந்த அழகி வேலை செய்து கொண்டிருந்த கம்பிளிக் கடையில் இருந்து 75 000 டாலர்கள் பெறுமானமுள்ள விலையுயர்ந்த கம்பிளி ஆடைகளைத் திருடினானோ அன்றே இந்த அச்சுறுத்தும் படலமும் துவங்கிவிட்டது.

இளமையிலேயே தந்தையை இழந்த இந்த அழகுமயில் பிடடெல்பியா அநாதை விடுதி ஒன்றில்தான் வளர்ந்தாள். சிறு குழந்தையாக இருக்கும் பொழுதே 'கொழு கொழு' என்று இருந்த இவளை விளம்பரக்காரர்கள் சுற்றிச் சுற்றி வந்தனர். இவளுக்கு ஒன்பது மாதம் நடந்து கொண்டிருக்கும் பொழுதே இவள் விளம்பரங்களுக்கு 'போஸ்' கொடுக்க ஆரம்பித்துவிட்டாள். இப்படி ஆரம்பித்த இந்த விளம்பரத் தொடர்பு நாளுக்கு நாள் வளர்ந்து இவள் பதினாறு வயதை அடையும்பொழுது இவளை அந்தவட்டாரத்திலேயே தலைசிறந்த 'மாதிரிப் பெண்ணாக' மாற்றி அமைத்திருந்தது.

இந்நிலையில் ஒருநாள் பதினாறு வயதே நிரம்பிய இவளுக்கு பதினேழு வயதே நிரம்பிய 'பாப்'பின் நட்பு கிடைத்தது. இளமைப் பருவத்தில் தோன்றிய இந்த அன்பு இருவரது இதயங்களும் ஒத்துப் போனதால் திருமணத்தில் சென்று முடிந்தது. தொழிற் கல்விப் பட்டம் பெற்று டெலிவிஷன் ரிப்பேரராக இருந்த பாப்போடு இணைந்த பிறகு இவள் தன்னுடைய 'மாடல்' தொழிலையே விட்டுவிட்டாள். இவர்களிடம் பணம் இல்லாது இருந்தாலும், இவர்களுடைய இல்லறத்திலே பணக்காரர்களுக்குக்கூட கிடைக்காத அன்பும் பண்பும் நிறைந்திருந்தன.

இந்நிலையில் இவர்களுக்கு ஒரு குழந்தை பிறக்கவே வீட்டுச் செலவுகளைச் சமாளிப்பதற்காக பாட்ரிகா மீண்டும் உயர்ந்த வகை கம்பளி ஆடைகள் விற்கும் ஒரு கடையில் முதலாளிக்கு உதவி செய்யும் செயலாளராகச் சேர்ந்தாள்.

இந்த வேலையில் இருக்கும் பொழுதுதான் 1960 ம் ஆண்டு ஜனவரி மாதம் ஒருநாள் இவள் மத்தியான உணவிற்காகச்செல் லும் பொழுது வழியில் தன்னு டைய அருமைத் தோழியான டோராவை எதிர்பாராத வித மாகச் சந்தித்தாள். டோரா தன்னுடன் இருந்த கருப்பு மயிர் உடைய இந்த முரடனைத் தன்னுடைய நண்பர் என்றும் இவனுடைய பெயர் மார்ட்டி கிம்மெல் என்றும் அறிமுகப் படுத்தி வைத்தாள்.

நீண்ட நாட்களுக்குப் பிறகு தன்னுடைய தோழியைச் சந் தித்ததாலும், அவள் மிகவும் வருந்தி அழைத்ததாலும் பாட்ரிகா அவளுடன் பக்கத்தில் இருந்த ஒரு உணவு விடுதிக்கு உணவருந்தச் செல்வதற்கு ஒத் துக்கொண்டாள். இவர்களை மார்ட்டி கிம்மெல்லும் நிழலாக ஒட்டிக்கொண்டான்.

உணவு விடுதி வரும்வரை ஊமை போல் இருந்த மார்ட்டி உணவு விடுதி வந்ததுமே பாட்ரி காவுடன் சரளமாகப் பேசத் துவங்கி விட்டான். தனக்குத் தெரியாத பிரச்னைகளே இல்லை என்பது போல அந்தப் பெண் களிடம், விஞ்ஞானம், இலக்கி யம், ஆகிய அத்தனையையுமே நகைச்சுவையோடு, பெண்களை எளிதில் கவரக்கூடிய முறையில் அலசினான். தன்னை ஒரு 'அறி ஞன்' என்று தானே கூறிக் கொண்ட அவனை அறிஞன் என்று ஒத்துக்கொள்ள பாட் ரிகா தயாராக இல்லா விட்டா லும் அவனை ஓர் கெட்டிக்காரன் என்று மட்டும் கருதிக்கொண் டாள். அவன் நடந்துகொண்ட நாகரிகமான முறையும், எந்தப் பிரச்னையையும் ஒரு தெளி வோடு அலசிய வகையும் அவ னிடம் அவளுக்கு ஒருவகை மரி யாதையைத் தோற்றுவித்தது.

இதற்குப் பிறகு சில நாட்கள் கழித்து ஒரு நாள் நடுப்பகலில் மார்ட்டி, பாட்ரிகா வேலைசெய் யும் கடையின் ஜன்னல் ஓரமாக நின்று கொண்டு இவளை வெளியே வரும்படி சைகை செய்தான். இதை பாட்ரிகா சிறிதும் விரும்பவில்லை என்றா லும் அவன் தன்னுடையதோழி யின் காதலன் என்பதால் வெளியே வந்தாள்—அவனுடைய அழைப்பை ஏற்றுக்கொண்டு உணவு விடுதி ஒன்றிற்கும் சென்றாள்.

அப்படிச் செல்லும் பொழுது வழியில் கார் ஒன்று இவர்கள் அருகிலே வந்து நின்றது. அதை ஓட்டி வந்திருந்த மனி தனைத் தன் நண்பன் என்றும், அவனுடைய பெயர் ஜாக்டைய மண்ட் என்றும் பாட்ரிகாவிற்கு அறிமுகப்படுத்திய மார்ட்டி அவனுடன் சிறிது நேரம் தனி யாகப் பேசி விட்டும் வந்தான்.

உணவு விடுதியில் மார்ட்டி முதல் முறை செய்ததுபோன்று தனக்குத்தானே புகழ்பாடிக் கொண்டான். அவனுடைய பேச்சில் இருந்து அவன் தன்னை வியந்த ஒரு கற்பனை உலகில் வாழ்கிறான் என்பதைஉணர்ந்து கொண்ட பாட்ரிகாஏதோஇயந் திரம் போல அவன் சொல்லுவ தற்கு எல்லாம் 'ஆமாம் ஆமாம்' என்று தலை அசைத்து விட்டுத் திரும்பி விட்டாள்.

ஒருநாள் இருட்டிய பிறகு சாத்தானிற்குத் தன்னுடைய மூளையில் இடம் அளித்துவிட்ட மார்ட்டி இவளுடைய கடைக்கு வெளியே நட மாடிக் கொண்டிருந்தான். ஜன்னல் மூலமாகப் பார்த்த பாட்ரிகா தான் வேலை முடிந்து போகும்போது தன்னுடன் பேசுவதற்காகத்தான் அவன் நிற்பதாகக் கருதினாள்.

ஆயிற்று; கடை மூடும் நேர மும் ஆயிற்று. இதுவரை கீழே

இது தான் கொள்ளை அடிக்கப்பட்ட கம்பளி ஆடைக்கடை

கணக்குகளைச் சரிபார்த்துக் கொண்டிருந்த முதலாளி கடையை மூடிவிட்டுப் போகும் படி அவளுக்கு உத்திரவிட்டு விட்டு மாடிக்குச் சென்றுவிட்டார். பாட்ரிகாவும் கடையை மூடுவதற்காக எழுந்தாள். அந்த நேரத்தில் அடிக்க ஓடிவருவது போல மார்ட்டி கடைக்குள் ஓடிவந்தான். திடுக்கிட்ட பாட்ரிகா தன் பலத்தை எல்லாம் திரட்டிக் கொண்டு "உனக்கு என்ன வேண்டும்' என்று சீறினாள்.

உடனே அவளுடைய வாயைப் பொத்திய அவனோ "உஷ்! சத்தம் போடாதே! சத்தம் போட்டாயோ தொலைத்து விடுவேன். இப்போது நான் இந்தக் கடையைக் கொள்ளை அடிக்கப்போகிறேன்" என்றான்.

"ஐயோ! வேண்டாம் மார்ட்டி! இது உன் வாழ்க்கையையே குலைத்துவிடும். எப்படியும் நீ போலீஸாரிடம் சிக்கிக் கொள்வாய்" என்று அவள் அவனுடைய காலிலே விழாத குறையாகக் கெஞ்சினாள்.

ஆனால் ஒரே வெறியில் இருந்த அவனோ 'முதலில் உன்னை இந்த அறையில் தள்ளி அடைத்து விட்டால்தான் என் வேலையைக் கவனிக்க முடியும்' என்று காற்றுப் புக முடியாத

ஒரு அறையை நோக்கி இழுத்துக்கொண்டு சென்றான். ஆனால் நல்ல வேளையாக அறை உட்புறம் பூட்டப்பட்டிருந்ததால் அந்த முயற்சியை விட்டு விட்ட மார்ட்டி "என்னைப்பற்றி போலீஸார் கேட்கும் போது நீ மூச்சுக்கூட விடக்கூடாது. மீறி ஏதாவது துப்புக் கொடுத்தாயோ உன்னை மட்டுமல்லாது உன் குடும்பத்தையே பூண்டோடு அழித்து விடுவேன்" என்று அவளுடைய தோள்களைப் பிடித்து முரட்டுத்தனமாக உலுக்கினான்.

ஏற்கனவே அதிர்ச்சி அடைந்திருந்த பாட்ரிகா இந்த உலுக்கலைத்தாங்க இயலாது அச்சத்தால் மூர்ச்சித்துவிட்டாள். அவள் கண் விழித்து பார்த்தபோது கடை கொள்ளை அடிக்கப்பட்டிருந்தது. விலையுயர்ந்த ஆடைகள் இருந்த கண்ணாடி பீரோக்கள் எல்லாம் காலியாக இருந்தன. எழுந்து மாடியில் உள்ள தன் முதலாளிக்குப்போன் செய்வதற்குக்கூட அவளால் இயலவில்லை. போனின் விசையை அமுக்கிய நிலையிலேயே மயங்கி விழுந்துவிட்டாள். போன் அடிப்பதையும் பதில் இல்லாது இருப்பதையும் கண்டு முதலாளி கீழே ஓடிவந்தார். அங்கு அலங்கோலமான நிலையில் தான் மகள் போல அன்பு செலுத்திய பாட்ரிகா கிடப்பதையும் கடை கொள்ளை அடிக்கப் பட்டிருப்பதையும் கண்டு திகைத்தார்.

போலீஸார் வந்து கேட்டபோது பாட்ரிகாவிற்கு தன்னுடைய பெயர் என்ன என்பதைக்கூடச் சொல்ல முடியாதபடி உள்ளம் குழம்பிக்கிடந்தது எனவே போலீஸ் காவலில்

கொள்ளைக்காரனான தன்னை ஒரு மேதை என்று கூறிக்கொண்ட முரடன் மார்ட்டியும் அவனுடைய நண்பன் ஜாக் டையமண்டும்

மூன்று நாட்கள் மருத்துவமனையில் ஓய்வு பெற்றுக்கொண்ட அவள் நான்காவது நாள் போலீஸ் தலைமை நிலையத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டாள்.

அப்படிப்போகும் போது அவளுடைய நேர்மையான உள்ளம் கொள்ளைக்காரன் யார் என்பதைக்கூறிவிடத் துடித்தது. ஆனால் பூண்டோடு அழித்து விடுவேன் என்று மார்ட்டி எச்சரித்த எச்சரிக்கை முன் வந்து நின்று அவளை உண்மை பேச இயலாது தடுத்துவிட்டது.

குற்றவாளி எப்படி இருப்பான் என்று அடையாளம் கூறியபோது இவள் ஒவ்வொன்றையும் நன்றாக வர்ணித்தாளே தவிர அவனுக்கும் தனக்கும் முன்பு தொடர்பு இருந்ததையோ, அவன் யார் என்று தனக்குத் திட்டவட்டமாகத் தெரியும் என்பதையோ அச்சத்தால் மறைத்து விட்டாள்.

வீட்டிற்குவந்ததும் இவளுக்கு இந்தக் கொள்ளையைப் பற்றிய மேற்கொண்டு விவரங்களும் தெரியவந்தன. கொள்ளை அடிப்பதற்கு ஒரு மெர்க்குரி கார் பயன்பட்டிருப்பதாக போலீஸார் சந்தேகப் படுவதாகப் பத்திரிகைகளில் இருந்து தெரிந்ததும் இந்தக் கொள்ளையில் முன்பு தனக்கு ஒருநாள் அறிமுகம் செய்து வைத்த ஜாக் டைமண்டும் சம்பந்தப்பட்டிருக்கிறான் என்பதையும் இவள் திட்டவட்டமாகத் தெரிந்து கொண்டாள். இப்படி குற்றவாளிகள் யார் என்று தனக்கு நன்றாக தெரிந்திருந்தும் அதை வெளியிட முடியாததால் அவளுடைய நேர்மையான உள்ளம் நீதிக்கும் நேர்மைக்கும் இடையிலே இருதலைக்கொள்ளி பாம்புபோல அலைபாய்ந்து கொண்டிருந்தது,

இந்நிலையில்தான் ஒரு நாள் பாட்ரிகாவிற்கு அவளுடைய கணவன் வீட்டில் இல்லாத பொழுது ஒரு போன் வந்தது. அதில் முரட்டுக் குரல் ஒன்று "நான்தான் மார்ட்டி பேசுகிறேன். உன்னுடன் ஒரு முக்கிய விஷயம் பேசுவதற்காக மூன்று வீடுகள் தள்ளி காரில் காத்துக் கொண்டிருக்கிறேன். உடனே புறப்பட்டுவா. போலீஸிற்கு இதைத் தெரிவிக்க முயன்றால் வேலைக்குப்போன இடத்திலேயே உன்கணவனைக் கொலை செய்துவிடுவோம்'' என்று கடுமையாக ஒலித்தது.

செய்தியை அறிந்ததும் பதறிப்போன பாட்ரிகா தன் குழந்தையைப் பக்கத்து பிளாககில் இருந்த உறவினர் ஒருவரிடம் விட்டு விட்டு ஓடிப்போய் அந்த முரடனைச் சந்தித்தாள். அவனே அவளை அழைத்துக் கொண்டு போய் ஒரு பாழடைந்த வீட்டிற்கு முன்னால் நிறுத்திக் கொண்டு இந்தக் கதையின் ஆரம்பத்தில் கூறப்பட்டிருப்பது போல மீண்டும் ஒருமுறை மிரட்டி அனுப்பினான்.

இதற்குப் பிறகு இந்த இக்கட்டில் இருந்து எப்படி தப்புவது என்பதிலேயும் — எப்போதும் சாவு தன்னைப் பின்தொடர்வது போன்ற ஒரு பயங்கரமான பீதியிலும் கழித்த பாட்ரிகா 1960–ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 16ஆம் தேதி தன்னுடைய தோழி ஒருத்தியின் காதலனை தற்செயலாகச் சந்தித்தாள்.

அவன் இவளைப் பார்த்ததுமே "உங்களுடைய கடையில்தானே கொள்ளை போயிற்று'' என்று பேச்சைத் துவக்கி, பேச்சுவாக்கில் "என் உறவினர் ஒருவர் தான் இந்த வழக்கைத் துப்பறிந்து கொண்டிருக்கிறார்" என்றான்.

'அப்படியா' என்ற அவள் "ஒருமுறை அவரை நான் பார்க்க வேண்டுமே'' என்று இப்படியும்

அப்படியும் திருட்டு விழி விழித்துக்கொண்டே கூறினுள்.

'அவரை அலுவலகத்தில் சென்று பார்க்கலாமே!' என்று கூறிய அவனை, 'கூடாது! கூடாது' என்று இடைமறித்த பாட்ரிகா "அவர் இங்கும் வரக்கூடாது. நானும் அங்கு போகக் கூடாது. இரண்டும் இல்லாது எங்காவது ஹோட்டலில் அவரை சந்திக்க இயலுமா?" என்று கேட்டாள்.

அவளுடைய விருப்பப் படியே மறுநாள் ஹோட்டல் அறை ஒன்றில் சந்திப்பதற்குத் துப்பறியும் அதிகாரியும் ஒத்துக்கொண்டார். அன்று இரவு முழுவதும் மார்ட்டி காட்டிய திராவகத்தையும், அவன் கையில் வெடிக்கத்தயாராக இருந்த துப்பாக்கியையுமே எண்ணி எண்ணிக் குழம்பிக் கொண்டிருந்த பாட்ரிகா, குறித்த நேரம் வந்ததும், தன்னை எப்போதும் தொடர்ந்து கொண்டே இருக்கும் மார்ட்டியை ஏமாற்றுவதற்காகத் தன்னுடைய குழந்தையுடன் கடைக்குச் செல்வது போலக் கிளம்பினுள்.

முதலில் ஒரு ஜவுளிக் கடைக்குள் நுழைவது போல போக்குக் காட்டிய அவள், பின்னர் ஹோட்டல் அறையில் துப்பறியும் அதிகாரியைச் சந்தித்து தன் சோகக் கதையைக் கல்லும் கரையும் வண்ணம் சொல்லி அழுதாள். அவளுடைய சாட்சியத்தின் பேரில் மார்ட்டியும், அவனுக்கு உதவிய ஜாக் டைமண்ட் என்ற போலிப் பெயரில் உலவிய ரோஷனும் கைது செய்யப் பட்டனர்.

இதனுல் இவளுடையபெயர்பத்திரிகைகளிலே அடிபடலாயிற்று முன்பு அவள் ஒரு 'மாதிரிப் பெண்ணுக' இருந்தாள் என்பதை வைத்துக்கொண்டு பத்திரிகைகள் அவள்மீது தம்மனம் போன போக்கில் தலையங்கங்கள் தீட்டின. ஒருசிலபத்திரிகைகள் அவளுக்கும் மார்ட்டிக்கும் காதல் என்றும் தன் காதலனை மறைக்கத்தான் அவள் இவ்வளவு நாள் இந்த உண்மையைக் கூறவில்லை என்றும்கூட கதை கட்டிவிட்டன.

வெறும் பீதிக்கு மனதிலே இடம் கொடுத்து விட்டு கொள்ளைக்காரர்களின் விருப்பத்திற்கு ஏற்றபடி யெல்லாம் அவள் நடந்து கொண்டிருந்ததால் சட்டத்தின் பிடியிலிருந்து மட்டுமல்லாது, சமுதாயத்தின் தூற்றலில் இருந்தும் தப்புவதற்கு அவள் அரும்பாடுபட வேண்டியதாயிற்று.

அவள் நினைத்ததுபோல மார்ட்டி கொலைசெய்யக்கூடிய அளவிற்கு துணிந்தவன் அல்ல. ஏன் எனில் அவனை பெயிலில் விடுதலை செய்திருந்தபோது கூட அவன் பாட்டிரிகாவின் குடும்பத்திற்கு எந்தவிதத் தீமையையும் செய்ய எண்ணவில்லை. அழகிக்கு அதிர்ச்சி கொடுத்து, அதனுல் தப்பித்துக் கொள்ளலாம் என்பதற்குத்தான் தான் இவ்வாறு நடந்து கொண்டதாக அவன் துப்பறியும் அதிகாரிகளிடம் ஒப்புக்கொண்டான். எனவே இனியாவது நம்முடைய பலவீனம்தான் எதிரியின் பலம் என்பதை உணர்ந்து கொண்டு, எப்படிப்பட்ட எச்சரிக்கை வந்த போதும் அந்த ஏமாற்றுக் காரர்களுக்கு அடங்கி விடாது போலீஸின் உதவியை நாட வேண்டுகிறோம். பொதுமக்களின் பாதுகாப்பிற்கு என்றே உள்ள அந்தக் கடமை வீரர்களின் பணியைப் பயன் படுத்திக் கொண்டு சமுதாய விரோதிகளைக் கருவறுக்க வேண்டுகிறோம்.

மறைந்த நட்சத்திரங்களின் சந்திப்பு.....

(தாரா)

[கற்பனை உலகில் உள்ள அரசியல் சோலையில் மற்றவர்கள் உலவிக் கொண்டிருக்க 'கொலை! கொலை!' என்று இரும்பு மனிதரான ஸ்டாலின் கதறிக் கொண்டு ஓடிவருகிறார்]

டிராஸ்கி: என்னைத் தான் துரத்தித் துரத்தி கொலை செய்தீர்கள் என்றால் உங்களையுமா கொலை துரத்துகிறது.

ஸ்டாலின்: கொலை என்னைத் துரத்தவில்லை. காங்கோ பிரதமர் லுமும்பாவைத் தான் தொலைத்து விட்டது

எம். என். ராய்: ஆப்பிரிக்கா இன்னும் விழிக்கவில்லை. அதனுடைய அடிமைத்துயில் அகற்றுவதற்காக பாவம் லுமும்பா தானே இரத்தபலியாகிவிட்டார்.

லெனின்: இல்லை இல்லை. வேண்டுமென்றே அவர் பலி ஆடு ஆக்கப்பட்டார். திருடனை விரட்டப் புகுந்த போலீஸ்காரன் திருடனைப்பிடித்து வைத்துக் கொள்ளுவதற்கு மாறாக வீட்டுக்காரனையே பிடித்துவைத்துக் கொள்வது போல லுமும்பாவின் அழைப்பின் பேரில் அங்கு சென்ற ஐ. நா. லுமும்பாவிற்கு உதவுவதற்குமாறாக அவரைப் பிடித்து கொலைகாரர்களிடம் ஒப்படைத்து விட்டது.

காந்தியார்: கோழை நூறு முறை சாகிறான்; வீரன் ஒரே ஒரு முறைதான் சாகிறான் என்ற பழமொழிக்கு ஏற்ப துப்பாக்கி முனையிலே கூட தன்னுடைய இலட்சியத்தை விடாது இருந்த அந்தச் சுத்த வீரனை உலகம் என்றென்றும் மறவாது.

பட்டேல்: அவரிடம் மட்டும் படைபலம் இருந்திருந்தால் இந்த மொபுடு கும்பலை நான் எப்படி ஹைதராபாத் குழப்பத்தை ஒரே நாளில் அடக்கினேனே அப்படி அடக்கிவிட்டுப் போயிருப்பார்.

டிஸ்ரேலி: அதற்கு காங்கோ பிரிட்டனுடைய காலனியாக இருந்திருக்க

வேண்டும் நண்பரே! ஏன் எனில் எங்களிடம் இருந்து விடுதலைபெற்ற நாடுகளிலே தான் இராணுவம் அரசியலில் தலையிடுவதில்லை.

மெக்காலே : அது மட்டுமல்ல; ஆங்கிலக் கல்வி கொடுத்தால் விடுதலை உணர்ச்சி பொங்கும் என்பது எங்களுக்குத் தெரிந்திருந்தும் நாளை நாம் விடுதலை தந்தால் இங்கு குழப்பம் விளையலாகாதே என்று அஞ்சியே காலனி நாட்டு மக்களுக்கு நாங்கள் அரசியல் கல்வி அளித்தோம்!

கலைவாணர்: அது மட்டுமா? படிப்படியாக பஞ்சாயத்து போர்டு; மாவட்டக் கழகம்; நகராண்மைக் கழகம் என்று பல்வேறு ஜனநாயக அமைப்புக்களிலும் பயிற்சி அளித்ததால்தான் விடுதலைகிடைத்தபோது தலைவர்களால் தங்களுடைய பொறுப்புஉணர்ந்து நடக்க முடிந்தது.

ஆர். கே. எஸ்: உண்மைதான். எங்கள் பக்கத்தில் தந்தை இருக்கும்பொழுதே மகனுக்குப் பெட்டிச் சாவி கொடுத்து அவனுக்கு பொறுப்பு ஏற்படுத்துவது போல - தவறு செய்யும் பொழுது திருத்துவதுபோல ஆங்கில அரசியலாரும் நம்மை பொறுப்பை ஏற்க திட்டமிட்டுத் தயாரித்ததால் தான் மலை போன்ற சுமையை எல்லாம் நாம் சருகு போன்று எளிதாக ஏற்க முடிந்தது.

சீனிவாசசாஸ்திரி : ஆனால் ஏகாதிபத்திய வெறி பிடித்த பெல்ஜியமோ தன்னுடைய காலனி நாடான காங்கோவிற்கு விடுதலை தரவேண்டும் என்பதைக் கனவிலும் கருதவில்லை, எதிர்பாராத விதமாக மக்களுடைய எழுச்சியால் காங்கோவிற்கு விடுதலை தரக் கட்டாயப்படுத்தப்பட்ட பெல்ஜியம்தன்னுடைய பணபலத்தால் அந்த நாட்டு விடுதலை வீரர்கள் சிலரையே விலைக்கு வாங்கி விட்டது.

பெர்னுட்ஷா : அணையப் போகும் விளக்கு சுடர் விட்டு எரிவதைப்போல— வெளுக்கப்போகும் வானம் ஒருமுறை இருள்மூடி விலகுவது போல நன்மை மலர்வதற்கு முன் — அடிமைத்தளை பூரணமாக அறுவதற்குமுன் எபபடிப் பட்ட நாட்டிலும் ஒரு குழப்பம் ஏற்படத்தான் செய்யும்.

[அப்போதுதான் அங்கு வந்துசேர்ந்த]

லுமும்பா : நல்ல வேளையாக உலக நாடுகள் எவற்றிற்கும் கிடைக்காத ஒப்பற்ற தலைவர்கள் இந்தியாவிற்கு கிடைத்தார்கள். அவர்களுடைய முயற்சியால் உருண்டோடி வரும தடைக் கற்கள் எல்லாம் தகர்த்தெறியப்படுகின்றன. இல்லை என்றால் இந்தியாவும் குழப்பத்தின் செல்லக் குழந்தையாக மாறி இருக்கலாம்.

இருண்டு கிடந்த உலகிற்கு மின் ஒளி தந்த மேதை......

தாமஸ் ஆல்வா எடிசன்

1847-1931





1 எடிசன் ஒகியோவைச் சேர்ந்த மத்திய மேற்கு மாநிலம் ஒன்றிலே பிறந்தார். இவருடைய தந்தை ஒரு தானிய வியாபாரியாக இருந்ததால் இவருடைய இளமைப் பருவம் இன்பமாகவே கழிந்தது.

2 தன்னுடைய தாயாரிடமே எடிசன் ஆரம்பக் கல்வியைக் கற்றுக் கொண்டார். ஆரம்பத்தில் இவர் கணக்கில் மக்காக இருந்தாலும் ரசாயனத்தில் அதிக ஆர்வம் உடையவராக இருந்தார்.



3 தன்னுடைய 12 வயதிலேயே ஓடும் ரயிலில் பேப்பர் விற்கும் பையனாகத் தொழில் புரிய ஆரம்பித்தார்.

4 இவர் கண்டுபிடித்த முதல் பயன் உள்ள கருவி நவீன முறையில் திருத்தி அமைக்கப் பட்ட டைப்ரைட்டர்தான்.

5 நியூஜெர்ஸியில் ஆராய்ச்சி சாலை ஒன்றைத் துவக்கினர்.

6 1877-ல் மின்சார விளக்கு ஒன்றைக் கண்டுபிடிப்பதற்காக, இரவையும் பகலாக்கி உழைத்தார்.

7 இவ்வாறு இரவு பகல் எந்நேரமும் ஆராய்ச்சியிலேயே ஈடுபட்டிருந்த இவருக்குக் கடுமையான உழைப்பால் உடல் நலம் குன்றியது.

9 இறுதியாக 1879 - ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 21 - ஆம் தேதி அன்று எடிசன் தன்னுடைய முதல் மின்சார விளக்கை பொதுமக்களுக்கு அறிமுகப் படுத்தினர்.

10. நீண்ட நேரம் எரியக் கூடிய பொருளைத் தேடிக் கொண்டிருக்கையில் தற்செயலாக விசிறி ஒன்றில் இருந்து மூங்கில்பட்டை அவருக்கு கிடைத்தது.



11 தன்னுடைய மின்சாரவிளக்குகளை உலகம் முழுவதும் பரப்புவதற்காக எடிசன் தானே சொந்தத்தில் ஒரு தொழிற்சாலையைத் துவக்கினர்.

12 எடிசனின் விளக்குகள் உலகம் முழுவதிலும் பரவின. அதனால் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான மின் சேகரிப்பு நிலையங்கள் தோன்றின



13 1889ஆம் ஆண்டு எடிசன் அசையும் படக்காமிராவையும், அவற்றைத் திரையிடுகின்ற இயந்திரத்தையும் செப்பனிட்டுத் தந்தார்.

14 1928ல் இவருக்குப் பரிசுகளும் பாராட்டுகளும் வந்து குவிந்தன.



15 உலகில் விஞ்ஞானிகள் விளைவித்த எத்தனையோ அற்புதங்கள் இருக்கின்றன. ஆனால் இருளிலே சிக்கிச் சிதைந்து கொண்டிருந்த உலகிற்கு தன்னுடைய மின் விளக்குகளால் ஒளியூட்டிய இந்த மனித தெய்வத்தின் சாதனைக்கு இணையான சாதனை வேறு ஏதும் இல்லை. அதனால்தான் விஞ்ஞானத்திற்கு சிகரம் அமைத்த இவருக்கு நாம் சிரம் தாழ்த்துகின்றோம்

ஓவியக்கலை

ஓவியமன்னன் ராஜா ரவிவர்மா

ஓவியக் கலைஞர்கள்-32

கிராஸ் (Gros-1771-1835)

ஓர் கலைஞனையோ, எழுத்தாளனையோ, ஓவியனையோ வறுமை துரத்த ஆரம்பித்தால், அதால் உலகிற்குப் பெருத்த லாபமும் தனிப்பட்ட அவனுக்கு நஷ்டமும்தான் விளையுமென்பார்கள்! காரணம் வறுமையால் வாடும் போதுதான் அவனுள்ளத்திலே அலைமோதும் பல்லாயிரக்கணக்கான எண்ணங்கள் உருப்பெறுகின்றன-அவைதான் சோகமாகவும், எழுத்தோவியமாகவும், நெஞ்சையள்ளும் சித்திரமாகவும் மாறி மக்கள் உள்ளத்தைப்பரவசப் படுத்துகின்றன. எனவேதான் கலைஞனின் வறுமையால் உலகிற்கு லாபமென்று சொல்ல வேண்டியிருக்கிறது!

ஆனால் ஓர்கலைஞனையோ, கவிஞனையோ, எழுத்தாளனையோ, அல்லது ஓர் ஓவியனையோ வறுமையல்லாது, ஏதோ ஓர்இனந்தெரியாத மனக்கவலையும், கிலியும், மனநோயும் துரத்துமேயானால், அந்தநேரத்தில்தான் கலையுலகிற்கும், எழுத்துலகத்திற்கும் அதால் பேரிழப்பும்பெருநஷ்டமும்ஏற்படுகிறது. அதுமட்டுமல்ல அந்த பயங்கர சூழ்நிலை சம்பந்தப்பட்ட கலைஞனையோ, ஓவியனையோ, உலகினின்றே விடை பெற்றுக் கொள்ளவும் செய்துவிடுகின்றது. இங்ஙனம் உயிரிழந்தவர்கள் ஏராளம்!

அதிலே ஒருவன்தான் ஓவியக் கலைஞன் கிராஸ் (Gros-1771-1835), மிகுதியான மனவேதனையாலும், அடக்கமுடியாத பெருங்கவலையாலும் அவன் நிரந்தர அமைதிதேடி 'சீன்' நதியின் பெருவெள்ளத்தில் மூழ்கிவிட்டான்......மறு



தூரிகை வேந்தன் கிராஸ்

வண்ணக் கலைஞன் கிராஸ் தீட்டிய மாவீரன் நெப்போலியன்.

கணம் (ஜூன் 25-1835) அவனுக்கு அமைதியும், பிரான்ஸ் மக்களுக்கு மறுநாள் அவன் சடலமும் கிடைத்தது!

இந்த உலகம் புகழும் மாபெரும் ஓவியன்—பிரஞ்சுப் புரட்சியிலே தோன்றி நெப்போலியனால் பெரிதும் ஆதரிக்கப்பட்டு, அவன் துணைவி ஜோசபைனால் போற்றப்பட்டு, மக்களாலும், பொருட்காட்சி மன்றங்களாலும் புகழப்பட்ட 'கிராஸ்'-இறுதியில் ஏதோ ஓர் மனக்கவலையால் தற்கொலை செய்துகொண்டு மடிந்துவிட்டான் என்று அகில ஐரோப்பாவும் பிரான்ஸும் அனுதாபம் காட்டியழுதது.

கிராஸ் ஏனிறந்தான் நதியில் வீழ்ந்து என்று எவர் எவரையோ கேட்டது. பதிலில்லை- பிறகுதான் அவன் விட்டுச்சென்ற ஓவியங்களைக் கண்டு ஆறுதலடைந்தது பிரான்ஸ்!

இத்தகைய பெருமைவாய்ந்த கிராஸ்-பிரான்ஸின் பிரஜை- 1771-ல் பிறந்தவன்-அந்நாளைய மிக மிகப் புரட்சி ஓவியன் டேவிட்டின் சீடனாக வளர்ந்தவன். பிற்காலத்தில் இத்தாலிய ஓவியங்களினால் தனது தூரிகையைத் திருத்தியமைத்துக் கொண்டவன். ரூபன்ஸ்-மைக்கேல் ஆஞ்சிலோ போன்ற மேலைநாட்டு ரவிவர்மாக்களைத் தன் மானசீக ஆசிரியராகக் கொண்டு பணிபுரிந்தவன்!

பிரஞ்சுப் புரட்சி முடிந்து நெப்போலியன் எழுச்சி பெற்றதும், அவன் காதற்கிழத்தி ஜோசப்பைனுக்கு அறிமுகப்படுத்தப்பட்டான் கிராஸ்! கிராஸின் ஓவியச் சிறப்புகளால் கவரப்பட்ட ஜோஸப்பைன்

அவனைத்தன் காதற் கண்ணாளன் நெப்போலியனுக்கு அறிமுகப்படுத்தினாள்! அது முதல் கிராஸ் நெப்போலியனின் போர்க்கால ஓவியனானான்!

நெப்போலியனின் போர்க்களங்களையும், அவனுடைய போர்க்கோலங்களையும், ஜோசப்பைனின் வனப்பையும், மற்றும் அவனது தளபதிகளின் சிறப்பையும், சித்தரிக்கும் சரித நிகழ்ச்சிகளையே தன் தூரிகைக்கேற்ற பொருள்களாகக் கொண்டான் கிராஸ். அதிலே அளவில்லாத புகழையும் பெற்றான்-ஆனால் இத்தகைய பெரும் புகழும் அந்தஸ்தும் நெப்போலியனுக்குப் பிறகு அவனுக்கு நிலைக்காமல், அவன் வீழ்ச்சிக்குப்பிறகு மிகவும் கஷ்டப்பட்டான்!

அதன் பிறகு அவன் மக்கள் மத்தியில் வர வெகுகாலம் பிடித்ததென்றாலும், அதற்காக அவன் வெகு சிரமம் மட்டும் படவில்லை, ஆனால் எக்காரணத்தாலேயோ, அவன் புகழ் நன்றாகப் பரவிவந்த அதே நேரத்தில் அவன் இவ்வுலகத்தை விட்டே மறைந்துவிடத் தீர்மானித்துவிட்டான்! அதோடு அவனை வளர்த்த 'சீன்' நதியிலே அவன் சடலத்தையும் மிதக்கவிட்டு விட்டான் கிராஸ். இந்தப் பரிதாப நிகழ்ச்சி ஓவிய உலகத்திற்கே பெரிய நஷ்டமென்றாலும், அவனுக்கு மட்டும் மன ஆறுதலளித்ததே அந்த நிகழ்ச்சி என்று நாமும் ஆறுதலடைய வேண்டியிருக்கிறது! வாழ்க கிராஸின் பெரும்புகழ்!!

வாணி தமிழ் இங்கிலீஷ் போதினி

தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் இந்தப் புத்தகத்தின் மூலம் பிறர் ஒத்தாசையில்லாமல் இங்கிலீஷ் சுலபமாகப் படிக்கவும் பேசவும் கடிதங்கள் எழுதவும் கற்றுக் கொள்ளலாம்.

704 பக்கங்கள் கொண்ட பெரிய பைண்டு புத்தகம். விலை ரூ. 5-00 V. P. செலவு 1-20 np.

வாணி தமிழ் ஹிந்தி ஆசான்!

தமிழைக் கொண்டு பிறர் உதவியின்றித் தானே சுலபமாகப் படிக்கவும் பேசவும் கற்றுக் கொள்ளலாம். விலை ரூ. 2-25 np.
V. P. செலவு 0-75 np.

ஐசுவரியம்
[குடிசைத் தொழில்]

சோப்பு, இங்கி, ஊதுபத்தி, மெழுகுவர்த்தி, ஸ்னோ, பேஸ் பவுடர், சாம்பிராணி போன்ற 200 கைத்தொழில் கொண்டது ரூ. 3-0-0
V. P. செலவு ரூ. 1-0-0

VANI BOOK DEPOT, ::

3, Malaiyaperumal Street, Madras-1

கேள்வி — பதில்

★ எம். கோதண்டராமன்—
கொடுமுடி

ஆந்திரம் அளித்த அழகோவியங்களான சாவித்திரி—பானுமதி இந்த இருவரில் யார் சிறந்த நடிகை?

○ சாவித்திரி விதவைக்கோலம் பூண்ட பல படங்கள் வெளி வந்து விட்டன. ஆனால் பானுமதி விதவைக் கோலம் பூண்ட கானல் நீர் இன்னும் வெளிவரவில்லை. அது வந்த பிறகுதான் இந்தச்சிக்கலான கேள்விக்கு ஒரு திட்டவட்டமான விடை கூறமுடியும்.

★ கே. செல்லம்—ஈரோடு

உடல் பருமனைக் குறைக்க இயலுமா?

○ உடல் பருமனை மட்டுமல்ல, இதுவரை குறைக்க முடியாது என்று கருதப்பட்ட உடல் உயரத்தைக்கூட தற்போது ஜெர்மனியில் பிளாஸ்டிக் அறுவை சிகிச்சையின்மூலம் குறைத்து விடுகிறார்கள்.

★ கு. விமலநாதன்—பூனா.

சங்ககாலம் தானே தமிழின் பொற்காலம்?

● அல்ல. நாம் வாழும்தற் காலம் தான் தமிழின் பொற் காலம். ஏன்எனில் சங்ககாலத்தில் தமிழறிந்தவர்கள் – தமிழகத்தில் மட்டும்தான் இருந்தனர். ஆனால் இன்றோ தூரதேசமான இரஷ்ய மண்ணிலேகூடப் பைந் தமிழ் ஒலிக்கின்றது. 'ஐங்குன்றன்' என்ற தமிழ்ப்பெயரை உடைய ரஷ்யரே அங்கு இருப்பதாக நம்முடைய சகஸ்ரநாமம் தித்திக்கும் செய்தி கொண்டு வந்திருக்கின்றார்.

★ வீ. சாந்தகுமாரி—சென்னை

'பிளீடிங் மதராஸ்' என்றால் என்ன?

● 'இரத்தம் வடியும் சென்னை' என்ற பொருளுடைய இந்தப் பெயர் சலவைக்குச் சலவை நிறம் மாறக்கூடிய ஒருவகை கைத்தறித் துணிக்குத் தரப் பட்டிருக்கிறது. அமெரிக்காவில் இந்தத் துணிகளுக்கு நல்ல கிராக்கி இருந்ததால் 16 இலட்சம் கெஜம் அளவிற்கு இங்கு 'பிளீடிங் மதராஸ்' மிக வேகமாகத் தயாரிக்கப்பட்டது. ஆனால் இன்றோ குறிப்பிட்ட காலத்தில் ஆர்டர்களைப் பூர்த்தி செய்து கொடுக்காததாலும் – வியாபாரிகள் தில்லு முல்லுகள் செய்து போலிகளை ஏற்றுமதி செய்ய முயன்றதாலும் அமெரிக்கா தன்னுடைய ஆர்டரை வாபஸ் வாங்கி விட்டது. எனவே இரத்தம் வடியும் சென்னையைத் தயாரித்தவர்களுடைய கண்கள் எல்லாம் இன்று இரத்தக்கண்ணீரிலே தேங்கிக் கிடக்கின்றன.

★ ரா. மு. கோதண்டராமன்—
ஏர்வாடி

அழகுமயில் குசலகுமாரி இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்?



○ உங்களுடைய கேள்விக்குப் பதில் எழுதும் இந்த இரவு பன்னிரெண்டு மணிக்கு கட்டிலிலே நன்றாகத் தூங்கிக்கொண்டிருப்பார்.

★ கரூர்- கலிவரதன்—கரூர்.

அடுத்த ஆண்டு நடைபெறப் போகும் தேர்தலுக்குப் பிறகு அமையும் சட்டசபை எப்படி இருக்கும்?



● ஒரே அல்லிராஜ்யமாக இருக்கும். ஏன்எனில் வருகின்ற தேர்தலில் உலகிலேயே முதல் முறையாகத்தமிழ்நாடு காங்கிரஸ், 50 சதவிகிதத்திற்குமேல் பெண் உறுப்பினர்களை நிறுத்தி வைக்கப் போகிறதாம்.

★ சி. கே. நாயர்—மதுரை

இந்தியாவிலேயே பணக்கார நடிகை என்று யாரைக் கூற வேண்டும்?

● சந்தேகமில்லாமல் நம்முடைய வண்ணமயில் வைஜயந்திமாலாவைத்தான்.

★ எஸ். ராமமூர்த்தி—சேலம்

தமிழகம்தனக்கு எந்தநாட்டை முன் மாதிரியாக வைத்துக் கொள்ளவேண்டும்?

● ஜெர்மனியை. ஏன்எனில் இரண்டு உலகப் போரிலும் ஜெர்மனி கலந்து கொண்டு பலத்த அடி வாங்கியும் அந்த நாட்டில் உள்ள மக்களுடைய மூளை வளத்தாலும் உடல் பலத்தாலும் இன்று குபேரபுரியான அமெரிக்காவிற்கே டாலர்கடன் கொடுக்கும் அளவிற்கு உயர்ந்து நிற்கிறது.

★ மு. ரேணுகா—திருப்பத்தூர்.

காமராஜர் மட்டும் இல்லாது இருந்திருந்தால்...

● ஆச்சாரியார் சுதந்திராக் கட்சியை ஆரம்பித்திருக்கமாட்டார். பணபலம் மிகுந்த ஒரு எதிர்க்கட்சியை காங்கிரஸ்தேர்தலிலே சந்தித்திருக்கவேண்டிய அவசியமும் ஏற்பட்டிருக்காது.

★ ஜி. ஆர். சேகர்—பம்பாய்

காங்கோவை ஐ. நா. தர்ம கர்த்தா நாடாக்கி அதனுடைய நிர்வாகத்தை இந்தியா ஏற்க வேண்டும் என்று சில நாடுகள் கூறும் யோசனையைப் பற்றி தங்களுடைய கருத்து என்ன?

● அந்த முரட்டுக் குழந்தையை சிலர் தந்திரமாக நம்முடைய தலையில் கட்டிவிடப் பார்க்கின்றனர். அப்படி ஒரு நிலை ஏற்பட்டு இந்தியா அதனுடைய நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டால் நம்முடைய பிரதமருக்கு வேண்டுமென்றால் உலகப் புகழ் கிடைக்கலாம். ஆனால் அங்கு செல்லும் இந்திய நிர்வாகிகளுக்கோ எப்போதும் ஆபத்துத்தான்.

★ எஸ். வி. நடராஜன்—
பட்டுக்கோட்டை,

தமிழ்நாடு எப்போது அமெரிக்காவாக மாறும்?



● அய்யோ! தமிழ்நாடு அமெரிக்காவாக எப்போதும் மாற வேண்டாம். ஏன் எனில் அங்கு ஒரு மணிக்கு ஒரு கொலையும், ஒரு நிமிஷத்திற்கு ஒரு கற்பழித்தலும் நடக்கிறதாம்.

★ எம். ஜகதீசன்—செங்கற்பட்டு.

மூன்ருவது உலகயுத்தம் வருமா?

● மூன்ருவது உலக யுத்தம் வந்திருகக வேண்டுமென்ருல் யு. 2 விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதே அன்றே வந்திருக்க வேண்டும். அல்லது இரஷ்யாவின் நண்பரான லுமும்பா படுகொலை செய்யப்பட்ட மறுநாளே துவங்கி இருக்க வேண்டும். ரஷ்யாவின் பொறுமையைச் சோதித்த இந்த இரண்டு நேரத்திலும் வராத யுத்தம் இனி எப்போதுமே வராது.

★ ஜி. பி. கோவிந்தன்-சென்னேரி

கவிஞனுக்கும் விஞ்ஞானிக்கும் என்ன வித்தியாசம் ?

● கவிஞன் இவை இப்படியும் இருக்கலாம் என்று கற்பனை செய்து பாடுகிருன். ஆனல், விஞ்ஞானியோ இவை இப்படித்தான் இருக்கவேண்டும் என்று உண்மையைக் கூறுகிருன். இதனுல் கவிஞனின் கூற்று சில போது தவறி விடலாம். ஆனல் விஞ்ஞானியின் கணக்கு எப்போதுமே தவறுவதில்லை. ஏன் எனில் நிலவைக் கண்டு தான் ஆம்பல் முகம் மலரும் என்று கவிஞர்கள் கற்பனை செய்கிருர்கள். ஆனல் உண்மையிலோ நிலவே தெரியாத அமாவாசை இரவிலேகூட ஆம்பல் மலர்ந்து மறுநாள் பகல் 11 மணிவரை கூம்பாது இருக்கிறது என்று விஞ்ஞானிகள் கண்டு பிடித்திருக்கிருர்கள்.

★ எஸ். ராமமூர்த்தி-பரமக்குடி.

தங்களுக்குப் பழக்கமான எத்தனையோ போராட்ட நெறிகள் இருக்க, சம்பத் ஏன் தங்களுக்குப் பழக்கமில்லாத உண்ணுவிரதத்தை மேற்கொண்டார்.

● 'அண்ணு லைட் ஹவுஸில் இருந்து குதிக்கச் சொன்னுல் இவர்கள் குதித்து விடுவார்களா?' என்று சவால் விட்ட கே. ஆர். ராமசாமியின் சவாலை ஏற்றுக் கொள்ளுவது போலத்தான் சொல்லின் செல்வர் தன்னைக் கொன்று கொண்டாவது தாயகத்தை வாழ்விக்கும் உண்ணுவிரதத்தில் ஈடுபட்டார்.

★ கே. ஆர். கல்யாணம்–சென்னை

எலிசபெத் அரசியார் சென்னைத் தெருக்களிலே பவனிவந்த போது என்ன எண்ணியிருப்பார்?

● உலகத்து நாகரிகங்களிலேயே பழமை வாய்ந்ததும் பாபிலோனிய சுமேரிய நாகரிகங்களுக்கு எவ்வகையிலும் குறைந்தது அல்லாததுமான திராவிட நாகரிகத்தையும், அதனுடைய விருந்தோம்பும் பண்பையும் எண்ணி எண்ணி வியந்திருப்பார்.

★ கே. சின்னராஜு–ராஜபாளையம்

சில கல்லூரிப் பெண்களுக்கு மஞ்சள் பூசாததால்தான் மீசை முளைக்கிறது என்று என் நண்பர் ஒருவர் கூறுகிறார். உண்மையா?

● உண்மை அல்ல. மஞ்சள் பூசாததால்தான் மீசை முளைக்கிறது என்றால் மஞ்சளை தொட்டும் பார்க்காத மேலை நாட்டுப் பெண்களுக்கும் தாடி மீசை முளைத்திருக்க வேண்டும் அல்லவா? உடம்பில் உள்ள ஒரு வகை 'ஹார்மோன்'களால் தான் ஆண்களுக்குமீசை முளைக்கிறது. அந்த வகைஹார்மோன்கள் பெண்களுக்கு இல்லாத தால் அவர்களுக்கு மீசை முளைப்பதில்லை.

★ எம். நவநீதகிருஷ்ணன்–வரகூர்

நான்சென்னையில் வந்துபடித்துவிட்டு என் கிராமத்திற்குபோகும் போது கட்டை வண்டியில் சென்றேன். ரோடு மோசமாக இருந்ததால் வண்டி மேடு பள்ளங்களில் ஏறி இறங்கும் பொழுது ஆடி ஆடி என் முதுகே ஒடிந்து விடும் போலாகி விட்டது.

● தவறு, ரோட்டின்மீது மட்டுமல்ல. நீங்கள் போகும் போது வில் இல்லாத வெறும் கட்டை வண்டியில் போயிருக்கிறீர்கள். ஏன்என்றால் வில் வண்டியில் சென்றால் பாதை மேடு பள்ளமாக இருந்தாலும் இவ்வளவு அதிர்ச்சியைத் தராது.

★ க. முத்துவேல்–தஞ்சை.

நான் ஒரு அரசியல் பேச்சாளியாக வேண்டுமென்றால் என்ன செய்ய வேண்டும்?



● காங்கிரஸ் பேச்சாளியாக வேண்டுமென்றால் கைகளை மறைக்கும் கதர் ஜிப்பா போட்டுக்கொண்டு "காந்திஜி, ஐந்தாண்டுத் திட்டம்" என்பவைகளையும் கழகப் பேச்சாளியாக வேண்டுமென்றால் மஞ்சள் சில்க் சட்டையும் ஜரிகை வைத்து இழைத்த கைத்தறி ஆடையும் போட்டுக் கொண்டு 'அண்ணா, ஜனநாயகம்' என்ற வார்த்தைகளையும் அடிக்கடிப் பயன்படுத்தத் தெரிந்து கொண்டிருக்க வேண்டும்.

★ கே. பத்மினிதாஸன்—மதுரை.

நம்முடைய நடிகர்கள் ஏன் இவ்வாறு ஒருவரோடு ஒருவர் பகைத்துக் கொண்டு வெவ்வேறு வழிகளிலே சென்று கொண்டிருக்கிருர்கள்?



● நம்முடைய நடிகர்கள் வெவ்வேறு வழிகளிலே செல்லுகிருர்கள் என்று உமக்கு யார் சொன்னது? கோடம்பாக்கம் பெரிய கேட் வழியாகச் சென்ருல் நிற்க வேண்டியிருக்கிறது என்று அவர்கள் அனைவரும் இப்பொழுது சின்ன கேட் வழியான ஒரே வழியில்தானே சென்று கொண்டிருக்கிருர்கள்!

★ ஜி. சங்கர்—சென்னை.

குள்ளமாக இருப்பவர்களுக்கு அறிவும் குறைந்திருக்கும் என்று என் நண்பர் ஒருவர் கூறுகின்ருர். உண்மையா?

● உண்மை அல்ல. உடம்பில் 'பிட்டுட்டரி' என்ற சுரப்பி சரியாக வேலை செய்யாததால் தான் பெரும்பாலும் குள்ளர் ஆகிருர்கள். இதற்கும் அறிவு வளர்ச்சிக்கும் ஒருவித சம்பந்தமும் இல்லாததால் குள்ளமாக இருப்பவர்கள் நெட்டையாக இருப்பவர்களைப் போலவே சராசரி அறிவு வளர்ச்சி உள்ளவர்களாக இருக்கிருர்கள். இன்னும் கூறப்போனுல் குள்ளமாக உள்ளவர்கள் நெட்டையாக உள்ளவர்களைவிட அதிக தந்திரசாலிகளாக இருக்கிருர்கள். அதனுல்தான் குள்ளமான கசா வபூ நெட்டையான ஆமுரவையே தந்திரத்தால் கொன்று விட முடிந்தது.

★ ஆர். சீத்தாராமன்—புதுக்கோட்டை

நான் வீட்டைப் பூட்டி விட்டு வெளியூர்சென்றிருந்தேன். வெளியில் இருந்து தூசிகள் ஏதும் உள்ளே வராதபடி வீட்டை நன்ருக பூட்டி விட்டுச் சென்றேன். அப்படி இருந்தும் நான் திரும்பி வந்து வீட்டைத் திறந்து பார்த்தபோது அது ஒரே தூசியாக இருந்தது. இது ஏன்?

● நீங்கள் வீட்டை நன்ருகப் பூட்டி விட்டதால் வெளியில் இருந்து காற்ருே அல்லது தூசியோ உள்ளே செல்லஇயலவில்லை. ஆனுல் நீங்கள் வீட்டைப் பூட்டும்பொழுது உள்ளே நிறைந்திருந்ததே அந்தக் காற்றில் உள்ள தூசிகள்தான் படிப்படியாகக்கீழேஇறங்கி வீட்டை குப்பையாக்கி விட்டன.

★ வே. சின்னமலை-ஸ்ரீரங்கம்.

நம்முடைய முன்னணி நடிகர்களுக்கும் நடிகைகளுக்கும் கயிறு இழுப்புப் போட்டி நடத்தினுல் அதில் யார் வெற்றி பெறுவார்கள்?

● திருவாரூர்த் தேர் போல உடல் வனப்பில் குறையாமல் இருக்கும் நம்முடைய நடிகைகள்தான். ஆனுல் தங்களுடைய பலவீனத்தால் அவர்களிடம் தோற்றுப்போன நடிகர்கள் "பெண் என்ருல் பேயும் இரங்கும் அல்லவா? அதனுல்தான் விட்டுக் கொடுத்தோம்" என்று வீராப்புப் பேசிக் கொள்ளுவார்கள்.

★ வே. கவிஞர் முத்துஎழிலன்—
முகவை.

நான் ஒரு கவிஞன். பத்மினிக்கு என்னுடைய பாமாலையை சூட்டலாம் என்று கருதுகிறேன்?



● பூமாலை சூட்டுவதற்கே டாக்டர் ராமச்சந்திரன் வந்துவிட்ட பிறகு உம்முடைய பாமாலையைக் கேட்க அவருக்கு நேரம் எங்கே இருக்கப் போகிறது கவிஞரே!

★ கே, எஸ். முத்து—சிதம்பரம்

உலகத்திலேயே அதிகமான மழைபெய்யும் இடம் இந்தியாவில் உள்ள சிரபுஞ்சிதானே?

○ இல்லை. இயற்கை மழை பொழியும் சிரபுஞ்சியில்கூட வருடத்திற்கு 1041 இஞ்சுமழை தான் பெய்கிறது. ஆனால்அமெரிக்காவிலோ, நியூயார்க்கிற்கும் வாஷிங்டனுக்கும் இடைப்பட்ட செயற்கை மழை பொழியும் ஒரு இடத்தில் விஞ்ஞானிகள் ஆண்டிற்கு 1200 இஞ்சு செயற்கை மழையையே பொழியச் செய்கிறார்கள்.

★ ர, சித்தையன்—ராங்கியம்

நம்முடைய நாட்டிற்கும் இங்கிலாந்திற்கும் என்ன வித்தியாசம்?

● நம்முடைய நாட்டில் சிறிது செல்வாக்கு வந்துவிட்டதுமே உடல் உழைப்பைக் கேவலமாகக் கருதி விடுகிறார்கள். ஆனால் இங்கிலாந்திலோ அவர்களுடைய பெருமைக் குரிய அரசியாரே யுத்த காலத்தில் பிரதேசப் படை ஒன்றில் மோட்டார் கார்களை ஓட்டுவது—இயந்திரங்களைத் துடைப்பது போன்ற கடின வேலைகளை ஏற்று, அதிகாரிகள் புகழும்படி அவற்றைச் செம்மையாகவும் நிறைவேற்றி வந்துள்ளார். அதேபோன்று அவருடைய துணைவரும் தொழிற்சாலையில் பணியாற்றி 'பாய்லர் — டிரிம்மர்' சான்றிதழ் பெற்றிருக்கிறார்.

★ வி. ஜே. குமார்—விருத்தாச்சலம்

அமெரிக்காவில் நடந்தது போல ரேடியோவைப் பயன்படுத்திக்கொள்ளும்வாய்ப்பு நம்முடைய அரசியல் கட்சிகள் அனைத்திற்குமே தரப்படுமா?



● அமெரிக்கா அரசியலில் பண்பட்ட நாடு. அங்கு தேர்தல் வரும்பொழுது கொள்கைகள் தான் மோதுமே தவிர ஆட்கள் மோதமாட்டார்கள். தனிப்பட்டவர்களின்மீது அவதூறு கிளப்பப்படாது. ஆனால் மாற்றுக் கட்சிக்காரர்களின்மீது வசை பாடுவதையே தங்களுடைய கட்சிக் கொள்கையாகக் கொண்டவர்கள் நிறைந்த இங்கோ இரண்டு கட்சிக்காரர்கள் வானொலி ஒலிபெருக்கி அறையிலே சந்தித்தால் அங்கு பேச்சு நடக்காது. ஒருவரை ஒருவர் காரசாரமாகத் தாக்கிக் கொள்ளும் ஏச்சுதான் நடக்கும்.

★ ஆர். வெங்கட்ராமன்—கோடம்பாக்கம்.

நம்முடைய நடிகைகளுக்கு பாதி செட்டில் திடீரென்று ஒற்றைத் தலைவலி வருகிறதே அது எதனால்?

● பகலைப் போன்றே இரவிலும் ஓய்வு இல்லாததால் இருக்கலாம். அல்லது படத் தயாரிப்பாளரிடம் இருந்து கரும் பணத்தை கறக்க அது ஒரு புது வழியாகவும் இருக்கலாம்.

★ நா. கெஜலட்சுமி-புரசை

பழங்காலத்தில் குளிர் சேமிப்பு பெட்டி தமிழகத்தில் இருந்ததா ?

● குளிர் சேமிப்பு பெட்டியில்லை என்றாலும் காற்றுஅடக்கமான இடத்தில் பொருள்கள் அதிக நாள் கெடாமல் இருக்கும் என்பதை உணர்ந்துகொண்டிருந்த தமிழர்கள் மூங்கிலை குடைந்து அதனுள் மதுவை நிரப்பி நன்றாக மூடி நீண்ட நாட்களுக்குப் பாதுகாத்து வந்தனர்,

★ கோ.வி.ம.சேகரன்-கொல்லம்

பாரதியாரைப் புகழும் சிலர் அவருடைய தாஸனை ஏன் புகழ மறந்து விடுகிறார்கள்?

● பயிர் நன்றாக இருந்தாலும் அது விளைந்திருப்பது பங்காளியின் கழனியில் அல்லவா ?

★ நா. ருத்திரமூர்த்தி-புலியூர்

ஹாமர்சேல்ட்டை ரஷ்யா கழுத்தைப் பிடித்துத் தள்ள முயற்சி செய்வது பற்றி தங்களுடைய கருத்து என்ன?

● எப்போது தன்னைப்பற்றிஒரு சாராருக்கு ஐயம் ஏற்பட்டதோ அப்போதே தன்னுடைய பதவியை ராஜினாமா செய்து விடுவது தான் ஹாமர்சோல்டைப் போன்ற நேர்மையாளர்களுக்கு அழகு.

★ எம். உலகநாதன்-பிரம்பை

ஐக்கிய நாட்டுச் சபையை ஒரு ஜனநாயக ஸ்தாபனம் என்று ஏற்றுக் கொள்ள முடியுமா?

● நிச்சயமாக முடியாது, ஏன் எனில் அதில் உள்ள வல்லரசுகளுக்கு எந்தத் தீர்மானத்தையும் ரத்து செய்யும் சர்வாதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

★ கே. எஸ். அமலா-ஆமதாபாத்

சரோஜாதேவிக்கு திருமணப் பருவம் வரவில்லையாமே ?

● அவருக்கு வந்து விட்டது. ஆனால் அவருடைய 'பாங்கு பாலன்ஸ்'சிற்கு'த்தான் இன்னும் திருமணப் பருவம் வரவில்லை.

★ எம். கருணாநிதி—சென்னை-4

இறந்து போன லுமும்பாவின் பிணத்தைக்கூட ஏன் சோம்பே கொடுக்க மறுக்கிறார்.

● ஆயிரம் லுமும்பாக்கள் பேசியும் சாதிக்க இயலாத ஒன்றை படுகொலைக்கு ஆளான அந்தச் சுதந்திர வீரனின் பேசாத பிணம் சாதித்து விடும்—ஏற்கெனவே குமுறிக்கொண்டிருக்கும் லுமும்பா ஆதரவுப்படைகள் அந்தப் பிணத்தைப் பார்த்ததுமே கடாங்காவை அழித்து ஒழித்து விடும் என்ற அச்சத்திலேயே லுமும்பாவின் பிணத்தைக்கூட கொலை வெறியர்கள் கொடுக்கமறுக்கிறார்கள்

★ கே. வசந்தா-வில்லிவாக்கம்.

நம்முடைய திரையுலகிற்கு இப்போது தேவையானது என்ன?



● பணம். அதுமட்டும் இருந்துவிட்டால் கோடம்பாக்கம் ஹாலிவுட்டையும் மிஞ்சிவிடும்.

பையன்களும், பெண்களும் தேவை

புகழ்பெற்ற ஒரு டைரக்டரால் டைரக்ட் செய்யப்படவிருக்கும் ஒரு இந்திய திரைப் படத்திற்கு, ஆர்வமும், திறமையும் உள்ளவர்களுக்குப் பொன்னான சந்தர்ப்பம், பிரகாசமான எதிர்காலம். டில்லி, சென்னை, கல்கத்தா, பம்பாய் மற்றும் 25 இடங்களில் பேட்டிகள் தரப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பு இரண்டு வருஷங்கள் ஒப்பந்தம் கட்டாயமானது. நேரடியாக அணுகவேண்டாம். விண்ணப்பிக்கவும்.

SCREEN ART PRODUCTIONS,

Film Producers, (K.M.) AMRITSAR-42

60

ஆண்டுகளாக

பெண்மையுடன்

உள்ளதோர்

அதியற்புத

உறவு



லோத்ரா

மாதர்களின

ஆரோக்கியத்திற்கும்

ஆனந்தத்திற்கும்

கேஸரி குடீரம்

பிரைவேட் லிமிடெட்

ராயபேட்டை, சென்னை-14

SISTA'S

Agents Tamilnad M/s SEETHARAMA GENERAL STORES, West Tower Street, Madurai.

அருமையான புத்தகங்கள்

117 படங்கள் கொண்ட அட்டவணை மூலம் நீங்கள் மெக்கானிக் ஆகலாம். நீங்கள் ரூ. 15/-க்கு ஒரு ரேடியோ தயார் செய்து மின்சாரத்தைப்பற்றி நன்கு அறியலாம். ரேடியோ ரிப்பேரிங், ஒயரிங், எலக்டிரிகல் மெக்கானிஸம் இன்னும் பல விஷயங்கள் அடங்கியது. விரிவான புதிய பிரசுரம் ரூ.6/- டெய்லரிங். கட்டிங் [படங்களுடன்] ரூ. 4/- சோப்பும் வாசனை திரவியங்கள் செய்யும் விதம் ரூ. 4/50. போட்டோ கலை ரூ. 3/: படங்கள் வரைவது ரூ. 3/- பூ தையல்வேலை ரூ.4/- ஹிந்திபோதினி ரூ. 4/-

அருமையான ஸெக்ஸ் புத்தகங்கள்

பெண்ணைவசியம் செய்வது ரூ. 4/- கொக்கோகம் ரூ. 3/- காமசூத்திரம் [படங்களுடன்] ரூ. 6/. குடும்பக் கட்டுப்பாடு ரூ. 6/- ரதிசாஸ்திரம் ரூ. 3/- ஸெக்ஸ்வாழ்க்கை ரூ. 3/- ஸெக்ஸ் அவயவங்களின் 325 படங்கள் (அமெரிக்கன் வெளியீடு) ரூ.5/- தேன் நிலவு ரூ. 3/- ஆண் பெண் ஸெக்ஸ் புதிர்கள் [2 பாகங்கள்] ரூ. 5/- காதல் செய்யும் கலை ரூ. 3/- அழகியமங்கைகள் 150 படங்கள் ரூ. 7/- மணவாழ்க்கையின் இன்பங்கள் ரூ. 4/50- மணவாழ்க்கை 88 படங்களுடன் ரூ. 5/- பருவமங்கை ரூ. 3/- இரகசியக் காதல் கடிதங்களும் பதில்களும் ரூ.3/50- படுக்கையறைப்படங்கள் 3 பாகங்கள் ரூ.6/.

வி. பி. சார்ஜ் புத்தகம் ஒன்றுக்கு ரூ. 1/- மூன்று புத்தகங்களுக்கு ரூ. 1/50.

Correspondence in English only

Add :

Sulekha Book Depot (KA)

Phapala, Aligarh (India)

சென்னைக்கு வந்த சென்னப்பன்

[" சென்னப்பன் "]

அடடா! என்ன கூட்டம்! என்ன கூட்டம்! பட்டிக்காட்டான் யானையைப் பார்த்த மாதிரீன்னுவாங்களே அந்த மாதிரி இல்லே இந்தப் பட்டணத்துக்காரங்க ராணியைப் பார்க்க பொரச்சுட்டாங்க.

அட! தீபாவளிக்கு வந்த தாச்சே. சும்மா மெட்ராஸை ஒரு ரவுண்டு அடிச்சுட்டு ராணியையும் பாத்துட்டு வரலாமுன்னு வந்தா இந்தத் தடவை சோறு தண்ணிக்குக் கூட ரொம்ப கஷ்டமாப்போயிருச்சு. எந்தஓட்டல்லே போயி கேட்டாலும் இடமில்லேனுட்டான். அட இடம்தான் கிடைக்காட்டி போகுது, ஒரு வேளை சோத்துக்காவது வழி உண்டா? என்றால் அதுக்குக் கூட இல்லேன்னு கையை விரிச்சிட்டான். அதனாலே மறுநாள் சாயந்திரம் வந்த ராணியைப் பார்க்கிறதுக்கு நான் முதல் நாள் சாயந்திரத்திலே இருந்தே பட்டினி கிடக்க வேண்டியதாப் போச்சு. வேறு எதுன்னாலும் நான் பொறுத்துக்கிட்டிருந்து விடுவேன்; ஆனா, இந்தப் பசியை மட்டும் நம்மால் பொறுத்துக் கொள்ள முடியாது. பட்டினி கிடக்க வேண்டும் என்று தெரிந்திருந்தால் இந்தராணி மாதிரி பத்து ராணி வர்ரதா இருந்

மீனம்பாக்கம் விமான நிலையத்தில் கோமகளையும் கோமகனையும் கவர்னர் மேதி வரவேற்கின்றார்

முருகப்பா தொழில் நிலையங்களுக்காக பாலு சகோதரர்கள் போட்டுத் தந்த பிரம்மாண்டமான வரவேற்பின் வழியாக ஊர்வலம் செல்கிறது

தாலும் கூட, நான் பட்டணம் பக்கம் தலையே வச்சு படுத்திருக்க மாட்டேன்.

ஆனாலும், ராணியைப் பார்த்தபோது என் அசதி எல்லாம் காத்திலே பறந்து போயிடுச்சு. சாந்தமும் அமைதியும் தவழும் அந்த சுந்தரப் பொன் முகத்தை இன்னும் கொஞ்சம் பார்க்கமாட்டோமா என்றிருந்தது. அதற்குள் எனக்குப் பின்னால் இருந்த கூட்டம் முண்டி அடிச்சு என்னைப் போலீஸ் ஐயா ஒருத்தரு கிட்டே தள்ளிடுச்சு. அவ்வளவுதான்; அவர் ஒரு கோபப்பார்வை பார்த்ததுலே பயந்து போன நான் அவருடைய கையிலேஇருந்த தடிக்குப் பயந்து பின்னுக்குச் சென்று விட்டேன்.

இது கிண்டி ஏரப்பிளேன் பொட்டலுக்கு அருகிலேயே நடந்திருச்சு. அங்கே ராணியைச் சரியா பார்க்காததை மவுண்ட்ரோட்டிலே பார்த்திடலாமுன்னு நான் விழுந்தடிச்சுக்கிட்டு ஒரு டாக்ஸியைத்தேடினேன். அப்பப்பா! அன்னைக்கு மெட்ராசுலே டாக்ஸியா ஓடுச்சு? இருந்த டாக்ஸிகளிலே பாதிக்கு மேலே வெளியூரிலே இருந்து வந்திருந்த போலீஸ் ஆபீசருங்க எடுத்துக் கிட்டாங்க; மீதி இருந்த பாதி டாக்ஸியிலே டாக்ஸி டிரைவர்கள் தங்கள் சொந்தக் குடும்பத்தையே ராணியைப் பார்க்க ஏத்திக்கிட்டு வந்திட்டாங்க! டாக்ஸிதான் கிடைக்கல்லே; நடந்தாவது ராஜாஜி ஹாலு



கடமை வீரர் காமராஜர், காமன்வெல்த் தலைவிக்கு அறிமுகப்படுத்தப்படுகிறார்

குப்போயிடுவோமுன்னு நான் நடையைக் கட்டினேன்.

அப்பப்ப...! அன்னைக்கு சென்னை நகரம்தான் எவ்வளவு அழகாக இருந்திச்சு. விமான நிலையத்தை விட்டு ராணி ஊருக்கு வந்ததுமே முருகப்பா குரூப் கம்பெனிகளுக்காக பாலு சகோதரர்கள் போட்டுக் கொடுத்த மிகப் பெரிய அலங்காரவளைவு ராணியையும் கோமகனையும வருக! வருக...!! என்று வாழ்த்துக் கூறிவரவேற்றது! அதற்குப் பிறகு வரிசை வரிசையா ராணி பவனி சென்ற அந்த 19 மைல் ஊர்வலத்தில் 49 அலங்கார வளைவுகள் அந்த அரச தம்பதிகளுக்கு வாழ்த்துக் கூறின.

ஒவ்வொன்னையும் பார்த்துக்கிட்டே வர்ரப்போ ஏஜி. ஆபீஸ் வந்ததும் என் கண்கள் ஒரு கணம் குத்திட்டு நின்றன. அங்கேஎதிர்த்தாப்பிலே இருந்த பாலு சகோதரர்களின் கலை ஆபீஸ் விளக்கு வெளிச்சத்திலே ஜெகஜ்ஜோதியா தெரிஞ்சதோடு அசோகச் சக்கரக் கொடியும், யூனியன் ஜாக் கொடியும் காற்றிலே அசைந்து, வரப்போகின்ற காமன்வெல்த் தலைவிக்கு வாழ்த்துக் கூறிக்கிட்டு இருந்திச்சு.

அதைத் தாண்டி கொஞ்ச தூரம் போனதும் நடுரோட்டிலேயே ஒரு கருங்கல் கோயில் வந்து நின்னுக்கிட்டு இருந்துச்சுபக்கத்திலேபோயி பார்த்த பிறகு தான் அது கருங்கல் இல்லே. ஜெமினி ஸ்டுடியோ தன்னுடைய மோல்டிங் கலைஞர்களுடைய

உதவியோடு போட்ட அலங்கார வரவேற்பு வளைவுன்னு தெரிஞ்சிச்சு. அதனுடைய அழகைச் சற்றுநேரம் பருகிக் கொண்டிருந்து விட்டு ராணி ராஜாஜி ஹாலிற்கு வந்து விட்டால் என்ன செய்வது என்று மீண்டும் ஓட்டமும் நடையுமா மவுண்ட் ரோட்பக்கம் பறந்தேன்.

அப்படிப் போகும் போது தூரத்திலே கண்ணுக்குப் பச்சைப் பசேல்னு ஒன்று தெரிஞ்சிச்சு. நடு ரோட்டிலே இது என்ன செடி முளைச்சிருக்கேன்னு ஓடிப் போயி பார்த்தால் அது மக்ரினெட் கம்பெனிக்காரங்க பச்சைத் தென்னை ஓலையிலேயே முடைஞ்சு போட்ட புதுமையான அலங்கார வளைவுன்னு தெரிஞ்சிச்சு.

அதையும் தாண்டினஸ்பென்ஸர் வந்திச்சு. அங்கே வளைவு இருந்திச்சு. இருந்தும் அது எதிர்பார்த்தபடி இல்லாததினலே அதை ஒரே மூச்சிலே தாண்டிக்கிட்டுமவுண்ட் ரோடுக்கு வந்தேன். ஆஹா! அங்கேதான் என்ன அழகு. என்ன கூட்டம். இது வரை ஓடிஓடி வந்துக்கிட்டிருந்த நான் ரவுண்ட்டாணு நெருங்க நெருங்கக் கூட்டத்தோடு கூட்டமாக நகரத் தொடங்கினேன்.

அப்போ புதுசா கட்டின மவுண்ட் ரோடு போஸ்டாபீஸைபார்த்தபோது எனக்கு நாம் பார்ப்பது இந்திரலோகமான்னுகூட சந்தேகமாப் போச்சு. என்ன வானவில்லைப் போல ஏழு வர்ணங்களை வாரி இறைச்சுக்கிட்டிருந்த அந்தக் கட்டிடத்தோட அழகைப் பார்த்த போது காலையிலே இருந்து சாப்பிடாமே இருந்த என் பசிகூட ஆறிப் போச்சு.

சென்னை மேயர் முனிசாமி அவர்கள் அரசியார் அவர்களை வரவேற்கிருர்கள்



பல்கலைக்கழகத்தின் சார்பாக துணை வேந்தர் இலட்சுமணசாமி முதலியாரவர்கள் அரசியாரவர்களுக்கு பாராட்டுப் பத்திரம் அளிக்கிறார்கள்

அப்படி இப்படின்னு ஒரு வழியா முக்கி அடித்துக் கொண்டு நான் ராஜாஜி ஹாலுக்கருகில் வருவதற்கும் ராணியின் ஊர்வலம் வருவதற்கும் சரியாக இருந்தது ராணி ராஜாஜி ஹாலுக்குள்ளே போகும் போது சரியாப் பார்க்க முடியல்லேன்னாலும் ராஜாஜி ஹாலிலே இருந்து திரும்பும்போது அவரை திருப்தியாக பார்க்க முடிஞ்சிச்சு. ஏன்னா இந்தியாவிலேயே பேர் போன நம்ப போலீஸ்காரங்க அதுக்கு ஏத்த வகையிலே ஏற்பாடுகளை ஒழுங்கு பண்ணி இருந்தாங்க.

ராஜாஜி ஹாலில் நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் சென்னை நகரம் பற்றிய ஏடு ஒன்றை அரசியாருக்கு விளக்குகிறார்கள்





ராணியாரின் அரசபவனி மவுண்ட்ரோட்டில் உள்ள பாலு சகோதரர்களின் கலைக் காரியாலயத்தின் வழியாகச் செல்லுகின்றது

எவ்வளவு அழகா நம்முடைய அதிகாரிங்க கூட்டத்தை ஒழுங்குபடுத்தி இருந்தாங்க. அதைப்பார்த்தபோது உண்மையிலே எனக்கு தோளெல்லாம் பூரிக்கிறதுமாதிரி இருந்துச்சு ஏன்னா இந்தியாவிலே இதுவரை அரசிக்கு கிடைக்காத அரச வரவேற்பைக் கொடுத்து தமிழன்என்றொரு இனம்உண்டு தனியே அவர்க்கு ஒரு குணமுண்டு என்பதைக் காட்டிவிட்டோமல்லவா? இப்படி எல்லாம் நான் கற்பனையிலே மிதந்துக் கிட்டிருந்தால் ராணி போய் வெகுநேரம் வரையில் மவுண்ட் ரோட்டில் கலைந்துபோன கூட்டத்தை வேடிக்கை பார்த்துக்கிட்டே இருந்திட்டேன். எனக்கு சுய உணர்வு வந்தபோது மணியைப் பார்த்தா அது பத்துன்னு காட்டிச்சு. அய்யோ இன்னிக்கும் பட்டினிதானா என்று எதிரே இருந்த ஒட்டலிற்கு ஒடினேன். நான் போனபோது ஒட்டலில் வியாபாரம் முடிந்து ஒட்டலைக் கழுவி விட்டுக் கொண்டிருந்தார்கள். சரி இன்னும் சென்னையில் இருந்தால் ஆபத்து என்று கருதிக் கொண்டு அப்போதுதான் வந்த வெளியூர் பஸ்ஸில் ஏறி என் ஊரைப்பார்க்க ஓடினேன்.

சென்னப்பன்

உலகம் பலவிதம்

நியூ ஆர்லியன்ஸில் ஒரு குடியானவனிடம் இருந்து அவனுடைய வக்கீலிற்கு கீழ்க்கண்ட விசித்திரமான கடிதம் வந்தது.

"அன்புள்ள ஐயா! காலையில் என் கடைசிப் பையன்மீது MKZ901 என்ற எண்ணுள்ள கார் மோதிவிட்டது. முதலில் இந்தக்கார் ஒரு பணக்காரருக்குச் சொந்தமானதா என்று கண்டு பிடித்து பணக்காரருடையதாக இருந்தால் உடனே அவர் மீது வழக்குப்போடுங்கள். இப்போது பையனுக்கு அதிக அடியில்லை. ஆனால் கார் பணக்காரருடையதாக இருந்தால் நானே சுத்தியால் பையனுடைய தலையில் அடித்துக் காயப்படுத்திவிடுகிறேன்."

∴ ∴ ∴

இங்கிலாந்தில் ஒரு விதவையை தன்னுடைய கடையில் இருந்த கூடை ஒன்றைத் திருடிவிட்டதாகக் கடைக்காரன் வழக்குப் போட்டான். ஆனால் அதற்கு அவளோ தான் கூடையைத் திருடவில்லை என்றும், கூடையில் தயதுசெய்து எடுத்துக்கொள்ளுங்கள் என்று எழுதி இருந்ததாலேயே தான் அதை எடுத்துக் கொண்டதாகவும் வாதாடினாள். அவளுடைய வாதத்தை ஏற்றுக் கொண்ட நீதிபதியும் அவளை விடுதலை செய்தார்.

∴ ∴ ∴

வடக்கு கரோலினாவில் கைதி ஒருவனுக்கு நீதிபதி 13 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதித்துத் தீர்ப்புக் கூறியபோது "ஐயோ பதின்மூன்று கெட்ட நம்பர் அல்லவா தயவுசெய்து அதை மாற்றிவிடுங்கள்" என்று கைதி கெஞ்சினான் அதற்கு ஏற்ப நீதிபதியும் அவனுடைய தண்டனையை 12 ஆண்டுகளாகக் குறைத்தார்.

∴ ∴ ∴

ஒருமுறை நீப்ராஸ்கா என்ற ஊரில் தன்வீட்டு வாசலிலே நின்றுகொண்டிருந்த ஒரு வாத்தைக் கொல்லுவதற்காக ஒருவன் தன் துப்பாக்கியை எடுத்தான். ஆனால் அதற்கு அவனுடைய மனைவியோ நகர எல்லைக்குள் சட்டப்படி வேட்டையாடக்கூடாது என்று கூறித் தடுத்துவிட்டாள். உடனே ஒரு காரில் அந்த வாத்தை ஏற்றிக்கொண்டு சென்ற அவன் நகர எல்லையைத் தாண்டியதும் அதைச் சுட்டுக்கொன்றான்.

• பாலு பிரதர்ஸ் ஆர்ட் பிரிண்டர்'ஸில் திரு. எஸ். நடராஜன் அவர்களால் அச்சிடப்பட்டு, 109 டி. -6 மவுண்டு ரோட்டில் உள்ள பாலு சகோதரர்களின் வெளியீடுகளுக்காக ஓவியர் அ. பாலு அவர்களால் வெளியிடப்பட்டது. ஆசிரியர் ஓவியர் அ. சீனு.

புகையிலையிலேயே மிக உயர்ந்தது!

செடி மார்க்

சிவபுரி புகையிலை

சிவபுரி புகையிலை (பிரைவேட்) லிட்,

ந்தி: புகையிலை. சிதம்பரம் போன்: 154.

REGD: NO. M.7033
REGISTERED AS A NEWSPAPER IN CEYLON

கலை

மார்ச்• 61 ....விலை 75 காசு